# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 028 வள்ளுவர் ஆண்டு: 2045

மார்கழி 09, புதன்கிழமை 24.12.2014


**வானிலை**

மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளை மழை பெய்யக் கூடும்.

## திஸ்ஸவுக்கு எதிராக ரணில் முறைப்பாடு

கொழும்பு, டிசெ.24
சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட ஒப்பந்தத்தில் போலியாகத் தனது கையொப்பம் இடப்பட்டுள்ளது என்று தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பக்.24

## பாலசந்தர் காலமானார்



சென்னை, டிசெ 24
தமிழ் திரைப்பட இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் சென்னை மருத்துவமனையில் நேற்றுக் காலமானார். உடல் நலம் பாதித்து சிகிச்சை பெற்று வந்த பாலசந்தர் உயிர் நேற்று மாலையில் பிரிந்தது. நாடகத்தில் இருந்து திரைத்துறைக்கு வந்த பாலசந்தர் 100 படங்களை இயக்கியுள்ளார்.

பக்.26

# வடக்கில் 60 சதவீத வாக்கு பதிவு

### முன்னைய தேர்தல்களை விடவும் வாக்களிப்பில் இம்முறை ஆர்வம்





யாழ்ப்பாணம், டிசெம்பர் 24
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமான நிலையில், வடக்கில் 60 சதவீதமான வாக்குப் பதிவு முதல் நாளன்றே நடந்துள்ளது என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த தேர்தல்களை விடவும் இந்த முறை தபால் மூல வாக்களிப்பின் முதல் நாளிலேயே

பக்.26

## வாக்களிப்பு வடக்கில் சுமுகம்

கொழும்பு, டிசெ. 24
வடக்கு மாகாணத்தில் தபால் மூல வாக்களிப்பு நேற்று சுமுகமாக நடைபெற்றது. ஆனாலும் கொழும்பு நாரஹேன்பிட்டியவில், ஆளும் கட்சியினர் குழப்பம் விளைவித்தமை காரணமாக அங்கு வாக்களிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமானது. இந்த வாக்களிப்பு இன்றும் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தபால் மூல வாக்களிப்பு சுமுகமாக இடம்பெற்றுள்ளது. அத்துடன் வடக்கில், தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்ற சகல இராணுவ முகாம்களிலும் தேர்தல் அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அதனால் படைமுகாம்களிலும் எந்த வித அசம்பாவிதமும் இன்றி வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

வடக்கின் 5 மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் கொழும்பிலிருந்து வருகை தந்த 250 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஆகியோர் இணைந்து இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இறுக்கமான கண்காணிப்பில் வடக்கு தபால் மூல வாக்களிப்பு நேற்று சுமுகமாக நடைபெற்று முடிந்துள்ளது. அதேபோன்ற இறுக்கமான கண்காணிப்பிலேயே இன்றைய வாக்களிப்பும் நடைபெறவுள்ளது.

பக்.26

## மஹிந்த சிந்தனையை புறக்கணித்த ரட்ணசிறி

### தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் ஹக்கீமும் கலந்துகொள்ளவில்லை

கொழும்பு, டிசெ. 24
ஜனாதிபதி மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில், முன்னாள் பிரதமர் ரட்ணசிறி மற்றும் அமைச்சர் ஹக்கீம் ஆகியோர் மாத்திரம் பங்கெடுக்கவில்லை. ஏற்கனவே இவர்கள் பொது எதிரணிக்கு தாவவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலையிலேயே இந்த நிகழ்வில் பங்கெடுக்காமை, கொழும்பு அரசியல் வட்டாரத்தில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆதரவு தெரிவிக்கவுள்ளதாக அண்மைய நாள்களாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டுவருகிறது. ஆனால் அவர் இதுகுறித்து எந்தக் கருத்தையும் வெளியிடாமல் மௌனம் காத்து வருகிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், பண்டாரநாயக்க குடும்பத்தின் தீவிர விசுவாசியுமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அண்மைக்காலமாக மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவம் மீது அதிருப்தியடைந்திருப்பதாக கூறப்படுகிறது.

அதேவேளை, பொது எதிரணிக்கு தனது ஆதரவை நேற்று அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் இந்த நிகழ்வில் பங்கெடுக்கவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொது எதிரணிக்கு ஆதரவு தெரிவிக்கும்நிலைப்பாட்டை

பக்.26

## திஸ்ஸ கூறுவது முழுப் பொய்

கொழும்பு, டிசெ. 24
"திஸ்ஸ அத்தநாயக்க பொய் கூறுகின்றார். அவர் காண்பிப்பது போல் எந்தவொரு ஒப்பந்தமும், ஐ.தே.க. தலைவருக்கும், பொது எதிரணி வேட்பாளருக்கும் இடையில் செய்து கொள்ளப்படவில்லை." – இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

பக்.26

## பரீட்சை முடிவு 27ஆம் திகதி

கொழும்பு, டிசெ.24
நடந்துமுடிந்தக.பொ.த.உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 27 அல்லது 28 ஆம் திகதி

பக்.26

## எம்மை நோக்கி யாரும் கைவிரல் நீட்ட முடியாது

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 24
நாம் நாட்டைச் சூறையாட முற்பட்டோம் என்று எவரும் எம்மை நோக்கி கைவிரல் நீட்ட முடியாது. இலங்கை அரசியல் வரலாற்றில் எவராலும் மறக்க முடியாத ஒன்றாக மட்டுமன்றி, முதன் முதலாக நாம் மஹிந்த சிந்தனையை அடியொட்டி பெரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். கசினோ அனுமதிப் பத்திரத்தை வழங்காத சுத்தமான கைகள் என்னுடையது. – இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பக்.26

## சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தப்படலாம் இலங்கை

### அச்சம் வெளியிடுகின்றார் பீரிஸ்

கொழும்பு, டிசெ. 24
சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக இலங்கை நிறுத்தப்படும் ஆபத்து உள்ளது. ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடாவிட்டாலும், இது தற்போது சாத்தியம் – இவ்வாறு அச்சம் வெளியிட்டுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

மைத்திரிபால சிறிசேன, போர்க் குற்றச்சாட்டுக்கள் அவற்றுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு விளக்கம் கோரி வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பக்.26

## டெங்குத் தொற்றால் சிறுவன் உயிரிழப்பு

### உரிய மருத்துவ கவனிப்பு இன்மையால் பரிதாபம்

யாழ்ப்பாணம், டிசெ.24
யாழ். குடாநாட்டில் டெங்குத் தொற்று தீவிரமடைந்து வரும் நிலையில், நேற்றுமுன்தினம் டெங்குத் தொற்றால் 14 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றிருந்த நிலையில், ஈரல், சிறுநீரகம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுச் செயலிழந்த

பக்.26

## கூட்டத்தில் அடிதடி: த.தே.கூ. உறுப்பினர் மூவருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில், ஈ.பி.டி.பியினர் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று மக்கள் பிரதிநிதிகளுக்கு யாழ்.பொலிஸ் நிலையத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

பக்.26

## முடிவெடுக்க முடியாது திண்டாடுகிறது மு.கா.

### இன்னும் ஓரிரு தினங்கள் தேவையாம்

கொழும்பு, டிசெ, 24
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு இன்னும் ஓரிரு தினங்கள் தேவைப்படுகின்றது என்று கட்சி உயர்பீடத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹக்கீம் வீட்டுக்குச் சென்று நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

பக்.26

# செய்திகள்

# சீன உணவு தயாரிப்புகள் விற்பனைக்கு கட்டுப்பாடு

## அவற்றில் தமிழ் அறிவுறுத்தல் வேண்டும் என பாவனையாளர் அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.24
யாழ்ப்பாணத்தில் சீன உணவுகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் அவற்றில், நுகர்வோர் விளங்கிக் கொள்ளும் வகையில் தமிழ் மொழியில் உணவு உற்பத்தி திகதி மற்றும் சேர்மானங்கள் அடங்கிய 'லேபிள்களை' கட்டாயம் சேர்த்திருக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ்.வசந்தசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

"விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் சிறுவர்களுக்கான சீன உணவுகளில் விற்பனைத் திகதி மற்றும் சேர்மானம்,விலை என்பன குறிப்பிடப்படவில்லை. அவற்றில் சீன மொழிகளில் நிறுவனத்தின் பெயர் மாத்திரம் பொறிக்கப்பட்டிருப்பதால் அதனை வாசித்து விளங்கிக்கொள்வதற்கு நுகர்வோரால் முடிவதில்லை.

நுகர்வோர் தாம் கொள்வனவு செய்யும் பொருள்களின் தரம் மற்றும் பாவனை தொடர்பில் அறிந்து கொள்வதற்கும் விளங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் விவரங்கள் 'லேபிளில்' உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏற்கனவே மும்மொழிகளும் இடம்பெற வேண்டும் என வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உணவுப்பொருள்களில் கட்டாயம் விளங்கிக் கொள்ளக் கூடிய மொழி இடம்பெற்றிருப்பது அவசியம். இவற்றை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்"– எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, போலியான விலைப்பிரதியை ஒட்டிசலவைத் திரவங்களை யாழில் விற்பனை செய்த 3 விற்பனை நிலையங்களுக்கு எதிராக இந்த வாரம் வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டுள்ளது. குறித்த விற்பனை நிலையங்களில்சலவைத்திரவங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றால் அச்சிடப்பட்ட நியம விலையின்மேல் போலி விலைப் பிரதியை ஒட்டி சலவைத் திரவங்களை விற்பனை செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–14)



## ரயில் சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம்.டிசெ.24
ரயில் தண்டவாளம் வெள்ளத்தில் மூழ்கியிருந்தமையால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்த வடக்குக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன. வடக்குக்கான ரயில் பாதையில் தலாவ மற்றும் தம்புத்தேகமவுக்கு இடையில் தண்டவாளம் வெள்ளத்தில் மூழ்கி இருந்தமையால் பாதுகாப்பான தொடர் ரயில் சேவையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கொழும்புக்கான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா உட்பட்ட பிரதானரயில் நிலையங்களில் இருந்து 'கொழும்பு நோக்கிச் செல்லும் சேவைகள் அனைத்தும் அநுராதபுரம் நிலையம் வரையே சேவையில் ஈடுபட்டன. குறித்த ஒரு நாளில் மட்டும் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும் தற்போது ரயில் பாதையில் வெள்ளப் பாதிப்பு சீர்ப்படுத்தப்பட்டுள்ளதால் வழமையான ரயில் சேவைகள் இடம் பெற்றுவருவதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த–14)

## வெளிநாட்டவர் ஓமந்தையில் திருப்பி அனுப்பப்பட்டார்

கொழும்பு, டிசெ.24
ஐரோப்பிய நாடொன்றிலிருந்து வடபகுதிக்கு யாழ்தேவி ரயிலில் பயணம் செய்த வெளிநாட்டுப் பிரசை ஒருவர், உரிய ஆவணங்கள் இன்றிப் பயணித்தார் என்று தெரிவித்து ஓமந்தை சோதனைச் சாவடியில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பி.ப. 1.30 மணியளவில் ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வடபகுதியில் இருந்து கொழும்பு நோக்கி பயணத்தை மேற்கொண்டபோது இராணுவத்தினர் குறித்த நபரிடம் சில ஆவணங்களைக் கேட்டனர் என்றும் – அவை அவரிடம் இல்லாத நிலையில் இராணுவத்தினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டார் என்றும் – தெரிவிக்கப்படுகின்றது. (ற–402)

## மீனவர் சாவு

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தை சலப்பையாற்று ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றவேளை இடறி விழுந்து நீர்ச் சுழியில் அகப்பட்டு காணாமற்போயுள்ளார்.

கடற்படையினரின் உதவியுடன் அவரது சடலத்தைத் தேடும் பணி தொடர்கிறது. இதுவரை சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. தயான் (வயது–29) என்பவரே காணாமற்போயுள்ளார். குச்சவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை– மூதூர்சம்பூர்கூற்று பகுதியில் படகு கவிழ்ந்து காணாமற்போன அக்கரைச் சேனையைச் சேர்ந்த ஹ – ஸைன் பஹீல் (வயது–33) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (த–40)

## கட்சி அலுவலகம் மீது தாக்குதல்

கச்சாய் அம்மன் கோயிலுக்கு முன்பாக கடந்த வாரம் திறக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் கட்சி அலுவலகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–9)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றவர் கைது

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

கரவெட்டி, டிசெ. 24
துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 7வயது சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 47 வயதுடைய சந்தேக நபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க யாழ். சிறுவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சிறுமியை பக்கத்து வீட்டைச் சேர்ந்த சந்தேக நபர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயன்றதாகச் சிறுமியின் பெற்றோரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்தே சந்தேக நபர் நேற்றுமுன்தினம் நெல்லியடி பொலிஸாரால் துன்னாலை கிழக்குப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் நேற்று மருத்துவப் பரிசோதனைகளின் பின்னர் நெல்லியடி பொலிஸாரால் யாழ். சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மன்று சந்தேக நபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (த–109)

# விசேட தேவையுடையோருக்கு ரூ.448 மில். இவ்வருடம் செலவு

## சமூக சேவைகள் அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.24
சமூக சேவைகள் அமைச்சால் விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் உதவித் திட்டத்துக்கென இந்த வருடம் 448 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோர் தேசிய செயலகத்தால், நாட்டிலுள்ள விசேட தேவையுடையவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம்ரூபா உதவி தொகை வழங்கப்படுகின்றது. 2006ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட 13 ஆயிரம் பேர் உதவித் தொகை பெறுநர்களாகப் பயனடைந்து வருகின்றனர்.

மாதாந்தம் வழங்கப்படும் இந்த உதவித் திட்டத்தின் ஊடாக விசேட தேவைகளை உடையவர்கள் மருத்துவச் செலவு மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்கு உதவும் பொருட்டு சமூக சேவைகள் அமைச்சால் இந்த நலத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சமூக சேவைகள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டு மாதாந்தம் உதவித் தொகையைப் பெறுபவர்கள் தபாலகங்களில் உதவித் தொகையைப் பெறுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கென இந்த வருடம் 448 மில்லியன் ரூபா நிதி நாடளாவிய ரீதியில் உள்ள விசேட தேவையுடைய பயனாளிகளுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. (ற–14)

# மாகாண நிர்வாகத்துக்குள் சுகாதாரம் மற்றும் கல்வி

## அதற்கான நியதிச் சட்டங்கள் விரைவில் வட மாகாண சபையில்

யாழ்ப்பாணம், டிசெ. 24
சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களம் என்பவற்றைமாகாணநிர்வாகமுறையின் கீழ் செயற்படுத்தும், நியதிச் சட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையால் பல்வேறு நியதிச்சட்டங்கள்தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இவை விரைவில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன.அதற்குரியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சால் ஓர் நியதிச் சட்டமும், கல்வி அமைச்சால்இரண்டுநியதிச்சட்டங்களும் பேரவைச் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று அறிய முடிகின்றது. அதில் சுகாதார திணைக்களம், கல்வித் திணைக்களம் என்பவற்றின் நிர்வாக நடைமுறைகளை மாகாண சபையின் கீழ் செயற்படுத்தும் நியதிச் சட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களை கட்டுப்படுத்தும் நியதிச் சட்டம் மற்றும் முன்பள்ளி தொடர்பிலான நியதிச் சட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நியதிச் சட்டங்களே சபையில் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளன. (ற–5)

# மஹிந்தவுக்கு ஆதரவு கேட்டு யாழ்.பல்கலையில் கையெழுத்து

## ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்களிடம் ஜனாதிபதி மஹிந்தவுக்கு நல் வாழ்த்துக் கூறி கையொப்பம் வைக்குமாறு கோரி படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தவர்கள் எவரும் கையெழுத்திட மாட்டார்கள் என்று சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தடையின்றி அறிவை மேம்படுத்தவும், அபிவிருத்தியை மேம்படுத்தவும் அவருக்கு நல்வாழ்த்துக்கள் என்று எழுதப்பட்டு அதன் கீழ் கையெழுத்திட வேண்டும் என்று கூறி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குறித்த படிவம் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. குறித்த படிவம் பல்கலைக்கழகப் பீடாதிபதிகள் ஊடாகச் சகல துறைத் தலைவர்களுக்கும் துணைவேந்தரால் அனுப்பப்பட்டுள்ளது.

அவ்வாறுகையெழுத்திட்ட படிவத்தைப் பத்திரிகை அறிவித்தலாகப் பிரசுரிக்கத் தடை ஏதும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டே கையெழுத்திடுமாறு கோரப்பட்டுள்ளது.

அவர்கள் அவ்வாறு படிவத்தை அனுப்பியிருந்தாலும், தமது சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் அதில் கையெழுத்திடப் போவதில்லை என்று யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (த–4)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினர்கள் வழியில் தவிர்க்கமுடியாத சுபச் செலவுகளை சுமக்க நேரும். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பும் உண்டாகும். அது உங்கள் எதிர்காலத்துக்கு நல்ல அஸ்திபாரமாக இருக்கும்.

**இடபம்:** தொழில், வேலை, உத்தியோகம் ஆகியவற்றில் வெற்றி அடையலாம். உங்கள் உழைப்பும் நம்பிக்கையும் உங்களுக்கு முழுமையான பலனையும் திருப்தியையும் தரும்.

**மிதுனம்:** கடமைகளைக் காப்பாற்றுவீர்கள். மனதில் ஆறுதலும் நம்பிக்கையும் உண்டாகும். தொழில், வியாபாரம், உத்தியோகத்தில் பிரச்சினை இருக்காது.

**கடகம்:** கடந்தகாலத்தில் உங்களை விட்டுச் சென்றவர்கள் விரும்பிவந்து சேரும் நாள். உறவு பலப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. சுபநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**சிங்கம்:** சில அத்தியாவசிய தேவைகளுக்கு செலவு செய்ய பணப்பற்றாக் குறையை சந்திக்கலாம். ஒரு பிரச்சினை முடிந்ததும் இன்னொரு பிரச்சினை உருவாகலாம். ஆனாலும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**கன்னி:** எடுத்த காரியங்களில் உடனே வெற்றி ஏற்படும். சில காரியங்களில் தாமதமாக வெற்றி ஏற்படும். உங்கள் விடாமுயற்சிதான் உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். பழகும் நண்பர்களை எடைபோட முடியாது.

**துலாம்:** சில காரியங்கள் எதிர்மறையாக நடக்கும். பொதுவில் நீங்கள் இதுவரை எதிர்பார்த்த காரியங்கள் எல்லாம் இழுபறியாக நிறைவேறாமல் இருந்தாலும், ஏதோவொரு வகையில் எப்படியும் நடந்துவிடும் என்று நம்பிக்கை இருக்கும்.

**விருச்சிகம்:** பழகும் மனிதர்களின் வார்த்தைகளை நம்புவதா வேண்டாமா என்று சமயத்தில் சந்தேகம் ஏற்படலாம். இனிப்பும் கசப்பும் மாறிமாறி இன்றைய பலன்கள் இருக்கும்.

**தனுசு:** உங்கள் காரியங்களும் முயற்சிகளும் தங்குதடையின்றி நடைபெறும். நீண்டகால திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் அன்யோன்யமும் ஒற்றுமையும் ஏற்படும்.

**மகரம்:** பிரச்சினைகள் ஒருபுறம் கவலையை உருவாக்கினாலும் அதற்குண்டான தீர்வுகளும் கிடைக்கும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடவும். செய்த முயற்சிகளைத் தொடரவும்.

**கும்பம்:** வைத்தியச் செலவுகளும் விலகும். தொழில் துறையில் போட்டியாளர்கள் காணாமல் போவார்கள். தொழிலை லாபகரமாக நடத்தலாம். கடன்களையும் அடைக்கலாம். சிறிது சிறிதாக சேமிக்கலாம்.

**மீனம்:** தேவையற்ற விவகாரங்களை அடியோடு விலக்குவது நல்லது. குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் உண்டாகும். குடும்பத்தினர் வேண்டுவதை நிறைவேற்றி வைப்பீர்கள். அதனால் உங்கள் மரியாதை உயரும்.

## சோனாக்ஷி காட்டில் மழை



லிங்கா திரைப்படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிக்கு ஜோடியாக நடித்ததன் மூலம் தென்னிந்திய சினிமாவில் கால்பதித்துள்ள சோனாக்ஷி சின்ஹாவுக்கு பாராட்டுகளும் வாய்ப்புகளும் குவிகின்றன. புதிய தமிழ்த் திரைப்படங்களில் நடிக்க அவருக்கு பெரிய இயக்குநர்களிடமிருந்து அழைப்புகள் வந்தாலும், நல்ல கதைக்காக அவர் காத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

லிங்காவில் ராஜா லிங்கேஸ்வரன் பாத்திரத்தில் வரும் ரஜினியின் ஜோடி சோனாக்ஷி நடித்திருந்தார். ஹிந்திப் திரைப்படங்களில் தாராள கவர்ச்சியுடன் நடிக்கும் சோனா இந்தப் திரைப்படத்தில் பழங்கால தமிழ்ப் பெண்களைப் போல, ரவிக்கையில்லாமல் புடவை கட்டி நடிக்க வேண்டிய வேடம். அவரும் சிறப்பாக நடித்திருந்தார். அனுஷ்காவை விட சோனாவுக்கு ரசிகர்களிடமிருந்து ஏகப்பட்ட பாராட்டுகள் கிடைத்தன. இப்போது அடுத்தடுத்து பெரிய இயக்குநர்களின் திரைப்படங்களில் நடிக்க அவருக்கு வாய்ப்புகள் வந்துள்ளன. தனது அடுத்த திரைப்படமும் லிங்கா மாதிரி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதால், கதைகளைத் தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி வருகிறார் சோனா.

## ரிலாக்ஸா வாசியுங்க...

### வகுப்பின் கடைசி வரிசை மாணவர்கள் எதிர் முதல் வரிசை மாணவர்கள்......




1. முதல் வரிசையில உட்காந்து நீங்கள் நோட்ஸ் எடுப்பதற்காகவே பாடத்தை கவனிச்சிங்க, நாங்க நல்லா தூக்கம் வருமே என்று பாடத்தைக் கவனிச்சோம்.
2. வீட்டு வேலையை எழுதின உடனே முன்னாடி கொண்டு போய் ஆசிரியரிடம் நீட்டுவிங்க. நாங்கள் நண்பன் கொப்பியை கொப்பி அடிச்சிட்டு கொடுக்கின்ற வரை காத்திருப்போம்.
3. பரீட்சைக்கு என்ன கேள்வி வரும் என்று நீங்கள் யோசிச்சிட்டு இருக்கிறபோது, பரீட்சையே வராமல் இருக்க என்ன செய்யலாம் என்று நாங்கள் யோசிச்சிட்டு இருந்தோம்.
4. அடுத்த வருட மாணவர்களுக்கு நீங்கள் நோட்ஸ் கொடுத்து உதவி செஞ்சீங்க. நாங்கள் எந்த ஆசிரியரை எப்படி சாமாளிக்கனும்னு டிப்ஸ் கொடுத்து உதவி செய்தோம்.
5. நூலகத்தில நிறையப் புத்தகம் எடுத்து நீங்கள் சாதனை செய்தீங்க. நாங்கள் நாலு வருசமா நூலகப் பக்கமே போகலே என்ற சாதனையை செய்தோம்.
6. அதிக புள்ளி எடுக்க வேண்டும் என்று பரீட்சை, நேர அட்டவணை வந்த உடனே படிக்க ஆரம்பித்திடுவீங்க. நாங்கள் பாஸானா போதும் என்று பரீட்சைக்கு முதல்நாள்தான் படிக்கவே தொடங்குவோம்.
7. ஆசிரியர் தண்டனை கொடுத்து வெளியில் அனுப்பினா, அதை நீங்க அவமானமா நினைச்சு முகத்தை தொங்க போடுவீங்க. நாங்கள் ஆசிரியரே ரெஸ்ட் எடுக்கச் சொன்னதா நினைத்து ஆனந்தப் படுவோம்.
8. பரீட்சைக்கு முக்கியமான சிலபஸ் தெரிஞ்சு இருக்கணும் என்று நீங்கள் நினைச்சீங்க. ஆசன ஒழுங்கு தெரிஞ்சா போதும் என்று நாங்கள் நினைச்சோம் மொத் தத்துல நீங்கள் வாழ்க்கையைத் தேடிட்டு இருந்தப்பவே, நாங்கள் வாழ ஆரம்பிச்சிட்டோம்.

### என்ன! மாமா ஒரு ரவுண்டு போலாமா??










எதிர்த்து சண்டையிடுவதற்கு அதிக புத்திசாலித்தனம் தேவையில்லை, புரிந்துகொண்டு விட்டுக் கொடுப்பதற்குத்தான் அதிக புத்திசாலித்தனம் தேவைப்படுகிறது.

செய்திகள்

# வடக்கு திட்டமிட்டு புறக்கணிப்பு

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பல்வேறு வேலைத் திட்டங்களில்

யாழ்ப்பாணம், டிசெ. 24

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில், வடக்கு மாகாணம் மாத்திரம் திட்டமிட்ட ரீதியில் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டதைப் போன்று, கிராமப்புறப் பாடசாலைகளின் துப்புரவு மற்றும் ஏனைய அபிவிருத்தி வசதிகள் திட்டத்திலும் வடக்கு மாகாணம் மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்த ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி (மில்லியன்) |
|---|---|
| கொழும்பு | 90 |
| கம்பஹா | 78 |
| களுத்துறை | 80 |
| கண்டி | 78 |
| மாத்தளை | 24 |
| நுவரெலியா | 30 |
| காலி | 60 |
| மாத்தறை | 42 |
| அம்பாந்தோட்டை | 30 |
| யாழ்ப்பாணம் | – |
| மன்னார் | – |
| வவுனியா | – |
| முல்லைத்தீவு | – |
| கிளிநொச்சி | – |
| மட்டக்களப்பு | 18 |
| அம்பாறை | 30 |
| திருகோணமலை | 18 |
| குருநாகல் | 84 |
| புத்தளம் | 36 |
| அநுராதபுரம் | 42 |
| பொலநறுவை | 24 |
| பதுளை | 54 |
| மொனராகலை | 40 |
| இரத்தினபுரி | 90 |
| கேகாலை | 54 |



சாவகச்சேரி நகர சபையினால் 95 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீன்சந்தை நேற்றுச் செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நகரசபைத் தலைவர் சி.தேவசகாயம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், ந.பரஞ்சோதி, அனந்தி சசிதரன், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா, வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-9)

## மத நிகழ்வை நடத்த எதிர்ப்பு

வலி.வடக்கு, டிசெ 24

சங்கானை காலையடி மறுமலர்ச்சி மன்ற அரங்கில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெற விருந்த யூதாவின் செய்கோல் பாடல் குழுவினரின் நிகழ்வு பிரதேச மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு ஆரம்பமாக விருந்த நிலையில் அங்கு திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் நந்திக் கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸாரின் தலையீட்டைத் தொடர்ந்து குறித்த நிகழ்வு நிறுத்தப்பட்டது.

முற்றுமுழுதாக இந்து மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் கிறிஸ்தவ நிகழ்வை நடத்த அனுமதிக்க முடியாது என்று கூறிய பிரதேச மக்கள் மழைக்கு மத்தியிலும் திரண்டுதமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதைத்தொடர்ந்தே நிகழ்வு கைவிடப்பட்டது.

புலம்பெயர் தேசத்தில் இருக்கின்ற காலையடியைச் சேர்ந்த சிலரின் உதவியுடன் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் மூன்று தினங்கள் கிறிஸ்தவ நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், இதற்கு மன்ற நிர்வாகம் அரங்கை வாடகைக்கு வழங்கியதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த மக்களின் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கி சைவ மகா சபை மற்றும் சிவதொண்டர் அமைப்பின் பிரதிநிதிகளும் அங்கு கூடியிருந்தனர்.

இதேவேளை, இந்த நிகழ்வுக்கு மண்டபத்தை வழங்கிய காலையடி மறுமலர்ச்சி மன்றச் செயலாளரிடம் இது தொடர்பாக கேட்டபோது, எந்தவொரு மதத்தையும் பின்பற்றுவது அவரவரது தனிப்பட்ட சுதந்திரம். அந்த அடிப்படையிலேயே இந்த நிகழ்வுக்கு தாங்கள் மண்டபத்தை வாடகைக்கு வழங்கியதாகக் கூறினார். (த-86)



## 66 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

கிளிநொச்சி, டிசெ 24

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் சிறு வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வருவோருக்குத் தொழிலை மேம்படுத்துவதற்கான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

சுமார் 66 பயனாளிகள் நேற்று வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொண்டனர். இதேவேளை, கிராமமட்ட அமைப்புக்களுக்கான தகரப் பந்தல், கதிரைகள் ஒலி பெருக்கிகள் உள்ளிட்ட பொருள்களும் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 22 கிராம மட்ட அமைப்புக்கள் இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 5 அமைப்புக்கள் இப் பொருள்களைப் பெற்றுக்கொண்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நேற்று இந்த வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் நாகேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதி கள், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த)

# உருளைக்கிழங்குச் செய்கை பாதிப்பு

## தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக

காலநிலை முரண்பாடு மற்றும் மாறுபட்ட மழைவீழ்ச்சியினால் உருளைக்கிழங்கு நடுகை செய்வது தடைப்பட்டுள்ளது என யாழ்.விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்கு நடுகை நவம்பர் 15 முதல் டிசெம்பர் 15 இற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் மேற்கொள்ளப்படுவது உண்டு. அந்த வகையில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக் கிழங்கு நவம்பர் முதல் வாரத்திலேயே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

உருளைக்கிழங்கு நடுகை செய்வதற்குத் தோட்ட நிலங்களைப் பண்படுத்தித் தயாராக வைத்திருந்ததோடு விதை கிழங்கும் கைவசம் இருந்தது. ஆனால் மழை வெள்ளம் மற்றும் வாரக் கணக்கில் மப்பும் மந்தாரமுமான காலநிலை இருந்ததால் தோட்ட நிலங்களில் கிழங்கை நடுகை செய்யமுடியவில்லை. நடுகை செய்தவர்களின் தோட்டங்களில் விதைத்த கிழங்கு அழுகி பயிர் சேதமடைந்துள்ளது.

விதை கிழங்கு கொள்வனவு செய்த விவசாயிகளில் 30 வீதமானோர் நடுகை செய்யவில்லை எனக் கூறப்படுகின்றது.

டிசெம்பர் இறுதியில் நடுகை செய்யப்படும் கிழங்கின் வளர்ச்சிக்கு ஜனவரிக்கு பின்னர் காணப்படும் வறட்சியான காலநிலை ஏற்புடையதாக இருக்காது எனக் கூறப்படுகின்றது.

இந்த வருடத்துக்கான உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கை உத்தேச இலக்கு 80 ஹெக்ரேயராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ விதை உருளைக் கிழங்குப் பொதி ஒன்று உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் 11 ஆயிரத்து 230 ரூபா விலைக்கு வழங்கப்பட்டது. அதேநேரம் தனியார் துறையினரும் அதனை இறக்குமதி செய்து வழங்கினர்.

இந்த வருடம் உருளைக் கிழங்குச் செய்கைக்கு எந்தவிதமான மானிய உதவியையும் அரசு வழங்கவில்லை. அத்துடன் அறுவடைகாலத்தில் கிழங்கின் விலையும் வீழ்ச்சி அடையுமானால் விவசாயிகள் எதிர்பாராத பாதிப்பை எதிர்கொள்ளவேண்டி ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. (த-11)

# இனியும் கடும் மழை தொடர்ந்தால் ஆபத்து

## வீதியோரக் கிணறுகளுக்கு அடையாளமிடுங்கள்
## இடர் முகாமைத்துவப் பிரிவு அவசர எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ 24

யாழ்.மாவட்டத்தில் இனிமேல் அதிகளவு மழை பெய்யுமாயின் நீர் வழிந்தோடுவதற்கோ அல்லது நிலம் உறிஞ்சுவதற்கோ சாத்தியமில்லை. பள்ளமான காணிகள் நீரினால் நிறைந்து வீதிகள் மூழ்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் பல உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய அபாய நிலை உள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே வீதியோரங்கள், ஒழுங்கைகளுக்கு அருகிலுள்ள கிணறுகள், பள்ளமான காணிகள் என்பனவற்றை அடையாளப்படுத்தி அந்த இடங்களினூடாகப் பயணிப்பவர்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யுமாறு யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஏ.ரவி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அண்மையவாரங்களாகப்பெய்த மழை காரணமாக நிலம் இனிமேல் சேமிக்க முடியாதவாறு போதியளவு நீரை உறிஞ்சிவிட்டது. குளங்களும், பள்ளங்களும் நிறைந்து விட்டன. அதனால் இனிமேல் மழை பெய்யுமாயின் மழைநீர் வழிந்தோடுவது அரிதானதாகவே காணப்படும்.

அந்த மழை வெள்ளம் எஞ்சியுள்ளபள்ளமானகாணிகளிலும், வீதிகளிலும் தேங்கிப் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு நிலைமை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் வீதியோரங்களில் உள்ள கிணறுகள் அடையாளம் தெரியாதவாறு தண்ணீரில் மூழ்கிவிடும். வீதியோரங்களில் உள்ள பள்ளமான காணிகளிலும் இந்த நிலை காணப்படும். அதனால் பலர்அடையாளம்கண்டுகொள்ள முடியாதவாறு பள்ளங்களில் அல்லது கிணறுகளில் தவறி விழுந்து உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

ஏ–9 வீதியில் செம்மணியிலிருந்துமிருசுவில்ஆசைப்பிள்ளை ஏற்றம் வரையான பகுதி, பண்டத்தரிப்பிலிருந்து சித்தன்கேணி வரையான பகுதி என்பனவற்றை உதாரணத்துக்குக் குறிப்பிடலாம். கிணறுகள், கேணிகளில் மூழ்கி இந்த வருடம் மாத்திரம் 15 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கிணறுகள், கேணிகளில் தண்ணீர் நிரம்பியுள்ள இந்தக் காலப் பகுதியில் அவற்றில் தான் குளிக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

இவ்வாறான சம்பவங்களால் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் அவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டிய அவசியம் தொடர்பிலும் பாடசாலைகளில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாணவர்கள் மற்றும் பிள்ளைகளுக்குப்போதிய விழிப்பூட்டுதல் கட்டாய தேவையாகியுள்ளது. எனவே விழிப்பூட்டுவது மிக அவசியம்.

வீதியோரங்களில் உள்ள கிணறுகளை அடையாளப்படுத்துவதை அவற்றுக்குப் பொறுப்பாக வுள்ள பிரதேச, நகர, மாநகர சபைகள் முன்னெடுக்கவேண்டும். அத்தகைய ஆபத்தான இடங்களில் சிவப்புக் கொடிகளையோ அல்லது வேறு எந்த வகையில் விழிப்புணர்வூட்ட முடியுமோ அந்த வழிவகைகளைச் செய்ய வேண்டும். இழப்புக்கு முன்னரான செயற்பாடுகளே தேவை– என்றார். (த–4)



நடுக்கடலில், கடற்படையினரின் படகு மோதி உயிரிழந்த மீனவரான எழுவைதீவு தோமையார் கடற்றொழிலாளர் சங்கத்தின் உபதலைவர் அலெக்ஸாண்டர் அன்ரனி ஜேசுதாசனின் உடல் மக்களின் உணர்வுக் கொந்தளிப்புடன் நேற்று முன் தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் கலந்துகொண்டார். (த–109)

# இறந்தோர் அடக்கத்துக்கு இடம் ஒதுக்க வேண்டும்

## மூளாய் கிறிஸ்தவ மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.24

இறந்த பின்னர் அடக்கம் செய்வதற்கும்,கல்லறை அமைப்பதற்கும் மூளாய் பித்தனை பிரதேசத்தில் இந்து மயானத்திற்கு அருகில் ஓர் இடம் ஒதுக்கி உதவ வேண்டும்.

இவ்வாறு சில்லாலை பங்குத் தந்தை வண.பிதா.எமில் போல் வலி.மேற்கு பிரதேச நிர்வாகத்தைக் கோரியுள்ளார்.

மூளாய்துயசெபமாலைஅன்னை ஆலயத்தைச் சேர்ந்த 35 குடும்பங்கள் இப் பகுதியில் வாழ்ந்து வருகின்றன . இந்த மக்கள் தமது உறவுகள் இறந்தால் அடக்கம் செய்யும் கல்லறை அமைக்க இடமில்லாத நிலை காணப்படுகின்றது.

எனவே பொருத்தமான இடமொன்றைப் பித்தனை இந்து மயானத்துக்கு அருகில் ஒதுக்கீடு செய்து தருமாறு வலி.மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் நீண்ட காலமாக உடல்களை அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான இடமில்லாது சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–50)

# வாள் வெட்டில் ஒருவர் காயம்

தென்மராட்சி,டிசெ.24

வாய்த் தர்க்கம் வாள் வெட்டில் போய்முடிந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு பாலாவி தெற்கில் இடம்பெற்றது. தலையில் வெட்டுக் காயத்துக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த நடராசா சுரேஸ்(வயது–36) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த–9)

# பாதுகாப்பான முறையில் மழை நீரைச் சேகரிக்குக

## சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தல்

தென்மராட்சி,டிசெ. 24

மழைநீரைப்பாத்திரங்களில்சேகரிப்போர் அவற்றை உடனுக்குடன் பாதுகாப்பான பாத்திரங்கள் அல்லது போத்தல்களிலிட்டு அடைத்து வைக்குமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

திணைக்கள உத்தியோகத்தர்களால் கடந்த வாரம் நடத்திய டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளில் பல இடங்களில் திறந்த பாத்திரங்கள், தொட்டிகள் போன்றவற்றில் மழை நீர் சேகரித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நீண்ட நாள்களாக இவை திறந்திருப்பதால் பல இடங்களில் அவற்றினுள் நுளம்புக் குடம்பிகள் காணப்படுவதையும் அவதானித் துள்ளனர்.

மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை வரவேற்கும் அதேவேளை, அவற்றை உரிய முறையில் பாதுகாக்காவிடில் அதுவே எமக்குப் பாதிப்பைத் தரும் விடயமாக மாறி விடும். இதனைக் கருத்தில் கொண்டு மழை நீர் சேகரிப்போர் அதனைப் பாதுகாப்பாக மூடியிட்ட பாத்திரங்கள், போத்தல்களில் வைத்திருக்குமாறும் பெரிய பாத்திரங்கள், தொட்டிகள் போன்றவற்றில் நீண்ட நாள்கள் வைத்திருப்போர் அவற்றுக்கு நுளம்பு வலை போட்டு நுளம்பு உட்செல்லாமல் தடுக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளனர். (த–9)

# வெள்ளம் பாதித்தோருக்கு அவசர மருத்துவ உதவிகள்

## 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ 24

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர மருத்துவஉதவிக்காகவடக்குமாகாண சுகாதார அமைச்சினால் 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வாழும் மக்களுக்குச் சுகாதாரப் பொதிகள் வழங்கல் மற்றும் நடமாடும் வைத்தியசேவைஎன்பனமாவட்ட சுகாதார சேவை பணிமனை ஊடாக வழங்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த)

# பொலிஸாருக்கு இடையூறு; அல்லாரை வாசிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,டிசெ.24

பொலிஸாரைக் கடமை செய்ய விடாமல் இடையூறு விளைவித்த அல்லாரை வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தவழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறுஉத்தரவிட்டார். (த–9)

# உள்ளூராட்சி சிற்றூழியருக்கு ஓய்வூதிய இலக்கம் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற சிற்றூழியர்கள் பலருக்கு இதுவரை விதலைவகள் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 1986 இல் மாகாண சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டவர் 1990 தொடக்கம் 1995 வரையான காலப் பகுதியில் அரசினால் அறிவிக்கப்பட்ட சுய விருப்ப இளைப்பாறல் திட்டத்தின் கீழ் இளைப்பாறி ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோருக்குஇதுவரைவிதவைஅநாதை ஓய்வூதிய இலக்க அட்டை ஓய்வூதியத் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை.

ஓய்வு பெற்றவர்களில் சிலர் இறந்துள்ளனர். இவர்களின் ஓய்வூதியத்தை அவரது அடுத்த வாரிசு பெறுவதற்கு விதவை அநாதை ஓய்வூதிய இலக்கம் இல்லாததால் வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன.

இதேவேளை, யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சித் திணைக்களத்தினர் விதவை அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கடந்த 2010ஆம் ஆண்டு மேற்கொண்டு அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளால் ஓய்வூதியர்கள் மூலம் உரிய படிவங்களில் விண்ணப்பித்ததாகவும், இதுவரை இலக்கம் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுத்து இந்தஓய்வூதியர்களுக்குவிதவை அநாதை ஓய்வூதிய இலக்கம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த–9)

# செய்திகள்

## தமிழருக்காக மலர வேண்டும் வடக்கு–கிழக்கு

### வட மாகாணசபை உறுப்பினர் சிவமோகன் கூறுகிறார்



திருமலை, டிசெ.24
தமிழ் மொழிபேசும் மக்களுக்கான ஒன்றிணைந்த மாநிலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மலரவேண்டும் என்று தெரிவித்தார் வட மாகாண சபை உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகன்.

திருகோணமலையின் ஈச்சிலம்பற்று கிராமத்தின் பிரதேச மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட நிபுணத்துவ சேவைகள் அடங்கிய மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது, வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய மருத்துவ சேவைகளின் புதிய தோர் ஆரம்பம் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த மருத்துவ முகா மானது யாழ். மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் முரளியின் ஏற்பாட்டில் பொது மருத்துவ நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர், கண் சிகிச்சை நிபுணர், குழந்தைகள் மருத்துவ நிபுணர், மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஆகியோரின் சேவைகள் அடங்கலாக நடைபெற்றது.

மேற்படி மருத்துவ முகாமில் 400 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பங்குபற்றி பயனடைந்தனர். (வ)

## பொதுச்சந்தை விற்பனைப் பிரிவுகளின் கட்டண வீதத்தை மாற்ற வேண்டும்

### சாவகச்சேரி நகரசபையில் பிரேரணை

தென்மராட்சி,டிசெ.24
சாவகச்சேரி நகரசபையால் நடத்தப்படும் பொதுச் சந்தை விற்பனைப் பிரிவுகளில் வியாபாரிகளிடமிருந்து தற்போது அறவிடும் கட்டண வீதத்தில் மாற்றங்கள்மேற்கொள்ளப்படவேண்டும் என்று நகரசபையில் பிரேரணை சமர்ப்பிக் கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபையின் மாதாந்த கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சன் தனிநபர் பிரேரணையொன்றைசமர்ப் பித்து உரையாற்றினார். அந்தப் பிரேரணையில் மற்றொரு விடயமும் சேர்க்கப்பட்டுள்ளது. விவரம் வருமாறு:-

நகரசபையின் பொன்விழா மண்டபத்தை வாடகைக்கு வழங்கும்போது சபையால் குறித்தொதுக்கப்படும் 4மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக மண்டபத்தைப் பயன்படுத்தினால் மேலதிக கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மண்டபத்தை வாடகைக்குப் பெறுபவர் வழங்கப் படும் 4 மணித்தியால நேரத்துக்கு மேலதிகமான நேரம் மண்டபத்தைப் பயன்படுத்துவ தால் மண்டபத்துக்குள் செயற் படும் வளிசீராக்கிமேலதிக (எயர்கொண்டிசன்) கட்டணம் அதிகரிப்பதால், மண்டப பாவனைக்காக மேலதிக கட்டணம் அறவிடப்படல் வேண்டும்என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆதரித்த போதிலும், இந்த இரு பிரேரணைகள் தொடர்பாக பொது மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்ட பின்னர் முடிவு செய்வதாக தலைவர் தெரிவித்த கருத்தையும்சபைஏற்றுக்கொண்டதாக தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ–9)

## மன்னார் எழுத்தூர் அம்பாளின் நகைகள், யந்திரங்கள் திருட்டு



மன்னார், டிசெ.24
மன்னார் எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம் பெற் றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை ஆலயம் திறக்கப்பட்டபோது திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்தது. ஆலய வெளிப்பிரகாரத்தில் உள்ள விக்கிரகங்கள் சேதப்படுத்தப்பட்டு யந்திரத்தகடுகள் திருடப்பட்டுள்ளன.

அதேபோல் ஆலயத்தினுள் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலை பெயர்க்கப்பட்டு இயந்திரத்தகடு திருடப்பட்டுள்ளதோடு அங்கு வைக்கப்பட்டிருந்த அம்மனின் பெறுமதிமிக்க நகைகளும் திருடப்பட் டுள்ளதாக கூறப்படுகின்றது. திங்கட்கிழமை காலை குறித்த ஆலயத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ–56)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

வலி.தென்மேற்கு ,டிசெ. 24
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக் கான வரவு – செலவுத் திட்டம் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேசசபைத் தவிசாளர் பொ.பிரின்ஸ் அன்ரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற டிசெம்பர் மாதக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

9 உறுப்பினர்களைக் கொண்ட குறித்த பிரதேச சபையில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

சகல உறுப்பினர்களின் ஆலோசனையுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இந்த வரவு – செலவுத் திட்டம் மாதாந்தக் கூட்டத்தில் எவ்வித ஆட்சேபனையுமின்றி நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ–115)

## அரச அலுவலகங்களில் ஒளிவிழா ஏற்பாடுகள்

தென்மராட்சி,டிசெ.24
தென்மராட்சி பிரதேச அரச அலுவலகங்களில் இம்முறை ஒளிவிழா நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரச திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள், கூட்டுறவு அலுவலகங்கள், மருத்துவ மனைகள் போன்றவற்றில் பணிபுரிவோர் ஒன்றிணைந்து ஒளிவிழா நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

ஒவ்வொரு அலுவலகத்திலும் பாலன் பிறப்பு தொடர்பான கொட்டகைகள் அமைக்கப் பட்டு வருகின்றன. (வ–9)

## 188 பேர் பயனடைந்த இலவச மருத்துவ முகாம்

வரணி, டிசெ. 24
வரணி வடக்கு பிரதேசத்தில் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நெல்லியடி வட்டம் 306 பி 1 இன் ஏற்பாட்டில் இலவச நடமாடும் மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. இதில் 188 பேர்வரை பயனடைந்தனர்.

வலயத் தலைவர் மருத்துவர் குகதாசனின் வருலகயை முன்னிட்டு இந்த இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வரணி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்ற இந்த இலவச மருத்துவ முகாமில் 250 பயனாளிகள் வரை சமுகமளித்து இருந்தனர். அவர்களில் பொது வைத்தியம் தொடர்பில் 188பேர் பயனடைந்தனர். 150 பேர் கண்சிகிச்சைக்கு பதிவு செய்திருந்தனர்.




அவர்களுள் 50 பேருக்கு கற்றாக் நோய் இனம் காணப்பட்டு மருத்துவர்களை சந்திக்க ஆலோசனை கூறப்பட்டது. 98 பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

பாடசாலை பிள்ளைகள் 48 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலையில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவனுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக் கப்பட்டது

இந்நிகழ்வில் நெல்லியடி வட்டத் தலைவர் லயன் என். ஞானராஸ், மற்றும் கழக உறுப்பினர்களான லயன் யோ. சேபதிராஜா , பிரதித் தலைவர் லயன் எஸ்.ஸ்ரீபவன், 2 ஆவது பிரதித் தலைவர் லயன் ரங்கநாதன், லயன் பீ. கோகுலகுமார், லயன் பீ.பிரகாஸ், லயன் பரமேஸ்வரன் மற்றும் மந்திகை ஆதார மருத்துவமனை இரத்த வங்கி பொறுப்பாளர் மருத்துவர் ஆர்.வாசுதேவன் மற்றும் பாடசாலை அதிபர் என். செந்தரூபன் ஆகியோர் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கினர். 50பேருக்கு பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (வ–122)

# அம்மாடியோவ்!

இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில்

உதயன்

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

***கவிதை! கவிதை!!***

***வெற்றியிலும் பரிசு மழையிலும் திளைத்திடுங்கள்***

# உங்களால் முடியும் மாணவர்களே!

**தமிழ்க் கவிதை மேம்பாட்டில் தீவிர கரிசனைகாட்டிவரும் உதயனின் உதயன் 30ஆவது ஆண்டு மாபெரும் கவிதைப் போட்டி**

## தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்களே!

**கவிதைத் தேர்வில் கலந்துகொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

## கவிதைக்கான தலைப்புக்கள் இதோ!

- ❖‘ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்’
- ❖‘கற்றதன் வழி உயர்வு காண்போம்’

கவிதை ஒவ்வொன்றும் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற் படாமலும் இருக்க வேண்டும். கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதை யாகவோ அமையலாம்.

அனுப்பப்படும் கவிதைகள் முன் எப்பொழுதும் வெளியிடப்படாதது என்பதனை யும், சொந்த ஆக்கம் என்பதனையும் ஆசிரியர்/ அதிபர் உறுதி செய்தல் வேண்டும்.

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம், அழகிய கையெழுத்தில் அல்லது கணினியில் அச்சிடப்பட்டதாக கவிதை அமைதல் வேண்டும்.

**கவிதையை 2015.02.28 இற்கு முன்னர்**

**30 அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி கவிதைகளை ஆக்குங்கள்.
உடன் உதயனுக்கு அனுப்பி வையுங்கள்.
உதயன் விண்ணப்பப் படிவத்தில் வேறாக உங்கள்
விவரங்களை இணைக்க மறந்து விடாதீர்கள்.

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........................................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........................................................
கற்கும் பாடசாலை: ..........................................................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........................................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:..........................................................
ஆசிரியரின் பாடத்துறை: ..........................................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......................................... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்

பத்திரிகையுடன்
நாளாந்தம்
இணைந்திருங்கள்!

கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அடுத்துத் தொடுத்து எழுந்த முஸ்லிம் தலைமைகளின் முடிவுகள்

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசில் இருந்து விலகுவது என்று முடிவு செய்துள்ளது. நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டது.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதில்லை என்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட தீர்மானத்தை அடுத்து, வெளிவந்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் முடிவு அரச தரப்பினரை அல்லாட வைத்திருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைத் தக்க வைப்பதற்கு, அரசு தரப்பு சந்திப்புக்களுக்கு மேல் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருந்தது. எனினும்அதன் முயற்சிகள் வெற்றி தரவில்லை.

முஸ்லிம் மக்களின் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய மூன்றும் அரசுக்கு ஆதரவு வழங்கிவந்தன. இக்கட்சிகளில் மக்கள் காங்கிரஸ் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கும் முடிவை நேற்று முன்தினம் அறிவித்தது.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவை அறிவிப்பதில் தாமதம் காட்டி வந்தது. ரிஷாத் பதியுதீன் கட்சியின் வெளியேற்றம் ஒரு முடிவை எடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு துணிச்சலைக் கொடுத்ததாகக் கொள்வதில் தப்பில்லை.

எவ்வாறாயினும் முஸ்லிம் காங்கிரஸின் வெளியேற்றம் ஜனாதிபதித் தேர்தலில் அரச தரப்பு வடக்கு, கிழக்கின் ஆதரவை இழக்க நேரிடும் என்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. சிறுபான்மை இன மக்கள் முஸ்லிம் காங்கிரஸின் முடிவை உள்ளூர ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் எனின் தப்பன்று.

முஸ்லிம் காங்கிரஸின் வெளியேற்றத்தைத் தடுக்க அரசு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டிருந்தமை வெளிப்படையானது.

தென்னிலங்கையில் சூடுபிடித்துள்ள ஜனாதிபதித்தேர்தலில், பிரதான வேட்பாளர்கள் இருவருக்கும் இடையேயான போட்டி சிங்கள வாக்காளர்களின் கைகளில் இல்லாமல் , -

சபாஷ் சரியான போட்டி என்ற "வஞ்சிக் கோட்டை வாலிபன்" தமிழ்சினிமாப் படத்தில் நடிகைகள் வையந்தி மாலாவுக்கும், பத்மினிக்கும் இடையில் நடைபெற்ற நடனப் போட்டியைப் பார்த்து வில்லன் பி.எஸ்.வீரப்பா வர்ணித்த காட்சியைப் போன்று -

முஸ்லிம் மற்றும் தமிழ் வாக்காளர்களின் கைகளில் தங்கி இருக்கும் என்று எதிர்வு கூற வைக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சிறுபான்மை இன மக்களை கிள்ளுக்கீரைகளாக நினைத்து, அவர்களின் அரசியல் உரிமைகளையும், மற்றும் வாழ்வாதார உரிமைகளையும், அவர்தம் பிரதேசங்களின் பல்வகைசார் அபிவிருத்திகளையும் கிள்ளித்தெளிக்கும் விதத்தில் ஏய்க்காட்டும் உத்தியையே சிங்கள அரசியல் தலைமைகள் கடந்த சுமார் அறுபத்தாறு ஆண்டுகளாக தொடர்ந்து கையில் ஏந்தி வருகின்றன.

அதே பாதையில் காலடி வைத்திருந்த கொழும்பு அரசுக்கு, வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் அரசியல் தலைமைகள் இரண்டும் தக்க பாடம் புகட்டியுள்ளன எனலாம்.

சிறுபான்மையின மக்களின் உணர்வுகளை கடாசி விட்டு, ஆட்சிபீடம் ஏறலாம் என்று தென்னிலங்கை அரசியல் தலைமைகள் செயலாற்றக்கூடா தென்ற கனதியான, காத்திரமான படிப்பினையை முஸ்லிம் அரசியல் தலைமைகள் வெளிப்படுத்தி யுள்ளன.

தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் என்ன செய்யப் போகின்றன......? எவ்வழி நடக்கப் போகின்றன......? - என்பதனை தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். கண்களை அகலவிரித்து கூர்ந்து எதிர்பார்த்திருக்கிறார்கள்.

# ஸ்ரீரங்காவின் கன்னத்தில் அறைந்தார் பதியுதீன்

## அலரி மாளிகையில் நடந்த சம்பவம்

சண்டே ரைம்ஸ்
கட்டுரையில் இருந்து ரெங்கன்

அலரிமாளிகையில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவுக்கும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்குமிடையில் கைகலப்பு ஒன்று நடைபெற்றது. சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியொருவர் பின்வரும் தகவலை வழங்கியுள்ளார்.

ரங்கா சாப்பாட்டு மேசைக்கருகில் அமர்ந்திருப்பதைக் கண்டு பதியுதீன் கோபமுற்றவராய் ஜனாதிபதி செயலகத்தின் அலுவலர்களின் தலைவரைப் பார்த்து கீழ்த்தரமான ஆள்களை வரவேற்க வேண்டாம் என்று கூறியுள்ளார். அவர் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். இருவருக்குமிடையில் சொற்போர் நீண்டது. அமைச்சர் பதியுதீன் அண்மையில் ரவி கருணாநாயக்க வீட்டில் வைத்து மங்கள சமரவீரவுடன் பேச்சுக்கள் நடத்தியதாகவும் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் தாம் இதுபற்றிக் கூறியிருப்பதாகவும் ரங்கா கூறினார். கோபமடைந்த பதியுதீன், ஜனாதிபதி மற்றும் அவரது மகன் நாமல் ஆகியவர்களின் பெயர்களை ஸ்ரீரங்கா கெடுத்து வருவதாக கூறியதுடன் வேறும் சில குற்றச்சாட்டுக்களையும் கூறினார். இதைக்கேட்டு ஆத்திரமடைந்த ஸ்ரீரங்கா அமைச்சரை நோக்கி நகர்ந்தார். அப்போது ரங்காவின் கன்னத்தில் இரண்டு அறை விழுந்தது. ரங்காவும் தற்காப்புக்காகத் திருப்பித் தாக்கினார். அங்கிருந்த அலுவலர்கள் தலையிட்டு இருவரையும் பிரித்துவிட்டார்கள்.

அன்றிரவு களைத்துபோய் நித்திரையில் இருந்த ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்ட ரங்கா, பதியுதீன் தன்னைத் தாக்கிவிட்டதாகக் கூறவும் – கோபமடைந்த ஜனாதிபதி நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார்.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் இன்னமும் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலை தென்படுகின்றது. அரசிலிருந்து விலகிக்கொள்ள ஒரு பகுதியினர் வற்புறுத்திவரும் நிலையில் மற்றும் ஒருபகுதியினர் பிரிவதை விரும்பவில்லை. குறிப்பாக பெரிய முஸ்லிம் வர்த்தகப் பிரிவினர் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருப்பதையே விரும்புவதாகத் தெரிகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் விலக நேர்ந்தால் அரசிலிருந்து அதன் எட்டு உறுப்பினர்கள் எதிர்த்தரப்புக்குச் செல்வதாக அமையும். அதனால் அரசு நாடாளுமன்றில் தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்க நேரும். அதே சமயம் அது அரசிலிருந்து விலகும் பட்சத்தில் கட்சிக்குள் பிளவு ஏற்படலாம் என்றும் குறைந்தது இரண்டு உறுப்பினர்களாவது அரசிலிருந்து விலகாமல் இருக்கும் சாத்தியமும் தோன்றுகின்றது.

### இணைப்பின் முக்கிய நோக்கம்

தேசிய ஜனநாயக முன்னணியில் பல கட்சிகளும் ஒன்றாக இணைந்து செயல்படுவதன் முக்கியநோக்கம் அதாவது இந்தக் கட்சிகளை ஒன்றாக இணைத்து வைத்திருக்கும் முக்கிய கொள்கை யாதெனில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை ஒழிப்பதாகும். ஜாதிக ஹெல உறுமய பொறுத்தவரை நிறைவேற்று அதிகார முறை முழுமையாக அகற்றப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. முக்கிய சில அதிகாரங்களை குறைத்துவிட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை நீடிப்பதை அந்தக் கட்சி ஆதரிக்கிறது.

நாட்டில் ஊழலை ஒழிப்பது தொடர்பாக மிகக் குறிப்பாக எதிரணி தரப்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மேலும் பலப்படுத்தப்படுவதுடன் செயல் ஊக்கம் அளிக்கப்படும். அதற்காக ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கும் வகையில் அரசமைப்பின் மூலம் அங்கீகாரம் அளிக்கப்படும். ஐ.நா. ஊழலுக்கு எதிரான விதிகளுக்கமைவாக ஊழல் ஒழிப்புக் கட்டமைப்பு முறை பலப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் சிறிசேன தெரிவித்துள்ளார்.

சமீப காலத்தில் அரசு மேற்கொண்ட பெரிய திட்டங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனைக்குட்படுத்தப்படவில்லை. கடந்த பல மாதங்களாக பில்லியன் கணக்கான ரூபா மதிப்பில் செலவுகள் ஏற்படும் தேவையற்ற அரசின் திட்டங்கள் இதில் அடங்கும் என்று தெரிகின்றது. நான் இவைகளை மீளாய்வு செய்வேன். இவ்வாறான திட்டங்களில் தொழில்நுட்பத் தவறுகள் இழைத்தவர்களின் தராதரம் பாராட்டாமல் தண்டிப்பேன் என்று சிறிசேன கூறுகின்றார். நாடு முழுவதிலும் கொள்முதல் செய்யப்பட்ட, அல்லது கைமாற்று செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஊழியர் சேமலாபநிதி முறையில்லாது முதலீடு செய்யப்பட்டமை போன்ற சிறிய பெரிய அபிவிருத்தி செயற்பாடுகளை புலனாய்வு செய்வதற்கென சிறப்புத்திட்டமொன்று செயற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள இன்னும் சில முக்கிய அம்சங்கள் மருந்துகள் கையாளுநபவர்களின் செயற்பாடுகளை கட்டுக்குள் வைத்திருக்கும் வகையில் அபாயகரமான மருந்துகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாக தேசிய புலனாய்வு சேவைகள் சிறப்பு அதிரடிப் படைகள், இலங்கை சுங்கத் திணைக்களம் ஆகியவற்றை இணைத்து சிறப்பு படையணியொன்று நிறுவப்படும்.

சுற்றாடல்களுக்கு கெடுதியான வகையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அபிவிருத்திக்கென எதேச்சதிகாரமான முறையில் நிலங்கள் வழங்கப்படுவதை தடைசெய்வதற்கான ஒரு தேசிய காணி ஆணைக்குழு நியமிக்கப்படும். சிறு விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

### அரசியல் நியமனங்களுக்கு முற்றுப்புள்ளி

100 நாள்களுக்குள் வெளியுறவுத்துறையில் இடம்பெற்றுள்ள அரசியல் நியமனங்கள் மற்றும் உறவினர்களின் நியமனங்கள் அனைத்தும் நிறுத்தப்படும். தொழில் ரீதியிலான அதிகாரிகள் மற்றும் தொழில் முறையில் தகுதி பெற்றுள்ளவர்கள் மட்டுமே இடம்பெறும் வகையில் அத்துறை முழுமையாக சீரமைக்கப்படும். திறமாக படித்தவர்கள் மற்றும் திறமையானவர்கள் மட்டும் இந்தத்துறையில் நியமிக்கப்படுவார்கள். தேசிய நலக்கருத்துக்களையும் நாட்டுக்கு விசுவாசமானவர்களையும் மட்டுமே இத்துறையில் இடம்பெறச் செய்யப்படும்.

ஆசியாவின் பிரதான நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன் சமநிலையான உறவுகள் பேணப்படும். அதேசமயம் முன்னிலை பெற்றுவரும் ஆசிய நாடுகளான தாய்லாந்து, இந்தோனேஷியா மற்றும் கொரியா ஆகியவற்றுடனும் வித்தியாசம் பாராட்டாமல் உறவுகள் பேணப்படும்.

எமது இந்தியா தொடர்பான கொள்கையானது இந்தியாவின் பல்வேறுபட்ட தன்மைகளைக் கருத்தில் கொண்டதாக அமையும். இந்தியாவில் தங்கியிருப்பதாகவோ இந்தியாவுக்கு எதிரானதாகவோ இல்லாத முறையில் நெருங்கிய உறவு பேணப்படும்.

வெளியுறவு அமைச்சினாலும், மத்திய வங்கியினாலும் பல்வேறு தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள், ஆலோசனை சேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பாக ஆராய்ந்து சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

அரசின் புலனாய்வு முகவர் அமைப்புக்கள் அரசியல் மற்றும் சிவில் பணிகளில் ஈடுபடுவதை சட்டத்தின் மூலம் தடுக்கப்படும்.

மருத்துவர்
சி.யமுனாநந்தா

# அதிகாரப் போராட்டத்தால் அவலப்படும் மக்கள்


இலங்கையில் இடம் பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் நிறைவேற்று அதிகாரத்தை மூன்றாவது தடவையாகவும் வழங்கி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவது அல்லது நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது செய்து மாற்றத்தை ஏற்படுத்துவது என்ற இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சர்வாதிகாரியாக மூன்று தடவையும் தொடர்ந்தவர்களில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்க்கோஸ் முக்கியமானவர். 1965 இல் பதவிக்கு வந்து, 1969 இல் இரண்டாவது தடவை போட்டியிட்டு, வென்று, 1972 இல் இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்து 1986 வரை இவர் ஆட்சி செய்து வந்தார். இவரது சர்வாதிகார ஆட்சியால், பிலிப்பைன்ஸ் நாடு வறுமைக்குள் மூழ்கியது.

இன்று உலகில் விபசாரத் தொழிலுக்கு பெயர் போன நாடாக பிலிப்பைன்ஸ் விளங்குகின்றது. அதுபோன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படக் கூடாது. அடுத்து, பெரு நாட்டின் ஜனாதிபதியாக அல்பர்ட்டோ புஜிமோரி 1990 இல் இடம் பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று 1995 இல் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 2000ஆம் ஆண்டில் அரசமைப்பைத் திருத்தி மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். மேற்குறிப்பிட்ட இருவரும் பயங்கரவாதத்தை ஒழித்தல், பொருளாதாரத்தை மீட்டெடுத்தல் என்ற தொனிப்பொருள்களையே மக்களுக்குச் சொன்னார்கள்.

தென்கொரியாவில் கூட 1961 இல் பாக் சுங் கீ இராணுவச் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி 1963 இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். 1971 இல் மூன்றாவது தடவையும் போட்டியிட அரசமைப்பு யாப்பினைத் திருத்தி அமைத்தார். பின்னர் 1979 வரை சொந்தப் பாதுகாப்புப் பிரிவினரால் சுட்டுக்கொல்லப்படும் வரை பதவி யில் அமர்ந்திருந்தார்.

இன்று இலங்கையிலும் அதே மாதிரியான நிலைமை காணப்படுகின்றது. சர்வாதிகார ஆட்சி மாற்றப்பட்டாலும் வன்முறைகள் ஏற்படும் சூழல் ஏற்படும் என்பதை மறுப்பதற்கு இல்லை. இதற்கு எகிப்து, ஈராக் போன்ற நாடுகளின் அண்மைய நிகழ்வுகளை உதாரணங்களாகக் கூறலாம். சரத்பொன்சேகா, தனக்குப் பாதுகாப்பு அமைச்சு பதவி வேண்டும். பீல்ட் மார்சல் பதவி தரப்படல் வேண்டும் என்ற கோரிக்கை விடுத்தமை தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.



> இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சிங்கள அரசியல்வாதிகள் திரும்புவதற்கு குடும்ப அதிகாரம், இராணுவ அதிகாரம், புலனாய்வு அதிகாரம், நீதி இன்மை, திடமற்ற வெளிவிவகாரக் கொள்கை, நிறைவேற்று அதிகாரம், எதிர்க்கட்சிகளின் அபிலாசைகளுக்குஇடம்தராமை, ஊழல், ஜனநாயக விரோதச் செயற்பாடுகள், ஊடக சுதந்திரம் இன்மை ஆகிய காரணங்களைக் கூறமுடியும்.

இலங்கையின் ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சிங்கள அரசியல்வாதிகள் திரும்புவதற்கு குடும்ப அதிகாரம், இராணுவ அதிகாரம், புலனாய்வு அதிகாரம், நீதி இன்மை, திடமற்ற வெளிவிவகாரக்கொள்கை, நிறைவேற்று அதிகாரம், எதிர்க்கட்சிகளின் அபிலாசைகளுக்கு இடம்தராமை, ஊழல், ஜனநாயக விரோதச் செயற் பாடுகள், ஊடக சுதந்திரம் இன்மை ஆகிய காரணங்களைக் கூறமுடியும். இதே போன்று சிங்கள மக்கள் திரும்பியதற்கு பொருளாதாரச் சுமை, வேலை வாய்ப்பின்மை, பொருள்களின் விலையேற்றம், போதைப் பொருள் வர்த்தகம், அடக்குமுறை ஆகியவற்றைக் காரணங்களாகக் கூற முடியும்.

தமிழ் மக்கள் எதிர்ப் பதற்கு இனப்படுகொலை, போர்க் குற்றம், நில ஆக்கிரமிப்பு, தமிழின எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றையும் இஸ்லாமிய மக்கள் எதிர்ப்பதற்கு, பௌத்த தீவிரவாதத் தையும், மலையக மக்கள் எதிர்ப் பதற்கு வாழ்க்கைச் செலவு அதி கரிப்பு, அடிப்படை வசதிகள் இன்மை, உரிய வேதனம் வழங்காமை ஆகியவற்றையும் இந்திய அரசு மறைமுகமாக எதிர்ப்பதற்கு சீனச் சார்பு முதலீடுகள், இந்திய விரோதச் செயல்கள், இந்திய மீனவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் கடற்படையைக் கொண்டிருத்தல், அதிகரித்த பாகிஸ்தான் உளவு அமைப்புக்களின் செயற்பாடுகள் ஆகியவற்றையும் கூறமுடியும்.



> முழு இலங்கையும் மிகவும் அபாயகரமான அரசியல் சிக்கலில் மூழ்கி உள்ளது. இந்த நிலையில் கல்வியியலாளர்கள், அரசியல் அறிஞர்கள், பொருளியலாளர்கள், மனித உரிமை மேம்பாட்டாளர்கள் மௌனமாக இருத்தல் கூடாது

**மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்**

ஜனநாயக முறையில் அரசியல் மாற்றம் ஏற்பட்டாலும் நிர்வாக அலகுகளிலும் பல முரண்பாடுகள் தோன்றலாம். எகிப்து, ஈராக் போன்ற நாடுகளில் சர்வாதிகார ஆட்சியின் பின்னர் ஏற்பட்ட அமைதியின்மை இங்கு ஏற்படலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

முழு இலங்கையும் மிகவும் அபாயகரமான அரசியல் சிக்கலில் மூழ்கி உள்ளது. இந்த நிலையில் கல்வியியலாளர்கள், அரசியல் அறிஞர்கள், பொருளியலாளர்கள், மனித உரிமை மேம்பாட்டாளர்கள் மௌனமாக இருத்தல் கூடாது.

பலரது ஆக்கபூர்வமான சிந்தனைகளே மனித அவலங்களோ, பொருளாதாரப் பின்னடைவோ ஏற்படுவதைத் தடுத்து நாட்டைமேன்நிலைக்கு இட்டுச் செல்லும்.

# வாசகர் திருமுகம்

## எமக்கும் மின்சாரம் வருமா?

பாலாவி தெற்கு எனும் கிராமத்துக்கு வடக்கின் வசந்தம் மூலம் மின்சாரம் வழங்குவதாக கூறி வறிய மக்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவகர் மூலம் வழங்கப்பட்டன. பின்பு மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் வறியவர்களுக்கு அல்ல, வசதி உள்ளவர்களுக்கு. வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்து இருக்கும் மக்களுக்கு மின்சாரம் வழங்கவில்லை. மின்குமிழ் வெளிச்சத்தை அரிக்கன் விளக்குத் தருமா? பொழுது போக்குச் சாதனங்கள் பழுது பட்டு பழைய இரும்புகள் வாங்கும் கடைக்குக் கொடுத்த பின்பு தான் மின்சாரம் தருவார்களா? எனப் பலரும் கேட்கிறார்கள். கடனில் வாங்கிய கணினியை எத்தனை நாளைக்கு மண் எண்ணெய் இயந்திரத்தின் மூலமாக மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்த முடியும். இதற்கு வடக்கின் வசந்தம் பதில் சொல்ல வேண்டும். தயவு செய்து மின்சாரம் வழங்க வேண்டும். இருட்டில் வாழ முடியவில்லை. அடுத்த ஆண்டிலாவது எங்களுக்கு மின்சார வெளிச்சம் வேண்டும். நாம் பல இடங்களுக்கும் அலைந்து களைத்து விட்டோம். செலவுக்குப் பணம் இல்லை எங்களிடம். தயவு செய்து கேட்கிறேன் மின்சாரத்தை வழங்கவும்.

*ரி.அஜந்தா, பாலாவி தெற்கு, கொடிகாமம்.*

## எச்.ஐ.வியும் யாழ்.குடாநாடும்

அண்மையில் யாழ்.மருத்துவமனையின் புள்ளி விவரங்களின் பிரகாரம் குடாநாட்டில் போருக்குப் பின்னர் எச்.ஐ.வி தொற்று அதிகமாக காணப்படுவதாகத் தெரிய வருகின்றது. இது வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஓர் உயிர்க் கொல்லி நோயாகும். கடந்த மூன்று தசாப்த காலமாக எம்மினத்தின் மீது போர் எனும் கோர அரக்கன் தலை விரித்து ஆடியதால் ஏற்பட்ட பாதிப்புக்கள் ஏராளம்.

தற்போது வெந்தவன் புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று இந்தப் பாதிப்புக் காணப்படுகின்றது.

வேலைவாய்ப்பு அல்லது பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றபொழுது எச்.ஐ.வி தொற்று உள்ளதா என்பதைப் பரிசோதித்துப் புதிதாக அடையாள அட்டையை வழங்கலாம். மேலும் இந்தியாவில் சில இடங்களில் நடைமுறையில் உள்ளது போன்று திருமணத்துக்கு முன்பாக ஆண்,பெண் இருபாலாருக்கும் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர் திருமணத்தை நடத்தலாம். இந்தக் கருத்துக்கள் எனது தனிப் பட்டவையேயன்றி வேறொன்றும் இல்லை. இந்தக் கருத்துக்கள் மூலம் யாருடைய மனதையும் புண்படுத்துவதோ நோகடிப்பதோ நோக்கமல்ல. மாறாக ஒரு நல்ல ஒழுக்கமுடைய ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற வேண்டுதலே தவிர வேறு ஒன்றும் இல்லை.

*சிவஸ்ரீ இராம ஸ்ரீதரகுருக்கள்.*

## உதயனை வாசிப்பதில் கழிகிறது நேரம்

உதயன் வாசிப்பதிலேயே என் நேரம் முழுவதும் போய் விடுவதால் உதயனுக்கு ஆக்கம் எழுதுவதற்கு எனக்கு தற்போது நேரம் கிடைப்பதில்லை. ஓடுகின்ற நேரத்தை இழுத்துப்பிடித்து எழுதினாலும் அதனை அனுப்புவதற்கு நேரமில்லை.

இயந்திர பூமியில் நேரம் எமக்காக காத்திருப்பதில்லை. இதனால் எத்தனையோ சொற்சிலம்பங்களை கூட தவறவிட்டுள்ளேன். ஆயினும் உதயன் படிப்பதை தவறவிடுவதில்லை.திங்கட்கிழமை உதயனை புதன்கிழமைக்கிடையில் ஓர் எழுத்தும் விடாமல் வாசித்து விடுவேன். ஏனென்றால் இப்போதெல்லாம் உதயனில் சுவாரஸ்யமான அம்சங்கள் அதிகம் இடம்பெறுகின்றன.

*அ.உமாமகேஸ்வரி, உடுவில் தெற்கு, மானிப்பாய்.*

### கேலிச் சித்திரம்



நன்றி: மவபிம

## இது வேற உலகம்

இலக்கியம் காலத்தைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி என்று பாடசாலைக் காலத்தில் தமிழ் ஆசிரியர் கற்பித்திருப்பார். இலக்கியத்துக்குள் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் போன்ற எழுத்து வடிவங்கள் இடம்பெறும் என்பதையும் அவரே சொல்லியும், எழுதப் பழக்கியும் இருப்பார். தமிழ் ஆசிரியர் சொல்வது போலவே நம்மிடம் அண்மைக்காலமாகத் தோன்றும் இந்த இலக்கியங்கள், ஏற்கனவே குறிப்பிட்டுள்ள வடிவங்கள் ஏதாவது ஒன்றுக்குள் காலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றனவா என்பதை ஆராய்வதே இந்தச் சிறுபத்தியின் நோக்கம்.

போருக்குப் பின்னர் கவிதை மட்டுமே இலக்கியங்களில் முதன்மையானது என்ற நிலைக்கு எங்கள் தமிழ் படைப்புலகம் வந்துவிட்டது போலும். நாளுக்கொரு கவிதைப் புத்தகமும், வெளியீடுகளும், கவிஞர்களும் முளைத்துக் கொண்டேயிருக்கின்றார்கள். தமிழில் ஏழைகளுக்கு அடுத்த நிலையில் பெரும்பான்மையான இடத்தைப் பிடித்துக் கொள்பவர்கள் கவிஞர்களாகத்தான் இருப்பார்கள். அவ்வளவுக்கு எங்கு பார்த்தாலும் கவிஞர்கள். கவிதைகள். ஏன் இவ்வளவு கவிதைப் பெருக்கம் என்றால், அவ்வளவும் மனவடுதான். மனதுக்குள் இருந்து நொதிக்கும் வடுக்கள் கவிதையாகக் கொட்டிவிடுகின்றன. ஆனால் அவை பேசும் வலி உணர்வு உண்மையானதா என்று பார்த்தால், அனேகம் வலியை கற்பனை செய்து பாடப்பட்டவையாகவே இருக்கும். காலத்தை கண்ணாடியாக நின்று பிரதிபலிக்க வேண்டிய இலக்கிய வடிவங்களில் ஒன்றான கவிதையால் மட்டுமே வலியை கற்பனையாக வடிக்கமுடிகிறது. அதனால்தான் இந்தக் கவிதைகளால் வலியை அனுபவித்தவனை அடையமுடிவதில்லை. ஒருவட்டத்துக்குள் பேசுபொருளாகி நின்று விடுகின்றன. தமிழ் பரப்பில் பாரதி மற்றும் புதுவை இரத்தினதுரை போன்றவர்களைத் தவிர கவிஞர்கள், பாமரர்கள் மனதிலும் ஆதிக்கம் பெறமுடியாமைக்கு இந்த நிலையே காரணமாக இருக்கலாம்.

2009க்குப் பிறகு நாவல்கள் வந்திருக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை புலியெதிர்ப்பு, ஆயுதப் போராட்ட எதிர்ப்பைக் குறிப்பவைதான். எழுதியவர்கள் அனைவருமே ஏதோ ஒருவிதத்தில் ஆயுதப் போராட்ட விசுவாசிகளாக இருந்து பின்னர் பல்டி அடித்தவர்களாகவும், திடீர் ஞானம் பெற்றவர்களாகவும் இருப்பதனாலும், விற்பனைச் சந்தையில் அதிக நுகர்வைப் பெறுவதனாலும் இந்த வகை நாவல்கள் முக்கியத்துவத்தைப் பெற்றன. காலத்தைக் காட்டும் கண்ணாடி உடைந்து நொருங்கும் இந்தநிலைமைகள் பலவேளைகளில் வாசிப்புத் தளங்களில் உணரப்பட்டன. கடந்த காலத்தின் மீதான மொத்த விருப்பங்களும் விரக்தியாக இலக்கிய படைப்பில் வெளிவந்தன. இதனால் கடந்தகாலம் பொய்யானதா? நிகழ்காலம் பொய்யானதா? என்ற திணறலுக்குள் பாமர வாசகர்கள் உட்பட்டார்கள். எனவே நம் தரப்பில் இலக்கியம் எல்லாவற்றையும் உடைத்து வீசியது போல காலக் கண்ணாடியையும் அடித்து நொருக்கி மேலெழுந்து நிற்கின்றது.

கட்டுரைகள், தனிமனிதப் பதிவுகள் என்பவைகளோ, புதிய வடிவிலான இலக்கிய முயற்சிகளோ முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வெளிவந்தவைகளும் கவிதைகள் பெறும் முக்கியத்துவத்தை பெறவில்லை. அதற்கு இலக்கிய உலகம் முற்று முழுதாக கவிஞர் மயப்பட்டுவிட்டதும் பிரதான காரணம். இப்படியே போனால் தமிழர்களின் இலக்கிய உலகம் வேறு மாதிரியான உலகத்தையே கண்டடையும்.

பத்தி எழுத்து

# மனிதர்களை கொல்லும் மர்ம தீவு



உலகிலேயே மிகப்பெரிய பாலைவனக் கடல் என்று பெயர் பெற்ற துர்கானா ஏரி கென்யாவில் உள்ளது. ருடால்ப் ஏரி என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இந்த ஏரிக்கு, பல்வேறு நதிகளில் இருந்து நீர் வருகிறது. இங்கு நிலவும் கடும் வெப்பத்தால், ஒரு பகுதி ஆவியாகிறது. மீதமுள்ள நீர், அதிக உப்புத் தன்மையுடன் காணப்படுகிறது. கென்யாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்த இடங்களில் ஒன்றாக இந்த பாலைவனக் கடல் திகழ்கிறது. குட்டி குட்டி தீவுகளும், பழைமை மாறாத பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறையும் கவர்ந்திழுக்கிறது. இந்த அட்ராக்ஷனோடு நம்மை உறைய வைக்கும் அதிர்ச்சிகளும் உள்ளன. இங்குள்ள குட்டி தீவுகளில் ஒன்று 'என்வைட்டினெட்'. இங்கு வாழும் பழங்குடியின மக்கள் பேசும் மொழி சொல். இதன் அர்த்தம்' திரும்ப வராது' என்பதாகும். என்வைட்டினெட் தீவுக்குள் செல்பவர்கள், யாரும் திரும்பி வருவது கிடையாதாம். அறிவியல் ஆராய்ச்சிகளுக்கே சவால் விடும் வகையில் இந்தத் தீவு உள்ளது. இந்தத் தீவுக்கும், வேற்றுக் கிரக வாசிகளுக்கும் தொடர்பு உண்டா என்ற கோணத்திலும் ஆராய்ச்சிகள் சூடு பிடித்துள்ளது. இங்குள்ள மக்களை வேற்று கிரகவாசிகள் கடத்திச் செல்கின்றனர் என்றும், கண்ணுக்குத் தெரியாத சக்கரம் ஒன்று சுழல்கிறது என்றும், மக்கள் காற்றில் கரைகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

காலையில் தூக்கம்
கடமைக்குத் தாக்கம்
பகலில் தூக்கம்
உழைப்புக்குத் தேக்கம்
மாலையில் தூக்கம்
மந்தப்புத்திக்கு ஆக்கம்
அதிகத் தூக்கம்
அற்ப ஆக்கம்
இரவில் தூக்கம்
இதயத்துக்கு ஊக்கம்

# ஊக்கம் தரும் தூக்கம்...?


**வீடு விற்பனைக்கு**

காட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டுக்குளியில் புனரமைக்கப்பட்ட 4 அறை (ஒரு அறை மேல் மாடி) 3¼ பரப்புக் காணி, நல்ல தண்ணீர் குழாய்க் கிணறு மற்றும் சகல வசதிகளுடன் வீடு விற் பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். (பிரபல பாடசாலைக்கும் கச்சேரிக்கும் அருகில்)

தொடர்பு:077 247 5691
(29 ஆர் நிக்நிக்நர்பின் 222 4528)
(சி/18408) (4.3.6)

**விற்பனைக்கு**

பசுமாடும், கன்றும், நல்லின ஆடுகளும், மொறிஸ்மைனர் கார், பெண்களுக்குரிய ஜப்பான் ஏசியா துவிச்சக்கரவண்டி, 29" சொனி TV, லயன் பொமேரியன் நாய்க்குட்டி, ஆட்டு எரு என்பன விற்பனைக்குள்ளன.

தொடர்பு:077 434 7800 (55192) (4.3.6)


# கருணை



தூண்டி முள்ளில் குத்தப்பட்டிருந்த புழு துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு மீன், ஆகா, மனிதனின் கருணையே கருணை! எனக்காக அவன் எங்கேயோ இருந்த புழுவைத் தேடிப்பிடித்து தூண்டி முள்ளில் வேறு குத்தி, தண்ணீருக்குள் அல்லவா விட்டிருக்கிறான்? என்றது நன்றியுடன். அட முட்டாளே! கருணையாவது, கத்தரிக்காயாவது? அவன் உன்னைப் பிடித்துச் சாப்பிடுவதற்காக அல்லவா அதை ஏவி விட்டிருக்கின்றான் என்றது தவளை. நன்றிகெட்டதனமாகப் பேசாதே! எப்போதும் நல்லதையே நினை. நல்லது நினைத்தால் நல்லது நடக்கும்; கெட்டது நினைத்தால் கெட்டது நடக்கும் என்றது அது. செய் அப்பனே, செய்; உனக்கு எது நல்லதோ அதையே செய் என்றது இது. அவ்வளவுதான்; துடித்துக் கொண்டிருந்த புழுவை விழுங்கிய மீனும் துடித்துக்கொண்டே ஐயோ ஏமாந்தேனே என்றது பரிதாபமாக. நன்றிகெட்டதனமாகப் பேசாதே கெட்டதை நினைத்தால் கெட்டது நடக்கும்; நல்லதை நினைத்தால் நல்லது நடக்கும் என்றது தவளை.


**100th Birth Day Rememberance**



Born 24 12 1914

**V.Sabaratnam**

Formarly Registrar of Marrieges Births and Deaths

**வி.சபாரத்தினம்**

முன்னாள் பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர்
லிங்கஸ்தான் மல்லாகம் (Mallakam)

அன்னாரைப் பிரார்த்தித்து நினைவு கூருவோம்.

ச.கதிர்காந்தன்,
ச.பிரதீபன்,
லிங்கஸ்தான் மல்லாகம்
24.12.2014 (54941)(4.3.6)

மனைவி, பிள்ளைகள் குடும்பம்,
மற்றும் உறவினர்கள்,
மல்லாகம்,
ஆஸ்திரேலியா.








**மூலிகை மருத்துவத்தில் சாதனை**
**தெய்வீக மூலிகை மருந்துகளால்**



ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாமை, சர்க்கரை நோய், சொரியாசிஸ், ஆஸ்மா, மூலநோய், எடை கூட/ குறைய, மஞ்சள் காமாலை(B)(HBSAG), பாலியல் நோய்

முழுமையாக குணமாகும் அதிசயம்

**23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்**

**உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை**

**ஆண்மைக்குறைவு**

ஆண்மைக்குறைவு ஏற்பட முக்கிய காரணங்கள் இரண்டு. தானாக வருவது முதல் காரணம். நாமாக வரவழைத்துக் கொள்வது இரண்டாவது காரணம். விஷக்காய்ச்சல், உடல் பலவீனம் போன்றவைகளின் காரணமாக ஆண்மைக்குறைவு இயல்பாக ஏற்படுகின்றது. அதையும் தவிர்த்து இளமைப்பருவத்தில் ஏற்படுகின்ற தீய பழக்கங்கள், போதைப்பொருட்கள் பயன்படுத்துதல், தனது சக்திக்கும் அதிகமான உடல் உழைப்பு, டென்ஷன், சர்க்கரை நோய், சரியாக சாப்பிடாமை, உடல்சூடு போன்றவைகளால் ஆண்மைக்குறைவு தானாக வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக நரம்புத்தளர்ச்சி, உடல் படபடப்பு, மயக்கம், சோர்வு, கை, கால் நடுக்கம், அசதி, கண் எரிச்சல், கன்னத்தில் குழி விழுந்து காணப்படுதல், ஞாபக சக்தியின்மை, தூக்கமின்மை, தனியாக சிந்தித்தல், திருமண பயம், இல்லறத்தில் முழுமையாக ஈடுபட முடியாமை, விரைவாக விந்து வெளியேறுதல், குழந்தையின்மை போன்றவைகள் ஏற்படுகின்றன. இதிலிருந்து விடுபட்டு இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்க பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சையளிக்கிறார்.

**குழந்தையின்மை**

ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் உற்பத்தியின்மை, உயிரணுக்கள் குறைவு மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதப்பிரச்சினை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பைச் சுருக்கம், கருமுட்டை உற்பத்தியின்மை, கருமுட்டை வளர்ச்சியின்மை மற்றும் வெள்ளைபடுதல் போன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு குழந்தைப்பாக்கியம் பெறலாம்.

**செல்: 0091 9842457673, 0091 9600336009**

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரச பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**

இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

# ஆக்கம்

# மனிதம் மரித்துப்போன ஒரு நாளில்...

தலிபான் பயங்கரவாதிகளின் கொலைவெறித் தாண்டவத்துக்குப் பிறகு, பெஷாவர் நகர ராணுவப் பள்ளிக்கூடமே ரத்தத்தை உறையவைக்கும்படி காட்சி தருகிறது. பள்ளிக் கட்டடங்களின் தாழ்வாரங்களிலும் வகுப்பறைகளிலும் துப்பாக்கிகளிலிருந்து சீறிப் பாய்ந்த குண்டுகள் ஏற்படுத்திய வடுக்களும், மாணவர்களின் உடல்களிலிருந்து பீறிட்டு அடித்த ரத்தமும், உடலிலிருந்து பிய்ந்த தசைகளின் துணுக்குகளும், சிதறிய பைகளும், புத்தகங்களும், எழுதுகருவிகளுமாகக்காட்சிதருகின்றன. பள்ளிக்கூடத்துக்குள் ஆயுதங்களுடன் புகுந்த தலிபான்கள் எல்லாக் கட்டடங்களுள்ளும் சென்று கண்ணில் பட்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். பின் வாசல் வழியாகத் தப்பி ஓடிய பலரும், இறந்தவர்களுக்கு நடுவில் உயிரற்ற சடலம் போலப் படுத்துக்கொண்டு நடித்த சிலரும் தான் உயிர் தப்பியிருக்கிறார்கள்.

**இனி, அடுத்தது என்ன?**

நீங்கள் சொல்லி அனுப்பியபடி பள்ளிக்கூடத்தில் இருந்த எல்லா மாணவர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டோம். இனி, அடுத்து என்ன செய்ய வேண்டும்? என்று பயங்கரவாதிகளின் தலைவன் அபுசார், இந்தப் படுகொலைகளுக்குப் பிறகு பள்ளிக்கூடத்திலிருந்து எங்கோ இருந்த யாரிடமோ கேட்டிருக்கிறார்.

இப்போது ராணுவம் உள்ளே வரும், அவர்களையும் கொன்றுவிட்டு அதன் பிறகு உங்களை மாய்த்துக் கொள்ளுங்கள் என்று அங்கிருந்து பதில் வந்திருக்கிறது. பாகிஸ்தான் உளவுத் துறை அதிகாரிகள் இந்தத் தொலைபேசி உரையாடலை இடைமறித்துக் கேட்டுள்ளார்கள். ராணுவப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களைச் சுட்டுக்கொல்லவேண்டும் என்ற தீர்க்கமான முடிவோடு அதற்கான ஆயுதங்களுடன் திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். பெரிய வாகனத்தில் வந்தவர்கள், இனி திரும்பிப் போகக்கூடாது என்ற முடிவோடு பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் உள்ள மயானம், வழியாக நுழையும்போதே, வாகனத் திலிருந்து இறங்கியதும் அதை வெடிகுண்டால் தகர்த்து எரித்திருக்கிறார்கள். பல மணி நேரம் சுழன்று சுழன்று அந்த பள்ளிக்கூடத்துக்குள்ளேயே சுற்றிச்சுற்றி கட்டடம் கட்டடமாகப் போய்ச் சுட்டிருக்கிறார்கள்.

**பாகிஸ்தானே செயலிழந்தது**

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இந்தப் படுகொலையை அடுத்து புதன்கிழமை பாகிஸ்தான் முழுவதும் செயலிழந்து பரிதவித்தது. தலிபான்களின் பயங்கரவாதத் தாக்குதல் அந்த நாட்டவருக்குப் புதியதல்ல என்றாலும், பச்சிளங் குழந்தைகளை இப்படி ஈவிரக்கமின்றிக் கும்பல் கும்பலாகச் சுட்டுக்கொல்வார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அரசுக் கட்டடங்கள் உட்பட எல்லா இடங்களிலும் தேசியக் கொடிகள் பாதிக்கம்பத்தில் பறந்தன. கடை, வர்த்தக நிறுவனங்கள் மூடியிருந்தன. நாட்டு மக்கள் தொலைக் காட்சிகளில் அவ்வப்போது வரும் தகவல்களைப் பார்த்துக் கொண்டேயிருந்தனர். கோபம், துயரம், ஆற்றாமை, விரக்தி என்று வெவ்வேறு உணர்ச்சிகளுக்கு மாறி மாறி ஆட்பட்டார்கள்.

**சவப்பெட்டிகளின் ஊர்வலம்**

பெஷாவர் நகரமே சிறிய சவப்பெட்டிகளால் நிறைந்து விட்டதோ என்று அஞ்சும்படியாக இருந்தது. ஆளரவமே இல்லாத வீதிகளில் திடீர் திடீரெனச் சிலர் கும்பலாக ஒரு சவப்பெட்டியைச் சுமந்துகொண்டு கல்லறையை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள். மக்கள் கண்ணீருடன் மசூதிகளுக்கும் கல்லறைகளுக்கும் சென்றார்கள்.

**அதிகாரிகள் ஆய்வு**

ராணுவப் பள்ளியில் நடந்த வற்றை மூத்த அதிகாரிகள் ஆய்வு செய்தனர். தடயவியல் துறையினரும் ஆங்காங்கே தடயங்களைச் சேகரித்துக்கொண்டிருந்தனர். பள்ளிக்கூட முதல்வரின் அறையே பெரிய வதைகூடமாகக் காட்சி தந்தது. அங்கே ஒருவர் தன்னுடைய உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து இறந்திருக்கிறார். அவருடன் சேர்ந்து அந்த அறையில் இருந்தவர்களும் உடல் சிதறி இறந்திருக்கிறார்கள். சுவரெங்கும் ரத்தமும் சதைத் துண்டுகளும் அப்பிண்டுகிடக்கின்றன. குண்டு பாய்ந்த அடையாளங்களும் வெடிகுண்டுச் சிதறல் ஊடுருவியதால் ஏற்பட்ட பாதிப்புக்களுமாக அந்த அறையும் பலமாகச் சேதப்பட்டிருக்கிறது. தாஹிரா காஜி என்ற அந்தப் பெண் முதல்வர் இரண்டு மாணவர்களை அணைத்துக்காப்பாற்ற முயற்சி செய்து, அந்த மூர்க்கர்களால் கொல்லப்பட்டிருக்கிறாள். மையமான நிர்வாகக் கட்டடத்தைச் சுற்றியிருந்த நான்கு பெரிய கட்டிடங்களிலும் மாணவர்கள் சடலங்களாக விழுந்துள்ளார்கள். புத்தகப் பைகளும் சாப்பாட்டுப் பொட்டலங்களும் காலணிகளும் பெல்ட்டுகளும் தொப்பிகளும் நாலாபுறங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. ரத்தம் சுவர்களில் தெறித்திருக்கிறது. ஆங்காங்கே சிறிய குளம் போலத் தேங்கி, காய்ந்தும் உறைந்தும் கிடக்கிறது. துர்நாற்றம் மூக்கைத் துளைக்கிறது. நிற்க முடியாத அளவுக்கு வேதனையும் சேர்ந்து கொள்கிறது.

மாணவர்களின் கலை நிகழ்ச்சி, பேச்சுப்போட்டி, விருந்தினர்களின் உரை நிகழ்ச்சி ஆகியவற்றையே பார்த்துப் பழகிய அந்தப் பள்ளிக்கூட அரங்கம், கொலைக்களமாக மாறியிருக்கிறது. அந்த அரங்கிலிருந்து மட்டுமே நூற்றுக்கும் மேற்பட்ட சடலங்கள் கிடைத்ததாகத் தெரிவிக்கின்றனர். ஒருவர்மீது ஒருவராகச் சுட்டுத் தள்ளப்பட்டதால் சடலங்கள் அடுக்கியபடி இருந்திருக்கின்றன.

கொலையாளிகளிடமிருந்து தப்பிக்க மேஜைக்கு அடியில் ஒளியப்பார்த்திருக்கிறார்கள். எவரையும் விட்டுவிடக்கூடாது என்று அந்தக் கயவர்கள் முடிவுசெய்து, மாணவர்களை சட்டையைப் பிடித்து இழுத்து வந்து, துப்பாக்கிக்கு முன்னால் நிறுத்தித் தலையிலேயே சுட்டு ஒவ்வொருவராகக் கொன்றிருக்கிறார்கள். பயங்கரவாதிகள் அரங்கில் நுழைந்தபோதுதான், முதலுதவி செய்வது எப்படி என்று ஒரு ராணுவ அதிகாரி மாணவர்களுக்குச் செயல்விளக்கமாகச் செய்துகாட்டியிருந்திருக்கிறார். அவரும் தப்பவில்லை.

**7 மனித வெடிகுண்டுகள்**

ராணுவம் உள்ளே வந்ததும் 5 மனித வெடிகுண்டுகள் தங்களுடைய உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து, மாணவர்களில் பலரைத் தங்களுடன் சேர்த்து பலி வாங்கிக்கொண்டார்கள். 2 பேர் உள்ளே வந்த ராணுவக் கமாண்டோக்கள் மீதே பாய்ந்து வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார்கள். அதில் கமாண்டோக்களில் 7 பேர் காயம் அடைந்தார்கள். ஒருவருக்கு முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது.

பள்ளிக் கட்டடத்தை ராணுவம் தன்வசம் கொண்டு வந்து விட்டது என்று தெரிந்ததும் ஏராளமானோர் உள்ளே ஓடிவந்தார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியடைய வைத்தது. அடுக்கடுக்காக மாணவர்களின் சடலங்கள், எங்கும் ரத்தம், சிலர் மட்டுமே உயிரோடு முனகிக் கொண்டிருந்தார்கள். இதை நான் பார்க்காமலேயே இருந்திருக்கலாம் என்று கண்ணீரைக் கட்டுப் படுத்திக்கொண்டு சொன்னார் ஒரு ராணுவ அதிகாரி.

**ராணுவத்தின் மீது கோபம்**

இந்தப் பள்ளிக்கூடத்தில் ராணுவத்தினரின் பிள்ளைகளுடன் சிவிலியன்களின் பிள்ளைகளும் படிக்கிறார்கள். தரமான கல்வி கிடைக்கும் என்று அந்தப் பள்ளியில் சேர்த்த அவர்கள், இப்போது ராணுவத்தின் மீதே கோபமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரவாதிகளை அடக்க முடியாமல் எதற்காக ராணுவம் இருக்கிறது, அணுகுண்டும் போர்விமானங்களும் எங்கே போய்விட்டன என்று கோபமாகக் கேட்கிறார்கள். எங்களுடைய உயிரைக் காப்பாற்ற முடியாவிட்டால் ராணுவம் இருந்து என்ன பயன் என்கிறார்கள்.

# வணிகம்



## திருகோணமலை மாவட்ட வர்த்தகர் சங்கத் தலைவராக கலைச்செல்வன்

மூதூர், டிசெ. 24

திருகோணமலை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 19ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் சம்மேளனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 2015 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக மீண்டும் வடிவேல் கலைச்செல்வன் தெரிவுசெய்யப்பட்டார்.

செயலாளராக கு.குலதீபன், பொருளாளராக உதயணன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களுடன் சேர்த்து மூவினத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தும் படியாக 19 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட வடிவேல் கலைச்செல்வன் தனது உரையில், உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் எனவும் திருகோணமலைமாவட்டத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டுகொண்டிருக்கும் தொழில் முயற்சியாளர்கள் எமது சம்மேளனத்தில் இணைத்துக் கொள்ள வேண்டுமெனவும் கூறினார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது சம்மேளத்தின் வளர்ச்சி அதன் அங்கத்தவர்களிலேயே தங்கியுள்ளது. ஆகவே ஒவ்வொரு அங்கத்தவரும் புதிய அங்கத்தவர்களைச் சம்மேளனத்துடன் இணைப்பதற்கு உதவவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சிறுமற்றும் நடுத்தர தொழில் புரிபவர்களுக்காக புதிய பல திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் எனவும், அதன் முதல் கட்டமாக சுய தொழில் புரியும் 100 இளைஞர்கள் அமெரிக்கத் தூதரகத்தின் உதவியுடன் வலுவூட்டப் படுவதுடன் அவர்களின் தொழில் முயற்சிக்கு ஆதரவு வழங்கப் படும் எனவும் தெரிவித்தார்.

(த-40)

## சி.ஐ.சியின் விளையாட்டுக் கழகம் நடத்திய இரத்ததான முகாம்



சி.ஐ.சி. விளையாட்டுக் கழகம் அண்மையில் கொழும்பில் அமைந்துள்ள சி.ஐ.சி. தலைமை அலுவலகத்தில் வைத்து இரத்ததான முகாம் ஒன்றை நடத்தியது. சி.ஐ.சி. ஹால்டிங்க்ஸ் பிஎல்சி முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமந்த ரணதுங்க உள்ளிட்ட பல்வேறு அலுவலக பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் மொத்தமாக 73 பணியாளர்கள் இரத்ததானம் செய்தனர்.

குருதித் தானம் செய்தவர்களை பாராட்டும் முகமாக, பங்கேற்ற பணியாளர்களுக்கு விசேட வெகுமதிப் பொதி ஒன்றும் வழங்கப்பட்டது. இந்த முகாமில் சேகரிக்கப்பட்ட இரத்தம் நாடளாவிய ரீதியில் மருத்துவ சத்திர சிகிச்சை மற்றும் உயிராபத்துள்ள நோய்நிலைகளைக் கொண்டுள்ளவர்களுக்குப் பயன்படுத்தப்படும்.

தமது அனைத்து வர்த்தக நடவடிக்கைகளின் ஊடாகவும் தொடர்ச்சியாக வாழ்க்கைத்தரங்களை மேம்படுத்துவதற்காக சி.ஐ.சி. ஹோல்டிங்க்ஸ் பிஎல்சி பாடுபடுகின்றது.

சி.ஐ.சி. விளையாட்டுக் கழகம், போட்டி மனப்பாங்கு, குழு ஒற்றுமை, ஆரோக்கிய வாழ்க்கை முறை ஆகியவற்றை பணியாளர்களுக்கிடையில் உருவாக்கும் வகையில் அனைவரையும் விளையாட்டுகள் ஊடாக ஒன்றிணைக்கின்றது.

இலங்கையின் முன்னணிச் சிறப்பு நிலை ஒருங்கிணைக்கப்பட்ட ஸ்தாபனங்களில் ஒன்றாக திகழும் சி.ஐ.சி விவசாயம், கால்நடை உணவுகள், ஊட்டச்சத்து, ஆரோக்கிய பராமரிப்பு, கைத்தொழிற்துறை மூலப்பொருள்கள், நுகர்வோர் என பரந்த வர்த்தக தொகுப்பினை கொண்டுள்ளது.

(த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## வாசுகி அறநோக்கு மழலையர் பள்ளிக்கு ஆசிரியர், உதவி ஆசிரியர் தேவை

புதிதாக இலவச மழலையர் பள்ளி உயரப்புலம் ஆனைக்கோட்டையில், உத்துங்க விநாயகர் கோயிலுக்கு அருகில் தை மாதம் 16ஆம் திகதி 2015 முதல் ஆரம்பமாகவுள்ளது.

இப் பள்ளியில் 3+,4+ வயது மழலையரின் அறிவு. திறமைகள் என்பவற்றை வளர்த்தும் ஊக்குவித்தும் ஆரம்ப பாடசாலைக் கல்விக்கு தயார் செய்யப்படுவர்.

தகைமைகள்:

- மழலையர் பள்ளிக்கு கல்வி கற்பிப்பதற்குத் தகுதி பெற்றவர்,
- ஆங்கிலம், கணினி அனுபவம் உள்ளவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.
- நவீன கற்பித்தல் சாதனங்களைக் கையாளக்கூடியவர்.
- ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நேர்முகத் தேர்வுக்கு வரும் போது**

**கல்விச்சான்றிதழ்கள், மேலதிக தகைமைகள் ஆகியவற்றைக் கொண்டுவரவும்**

(Curriculum Vitae). **மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைத்தால் சிறந்தது.**
**நேர்முகத் தேர்வு நடைபெறுமிடம் - 82, உயரப்புலம், ஆனைக்கோட்டை (உத்துங்க விநாயகர் கோயிலுக்கு முன்பாக).**
**மார்கழி மாதம் சனிக்கிழமை 27ஆம் திகதி காலை 9:00 மணி முதல் 12:00 மணிவரை நடைபெறும்.**

“மழலையரின் அனுமதி ஜனவரி 9ஆம் திகதியுடன் முடிவடையும்”

மேலதிக விவரங்களுக்கு:

**வாசுகி அறக்கட்டளை - VASUKI FOUNDATION**
82, உயரப்புலம், ஆனைக்கோட்டை(உத்துங்க விநாயகர் கோயிலுக்கு அருகில்)
vasukifoundation@sriranjan.com
00 44 7841522514
**தொடர்புகளுக்கு :0770365685**
**0766370301**
(55169)(3,8)

## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலி கலாசாலை வீதியில் இரண்டு அறைகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குண்டு. இணைந்த குளியல் அறை மற்றும் குடிதண்ணீர் வசதியுடன்.

தொடர்பு: பாலன்- 077 738 0110,
கரன் - 077 366 4598
(55193) (45.3)

## கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு யாழ் மாநகரில்

இலங்கையின் பஞ்சாபி துணிகளின் இறக்குமதி முன்னோடியான “இந்தியன் செலக்ஷனின்”

## இந்தியன் சல்வார் பஜார்

*காலம்: 22.12.2014 முதல் 31.12.2014 வரை*
*இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.*

மதுபாலா சல்வார், சல்வார் துணிகள் மற்றும் சிறுவர் சிறுமியருக்கான ஆடை வகைகள் மற்றும் ஆண், பெண் இருபாலருக்குமான அனைத்து விதமான ஆடைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

- புத்தம் புதிய டிசைன்கள் — 10% விலைக்கழிவு
- நியாயமான விலை — 25% விலைக்கழிவு
- விலைக்கழிவு — 50% விலைக்கழிவு

**அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றனர் இந்தியன் செலக்ஷன் நிர்வாகத்தினர்**

## BEACON யாழ்நகர்

**2017** கலை வணிகவியல் தொழில்நுட்பப்பிரிவு

**ஆரம்பம்: 03.01.2015**
**காலை 8.00 மணி**

BEACON கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம்.
(54153)(4.3.6)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=
**Hotel Villa City**
422, Galle Road, வெள்ளவத்தை. 072 255 2222
(சி/18379) (4.3.6)

## பணியாளர்கள் தேவை

- பக்க வடிவமைப்பாளர்கள்
- பிறேம் போடுபவர்
- அல்பம் கட்டுநர்
- இரவு நேர பணியாளர் (விடுதி பராமரிப்பு)

சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

முகாமையாளர்,
**மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்**
62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/18295) (4.3.6)

## பணியாளர்கள் தேவை

- கணக்குப் பதிவாளர்,
- சிட்டை எழுதுநர்,
- விற்பனையாளர்
- கணினி தரவு பதியுநர்

T.P. 077 847 3222,
077 873 0114
(55188) (45.6)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் இருந்து எமர்சன் வீதியில் ஒரு கிலோ மீற்றர் தொலைவிற்குள் நவீன வசதிகளுடன் கூடிய விசாலமான 5 படுக்கை அறைகளுடன் சேர்ந்த வீடு 01.01.2015 தொடக்கம் வாடகைக்கு கொடுக்கப்படும். உள்நாட்டு/வெளிநாட்டு தொண்டு நிறுவனங் களுக்கு மிகவும் ஏற்றது. தற்சமயம் UNHCR இற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

தொடர்பு: 077 739 5009
(51312) (45.3)
Email: Meenaragupathy@gmail.com

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனையிலிருந்த கட்டில், செற்றிகள், சாப்பாட்டு மேசை, கதிரைகள், குளிர்சாதனப் பெட்டி, அலுவலகமேசை மற்றும் தளபாடங் கள் உடன் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 79, கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு.- 077 634 3568
(55172) (45.3)




# கேஸ்ட்ரைட்டிஸ்

[இரைப்பை சவ்வு அழற்சி]

நோயை பூரணமாக குணப்படுத்துவதற்காக.

ராஜபுர ஆயுர்வேத சாலையில் இருந்து தயாரிக்கப்பட்ட தேசிய ஔடதம்

## பஞ்சபல அமிர்த பானம்






- வயிறு மற்றும் நெஞ்சு பகுதிகளில் எரிவு.
- கடுமையான தலை வலி.
- இரைப்பையில் புண்.
- பித்த வெடிப்பு
- வயிறு உப்புதல்.
- உடல் மெலிதல்.

தற்போது அனைத்து ஆயுர்வேத கடைகளிலும், பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு
0773131070
ஆயுர்வேத யோக சங்காரஹ சபையில் அனுமதி பெற்ற ஔடதமாகும்.

# உலகச் செய்திகள்

# ஜார்க்கண்ட் ஆட்சியை கைப்பற்றியது பா.ஜ.க.

## சட்டசபைவரலாற்றில் திருப்பம்


சென்னை,டிசெ.24
ஜார்க்கண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீர் தேர்தல்கள் நடைபெற்று முடிவடைந்துள்ளன. இந்த நிலையில் ஜார்க்கண்ட் சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க 41 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இதனால்,பா.ஜ.க சட்டசபையைக் கைப்பற்றி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பீகார் மாநிலத்தில் இருந்து கடந்த 2000 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு புதிய மாநிலமாக உருவான ஜார்க்கண்ட் சட்டசபைக்கு 13 ஆண்டுகால வரலாறு இருந்தாலும், பாஜக தற்போது அதில் புதிய வரலாறை படைத்துள்ளது. நடைபெற்று முடிந்த 5 கட்டத் தேர்தல்களில் பதிவான வாக்குகளின்படி பெரும்பாலான தொகுதிகளில் பா.ஜ.க முன்னிலை வகித்து வந்தது. தற்போது 41 தொகுதிகளில் பா.ஜ.க முன்னிலை வகித்து வருகிறது. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா 18 தொகுதிகளிலும், காங்கிரஸ் 8, ஜார்க்கண்ட் விகாஸ் மோர்ச்சா 6 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

இதுவரை நடந்த தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மைகிடைக்காமல்,இதுவரை பதவியேற்ற எந்தவொரு முதல்வரும் ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சி செய்ததில்லை.

கடந்த 13 ஆண்டுகளில் மட்டும் ஜார்க்கண்ட் மாநிலம் 9 முதல்வர்களையும், மூன்று முறை குடியரசுத் தலைவர் ஆட்சியையும் வகித்தது.

தற்போதுதான் ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஒரு கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க உள்ளது. இந்த வரலாறு பழைய வரலாறுகளை மாற்றி அமைக்கும் என்று மக்கள் நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி)



## சர்ச்சைக்குரிய தீவில் சீன ராணுவத்தளம்

டோக்கியோ, டிசெ. 24
கிழக்கு சீனக் கடலில் உள்ள சர்ச்சைக்குரிய தீவுக் கூட்டத்துக்கு அருகே சீனா பெரிய இராணுவத் தளம் ஒன்றை அமைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜப்பானின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தத் தீவுக்கூட்டங்களுக்கு சீனா உரிமை கோரி வருகின்றது.

இந்தத் தீவுக்கூட்டங்களுக்கு அருகே ராடார் கருவிகளும் விமான இறங்குபாதைகளும் நிர்மாணிக்கப்படுவதாக சீனாவிலிருந்து வரும் தகவல்களை மேற்கோள்காட்டி கியோடோ நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் செஜியாங் மாகாணத்துக்கு அருகே உள்ள தீவுக் கூட்டங்களிலேயே இந்த இராணுவ வசதிகள் ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இங்குள்ள சர்ச்சைக்குரிய தீவுக் கூட்டங்களுக்கு உரிமை கோருவது தொடர்பானபிரச்சினை சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே தீவிரம் அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-ரி)



## சிரியாவில் தொடரும் மோதல்

### இஸ்ரேல் உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

டமஸ்கஸ், டிசெ. 24
கிழக்கு சிரியாவில் உள்ள விமானப் படைத் தளத்தில் புகுந்து ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு இராணுவம் தாக்கியதால் கடும் சண்டை நடந்தது. அதில் 20 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதன் மூலம் விமான படைத்தளத்தை தீவிரவாதிகள் கைப்பற்றும் முயற்சி முறியடிக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து விமானத்தைத் தாக்கும் ஏவுகணைகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் சிரியா எல்லையில் இஸ்ரேலின் ஆளில்லாமல் இயங்கும் விமானம் நேற்று முன்தினம் பறந்ததையடுத்து அதைக் கண்காணித்த சிரிய இராணுவம் அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது. இது குறித்து இஸ்ரேல் இதுவரை எந்தவிதகருத்தும் தெரிவிக்கவில்லை. (ஓ-ரி)



முதல் முறையாக பூமியின் உண்மையான வண்ணத்தைப் ஒளிப்படம் எடுத்து அனுப்பியுள்ளது ஹிமாவரி-8 செயற்கைக்கோள்.

## உத்தரப் பிரதேசத்தில் கடும் குளிர்

### இதுவரையில் 31 பேர் சாவு

உத்தரப் பிரதேசத்தில் கடும் குளிர் நிலவுகிறது. கடும் குளிர் காரணமாக இதுவரை 31பேர் சாவடைந்துள்ளனர்.

கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் 8 பேரும் அலிகார், கான்பூர், மீரட் மொராதாபாத் உள்ளிட்ட இடங்களில் 14 பேரும் உயிரிழந்துள்ளனர். இதுவரை கடும் குளிரில் சிக்கி 31பேர் உயிரிழந்தனர். பனி காரணமாக 150 ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டதுடன் ஏர் இந்தியா விமானம் 6 மணி நேரம் தாமதமாக புறப்பட நேர்ந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி)

## பிணத்திலிருந்து பரவும் எபோலாத் தொற்று

உயிருடன் இருக்கும் மனிதரைவிட இறந்த மனிதரது சடலத்திலிருந்து எபோலா நோய் பரவுவதற்கு 10 மடங்கு அதிக வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிணத்திலிருந்து எபோலா பரவுவதால், எபோலாவால் இறந்தவர்களின் இறுதிச்சடங்கை பாதுகாப்பாக மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் உயிர்க்கொல்லி நோயான எபோலாவுக்கு ஏராளமானோர் சாவடைந்துள்ளனர். சியாரா லியோனில் மட்டும் இதுவரை 2000 பேர் எபோலாவால் இறந்திருக்கின்றனர். இதில் 70 சதவீதத்தினர் எபலோ நோயால் உயிரிழந்தவர்களின் உடலை பாதுகாப்பற்ற அடக்கம் செய்யும் முறையால் எபோலா நோய்த் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்கள் என்று வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பாரம்பரிய முறைப்படி அடக்கம் செய்பவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கும் அளவுக்கு எபோலா நோயால் உயிரிழப்போரின் இறுதிச்சடங்கு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.


இதனால் சியரா லியோனில் எபோலாவால் இறப்பவர்களின் உடல்களை இறுதிச்சடங்கின் போது உறவினர்கள் தொடுதல் அல்லது கழுவுதல் போன்ற பாரம்பரிய அடக்கம் செய்யும் முறைகளை கைவிட வேண்டும் என அரசு வலியுறுத்தி வருகிறது. (ஓ-ரி)

## துனிசிய அதிபர் தேர்தலில் எசெப்சி வெற்றி

துனிஷ், டிசெ. 24
துனிசிய நாட்டு அதிபர் தேர்தலில் 88 வயதான எசெப்சி வெற்றியடைந்துள்ளார். வடக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான துனிசியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மக்கள் புரட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 30 ஆண்டுகளாக அதிபராக இருந்த சர்வாதிகாரி ஷின்எல்அபிடின்பென்அலி பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அங்கு ஜனநாயக முறையில் முதன் முறையாக சமீபத்தில் அதிபர் தேர்தல் நடந்தது. அதில் முன்னைய அரசின் தற்காலிக அதிபர் மன்செப் மார்சோகியும், 88 வயது மூத்த அரசியல்வாதி பெஜிகாய்ட் எசெப்சியும் போட்டியிட்டனர். இந்த நிலையில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில் எசெப்சி 55.6 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மன்செப் மார்கோகி 44.32 சதவீதவாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார். தேர்தலில் வெற்றி பெற்றுள்ள எசெப்சி பதவி இழந்த அதிபர் பென் அலியின் ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்ற சபாநாயகராகவும், வெளியுறவு மற்றும் உள்துறை மந்திரி ஆகவும் பதவி வகித்தவர் ஆவார். (ஓ-ரி)


## சக குரங்கின் உயிரை காப்பாற்றிய குரங்கு



கான்பூர், டிசெ. 24
ரயில் நிலையத்தில் அடிபட்ட சக நண்பனின் உயிரைக்காப்பாற்றுவதற்காகத் தனது உயிரைப் பணயம் வைத்து, 20 நிமிடங்கள் போராடிய குரங்கொன்று எப்படியோ தனது நண்பனது உயிரைக் காப்பாற்றியது.

பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த கான்பூர் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம், குரங்கொன்று ரயில்வே உயர் மின்னழுத்தக் கம்பியில் சிக்கி மின்சாரம் தாக்கி திடீரென ரயில்வே தண்டவாளத்தில் விழுந்தது. இதைப் பார்த்த பயணிகள் அது இறந்து விட்டதென்று நினைத்த போதிலும் ஓடி வந்த மற்றொரு குரங்குகொன்று தண்டவாளத்தில் விழுந்து கிடந்த குரங்கைத் தூக்கி இழுத்து ஓரமாகக் கொண்டு வந்தது. பின்னர் அதை நன்றாகக் குலுக்கி ஆசுவாசப்படுத்தியது. அதோடு நிற்காமல் தண்டவாளங்களுக்கிடையே தேங்கியிருந்த தண்ணீரில் அதை முழ்கடித்துத் தூக்கியது. ஒருகட்டத்தில் அதற்கு சுய நினைவை வரவழைப்பதற்காக கடித்துப் பார்த்தது.

தொடர்ந்து 20 நிமிடப் போராட்டத்திற்குப் பிறகு, காயமடைந்த குரங்கை பாதுகாப்பான இடத்திற்கு இழுத்துச் சென்றது. அப்போது மெதுவாக அந்தக் குரங்கு தனது கண்களைத் திறந்தது. இந்த நெகிழ்ச்சியான நிகழ்வை அங்கு கூடியிருந்த பலர் கண்டு மனது நெகிழ்ந்தனர். (ஓ-ரி)



கொலம்பியாவின் காலி நகரத்தில் மரபுரீதியான காளையை அடக்கும் போட்டி நடைபெற்றுள்ளது. அந்தக் காளையுடனான சண்டையில் காளையை ஏமாற்றி அதனிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக அந்த நாட்டைச் சேர்ந்த காளையை அடக்கும் வீரர் ஒருவர் கயிறுகள் எதுவுமின்றி காளையை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

# ஐ.எஸ்.தீவிரவாதிகளின் வசிப்பிடங்கள் தரைமட்டம்

## அமெரிக்கா வான்வழித் தாக்குதல்

வொஷிங்டன், டிசெ.24

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றி ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து அப்பகுதிகளில் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகள் ஈடுபட்டு உள்ளன. அமெரிக்கா போர் விமானங்கள் மூலமாக ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்படுகின்றன.



இந்த நிலையில், ஈராக் மற்றும் சிரியாவில் தற்போது 16 முறை வான்வழிதாக்குதல் நடத்தி இருப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈராக்கின் வடக்கு பகுதியில் சின்ஜார் அருகே 4 முறை போர் விமானங்கள் மற்றும் வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசிப்பிடங்கள், வாகனங்கள், போர்த்தளவாடங்கள் அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. தால்அப்கார், ரமாடி, மொசூல், பாய்ஜி ஆகிய நகரங்களையும் குறி வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சிரியாவில் துர்கிஷ் எல்லைப்பகுதியில் உள்ள கோபானி நகர் அருகே 3 முறை தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. (ஒ–ரி)



## ரஷ்ய சுரங்கத்தில் 30 ஆயிரம் வைரங்களுடன் பாறை கண்டுபிடிப்பு

மொஸ்கோ, டிசெ. 24

ரஷ்யாவில் உதாசபையா என்ற இடத்தில் மிகப்பெரிய வைரச் சுரங்கம் உள்ளது. சமீபத்தில் இங்கு பாறைகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. அதில் ஒரு பாறை சிவப்பு மற்றும் பச்சை நிறத்தில் இருந்தது. அந்த பாறை முழுவதும் வைரக்கற்களால் ஜொலித்தது. அந்தப் பாறைக்குள் மொத்தம் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வைரங்கள் இருந்தன. இந்த வைரங்கள் 1 முதல் 6 கரட் நிறை கொண்டவை. இவை அனைத்தும் ஒன்றாகத் திரண்டு உள்ளன. அது 2 பிரமிட்டுகள் இணைந்துள்ளமை போன்ற வடிவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)

## விண்ணில் மிதக்கும் நகரம் வெள்ளிக்கிரகத்தில் ஆய்வு



வெள்ளிக் கிரகத்தில் ஆய்வுகள் மேற்கொள்ள மனிதர்களைத் தாங்கிச் செல்லும் சிறப்பு விண்கலன்களை அனுப்பிவைக்கவும் செலுத்தவும், அங்கே மனிதர்கள் வசிக்கும் விதமாக விண்ணில் மிதக்கும் நகரமொன்றை அமைக்கவும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா திட்டமிட்டு வருகிறது.

இது குறித்து, நாஸாவின் விண்வெளிப் பயண ஆய்வுப் பிரிவைச் சேர்ந்த டேல் ஆர்னி, கிறிஸ் ஜோன்ஸ் ஆகியோர் கூறுகையில் பூமியைப் போன்ற சுற்றுச்சூழல் வெள்ளிக் கிரகத்தில் உள்ளது என நம்ப இடமுள்ளது. அதன் தரைப்பரப்பை ஆராயும் முன்பு, அதன் விண்வெளிப் பகுதியை ஆராய ஒரு விண்கலனைச் செலுத்த திட்டமிட்டு வருகிறோம்.

தற்போதைய தொழில் நுட்பத்துடன், மனிதர்கள் வெள்ளிக் கிரகத்துக்குச் சென்றுதிரும்ப 440 நாள்கள் செலவாகும்.

வெள்ளிக்கிரகத்தின் வான்வெளிப் பகுதியில், பூமியைவிடச் சற்றுக் குறைவான ஈர்ப்புச் சக்தி உள்ளது.

அந்தக் கிரகத்தில் போதுமான ஆய்வுகளை மேற்கொண்ட பிறகு, மிதக்கும் நகரம் ஒன்றை அமைக்க இயலும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ஒ–ரி)

# கத்தோலிக்கத் திருச்சபையின் நடைமுறைகளுக்கு பாப்பரசர் விமர்சனம்



கத்தோலிக்கத் திருச்சபையின் நிர்வாகக் கட்டமைப்பை, பாப்பரசர் பிரான்சிஸ் மிகக் கடுமையாக தாக்கிக் கருத்து வெளியிட்டுள்ளார்.

திருச்சபையின் உயர்மட்டத்திலுள்ள கர்தினால்கள், ஆயர்கள் மற்றும் மதகுருமார்கள் ஆகியோரிடையே தனது கிறிஸ்மஸ்தின உரையை நிகழ்த்தும் போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்.

கத்தோலிக்க நிர்வாகக் கட்டமைப்பினர் இடையே இருக்கும் அதிகார மமதை, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் குணம், தாங்கள் வல்லவர்கள் என்பதை வெளிக்காட்டிக்கொள்ளும் போக்கு, ஆன்மிக விடயங்களை வசதியாக மறந்துவிடும் வழக்கம் ஆகியவை கத்தோலிக்கத் திருச்சபையின் நிர்வாகக் கட்டமைப்பில் புரையோடிப் போயுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதிகாரப் பேராசை, தீவிரவாதம் போல வதந்திகளைப் பரப்புதல் உள்ளிட்ட 15 பாவங்கள் அவர்களை ஆட்டிப்படைப்பதாகவும் பாப்பரசர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் புத்தாண்டில் இந்தப் பாவங்கள் குறித்து அவர்கள் மனம் வருந்தி பிராயச்சித்தம் தேடுவார்கள் என்று தான் நம்புவதாகவும் பாப்பரசர் பிரான்சிஸ் தனது உரையில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது கடுமையான விமர்சனங்களை கூடியிருந்தவர்கள் கரகோஷம் எழுப்பி வரவேற்றனர். (ஒ–ரி)

# ஸ்பெயினின் இளவரசி மீது வரி மோசடிக் குற்றச்சாட்டு

மட்ரிட், டிசெ. 24



ஸ்பெயின் இளவரசி கிறிஸ்டினா டெ போர்போன் மீதான வரி மோசடிகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை நடத்த நாட்டின் நீதிபதி ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

ஸ்பெயின் இளவரசி கிறிஸ்டினா டெ போர்போன் இளவரசி கிறிஸ்டினா ஸ்பெயின் மன்னரின் சகோதரியாவார்.

அவர் தனது கணவரும் முன்னாள் ஒலிம்பிக் கைப்பந்து வீரருமான இன்யாக்கி உர்டான்கரீனின் நிதிமோசடிகளுக்கு உடந்தையாக இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

உர்டான்கரீன் தாம் நடத்திவந்த ஒரு அறக்கட்டளையிலிருந்து, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தில் பல மில்லியன் டொலர்களை சூறையாடினார் என்று சந்தேகிக்கப்படுகிறார்.

ஸ்பானிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்த எவரும் இதுவரை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை எதிர்கொண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இளவரசி கிறிஸ்டினாவும் அவரது கணவரும் தாங்கள் தவறேதும் இழைக்கவில்லை என்று கூறி, தங்கள் மீதானக் குற்றச்சாட்டை மறுக்கின்றனர். (ஒ–ரி)



## ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் பறக்கும் நவீன விமானம் தயார்

லண்டன், டிசெ. 24

உலகின் எந்த மூலைக்கும் நான்கே மணி நேரத்தில் செல்லக் கூடிய வகையில் ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் செல்லும் நவீன ரக விமானத்தை இங்கிலாந்தைச் சேர்ந்த ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தயாரித்து வருகின்றது. தரையில் இருந்து புறப்படும் போது சாதாரண விமானத்தின் வேகத்திலும், புவி ஈர்ப்பு சக்திக்கு மேற்பட்ட உயரத்தில் பறக்கும் வேளையில் றொக்கெட் வேகத்திலும் பயணிக்கும் இந்த விமானத்தைத் தயாரிக்கும் இரண்டாம்கட்ட முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன. (ஒ–ரி)

# பல்சுவை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத் தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 200 | 200 | 180 | 240 | 160 | 240 | 160 | 200 | 160 |
| கரட் | 120 | 240 | 170 | 200 | 180 | 240 | 220 | 240 | 220 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 50 | 40 | 60 | 80 | 60 | 20 |
| பயிற்றை | 300 | 280 | 300 | 300 | 200 | 240 | 200 | 280 | 250 |
| பாகல் | 400 | 300 | 400 | 320 | 220 | 260 | 120 | 280 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 50 | 280 | 50 | 90 | 200 | 120 | 45 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 140 | 120 | 120 | 160 | 100 | 180 | 120 |
| சி.வெங்காயம் | 80 | 90 | 120 | 100 | 100 | 120 | 140 | 160 | 90 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 | 35 | 60 | 70 | 80 | 35 |
| தக்காளி | 220 | 180 | 200 | 200 | 180 | 240 | 120 | 260 | 170 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 100 | 70 | 120 | 60 | 140 | 80 |
| கீரை | 60 | 50 | 70 | 20 | 40 | 50 | 30 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 50 | 30 | 40 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 500 | 400 | 400 | 350 | 500 | 600 | 800 | 500 |
| புடோல் | 140 | 140 | 120 | 140 | 140 | 140 | 140 | 160 | 90 |
| கோவா | 120 | 120 | 130 | 200 | 120 | 160 | 100 | 180 | 90 |
| வெண்டி | 200 | 100 | 160 | 140 | 140 | 140 | 150 | 160 | 80 |
| போஞ்சி | 180 | 220 | 200 | 200 | 200 | 180 | 220 | 140 | 100 |
| லீக்ஸ் | – | 260 | 300 | 300 | 280 | 400 | 200 | 300 | 250 |
| தேங்காய் | 50 | 50 | 45 | 30 | 40 | 40 | 50 | 55 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 85 | 80 | 100 | 100 | 90 | 120 | 100 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 60 | 80 | 80 | 60 | 120 | 120 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வ்ர வேண்டும். சில கட்டங்கள் ஏற்க னவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நாளை

**மார்கழி-10 வியாழக்கிழமை**
**25.12.2014**

திதி: சதுர்த்தி பி.இ.12.14 வரை
நட்சத்திரம்:திருவோணம் பி.ப.04.58 வரை
சுபநேரம்: 07.56-09.26 வரை
இராகுகாலம்: 01.56-03.26 வரை
சதுர்த்தி விரதம், நத்தார்

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | | | 5 | | | 7 | 4 |
| | 3 | | | 7 | 6 | 9 | | 8 |
| | | | | 8 | | | 1 | |
| 6 | | | | | | 5 | 3 | |
| | | 1 | 3 | 2 | 7 | 8 | | |
| | 8 | 3 | | | | | | 1 |
| | 7 | | | 9 | | | | |
| 1 | | 8 | 5 | 3 | | | 6 | |
| 2 | 6 | | | 4 | | | 5 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 9 | 5 | 2 | 7 | 8 | 4 | 1 |
| 5 | 4 | 2 | 1 | 8 | 9 | 6 | 7 | 3 |
| 8 | 7 | 1 | 3 | 4 | 6 | 2 | 5 | 9 |
| 4 | 1 | 5 | 2 | 3 | 8 | 9 | 6 | 7 |
| 3 | 9 | 8 | 6 | 7 | 4 | 1 | 2 | 5 |
| 7 | 2 | 6 | 9 | 1 | 5 | 3 | 8 | 4 |
| 1 | 8 | 4 | 7 | 9 | 2 | 5 | 3 | 6 |
| 2 | 5 | 3 | 4 | 6 | 1 | 7 | 9 | 8 |
| 9 | 6 | 7 | 8 | 5 | 3 | 4 | 1 | 2 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத் தீவு | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 700 | 1000 | 700 | - |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 600 |
| கணவாய் | 500 | 600 | 500 | 800 | – | – |
| பாரை | 450 | 500 | 400 | 600 | – | 400 |
| சுறா | 550 | 500 | – | 600 | 800 | 500 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | – |
| விளை | 400 | 400 | 350 | 400 | 700 | 370 |
| முரல் | 250 | 250 | 300 | 400 | 200 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | – | – |
| கிழாக்கன் | 250 | 500 | 350 | 300 | – | – |
| ஒரா | 250 | 200 | 350 | 400 | 250 | – |
| திரளி | 200 | 250 | 240 | 200 | 200 | – |
| நகரை | 200 | 250 | 200 | 200 | – | – |
| சூடை | 100 | 100 | 120 | – | 200 | 140 |
| ஒட்டி | – | 250 | 250 | 300 | – | 200 |
| திருக்கை | 100 | 350 | 150 | 150 | 200 | - |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மற்றவர்களுக்கு நம்பிக்கை கொடுங்கள்

தாங்களாகவே சிந்திக்காதவர்கள் சமய உலகில் நுழையாதவர்களே. அவர்கள் ஒரு மீன் போன்ற வாழ்க்கையைத் தான் வாழ்கிறார்கள். அவர்கள் சிந்திக்கமாட்டார்கள். அவர்கள் சமயத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆகவே எதையாவது சிந்தியுங்கள். கடவுளை நோக்கிப் போராடிச் செல்லுங்கள். தோல்வியுற்றால் பரவாயில்லை. ஒரு பைத்தியக்காரக் கொள்கையை உருவாக்கினாலும் பரவாயில்லை. தொடர்ந்து உழையுங்கள். வேலையின்றி இருப்பதன் விளைவு சாவு தான். செயல் புரியுங்கள். எங்கு செயல் நிகழ்கிறதோ அங்கு வேறுபாடு இருக்க வேண்டும். வேறுபாடுதான் வாழ்க்கைக்கு சுவை ஊட்டுகிறது. அதுதான் எல்லாவற்றின் அழகும் கலையுமாகும். வேறுபாடுதான் இங்கு எல்லாவற்றையும் அழகாகத் தோன்றச் செய்கிறது. வேறுபாடுதான் வாழ்க்கையின் சின்னம். அதைக் கண்டு நாம் ஏன் பயப்படவேண்டும். தீர்க்கதரிசிகளை புரிந்து கொள்ளும் நிலைக்கு நாம் வந்து கொண்டிருக்கிறோம். எங்கு உண்மையான சிந்தனையும் கடவுளின் மீது அன்பும் உள்ளதோ அங்கு ஆன்மா கடவுளை நோக்கி வளர்ந்துள்ளது. அவ்வப்போது கடவுளை ஒரு கணம் கண்டுள்ளது. மனிதனைக் காப்பாற்றும் சக்தி எல்லாச் சமயங்களுக்கும் ஒன்றுதான் என்பதை நாம் உணரவேண்டும். சமயங்களுக்கிடையேயான வித்தியாசம் என்பதெல்லாம் மூடநம்பிக்கைகளேயாகும். எல்லோருக்கும் ஒரே கடவுள் தான் இருக்கிறார். ஆன்மாவைக் காப்பாற்றுவதோ அல்லது முக்தியடையும்படி செய்வதோ கடவுள் தான். கடவுள் தான் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறார். மற்றவர்களுடைய நம்பிக்கையை அழிக்க நினைக்காதீர்கள். முடிந்தால் சிறந்த ஒன்றை அவனுக்குக் கொடுங்கள். முடிந்தால் ஒரு மனிதன் எங்கு நிற்கின்றானோ அங்கிருந்து அவனை முன்னுக்குத் தள்ளுங்கள். அப்போது நீங்களும் வெற்றிபெறுவீர்கள்.



## தூதுவளையின் நன்மைகள்

தூதுவளை இலை 15 கிராம் அளவில் சேகரித்து 500 மில்லி தண்ணீரில் போட்டு 200 மில்லியாக சுண்டக் காய்ச்சி வடிகட்டி 30 முதல் 40 மில்லி வரை ஒரு நாளைக்கு மூன்று வேளை இந்த கஷாயத்தைச் சாப்பிட்டு வந்தால், இருமல், இரைப்பு, சளியுடன் கூடிய காய்ச்சல், சயரோகக் காய்ச்சல் குணமாகும். இருபது கிராம் தூதுவளை இலையை நெய்யில் வதக்கி துவையலாகவோ, சட்னியாகவோ, பச்சடியாகவோ தயாரித்து பயன்படுத்தினால், மேற்கண்ட நோய்கள் குணமாகும். இப்படி தயாரித்த துவையலை சாப்பிடும்போது காலை, மதியம், இரவு நேர உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் நல்ல பலனை உடனே பெற முடியும். இவ்வாறு வாரத்தில் இரண்டு தினங்களாவது சாப்பிட்டு வந்தால் நோய்த் தடுப்பாகவும், நோய் தீர்க்கவும் பயன்படும். நுரையீரல் வலுவடையும். தூதுவளை இலையைப் பொடி செய்து வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். இந்தப் பொடியை உபயோகிப்பதால் சளி, இருமல் நீங்குகிறது. பசியை உண்டாக்குகிறது. ஆஸ்துமா நோயாளிகள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம். தூதுவளை இலையை நெய்யில் வதக்கி, துவையல் செய்து வாரத்தில் இரண்டு நாளாவது பயன்படுத்தினால் வாயுவைக் கண்டிக்கும். உடல் வலிமை ஏற்படும். மூலரோகப் பிணிகள் குறையும். ஆஸ்துமா நோயாளிகள், காலைவேளையில் வெறும் வயிற்றில் தூதுவளைச்சாறு 50 மில்லியளவு சாப்பிட்டு வந்தால், ஆஸ்துமாவினால் ஏற்படும் சளி, இருமல் கபத்தைப் போக்கும்.




சூரியனில் குரு பகவானுடைய பலன் சேருகிறது. நல்ல உயரமும், செந்நிறமும் கொண்டவர். தலைமுடி சுருட்டையாகவும், கருகருவென்றும் அமைந்திருக்கும். புருவங்கள் நன்கு நீண்டு வளைந்திருக்கும். முகம் உருண்டையாகவும் மேல் நெற்றி மேடாகவும் இருக்கும். கண் அழகாகவும் காட்சியளிக்கும்.

**1 கூட்டெண் பலன்கள் 1-3**

அழகாக ஆணித்தரமாகப் பேசுவார். இவரது பேச்சில் அளவாகவும், யோசனைகள் இலாவகமாகவும் அமையும். பிறருக்கு ஏற்றால் போல் பேசும் தன்மை கொண்டவர். எதையும் ஆழமாகச் சிந்தித்துச் செயற்படுபவர். சோம்பலின்றி உழைப்பவர்.

அமைதியாகப் பேசுவதும், நடப்பதும் இவருடைய இயல்பு. சிக்கனமாகச் செலவு செய்யும் குணம் கொண்டவர்.

பெரிய குடும்பத்தில் பிறந்தவர். மனமொத்த வாழ்க்கைத் துணைவி அமைவார். இவரது வருமானத்தில் தான் குடும்பம் நடக்கும். தமது உழைப்பாலும், புத்தியாலும், கல்வி அனுபவத்தாலும் வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்ந்திடுவார்.

சாஸ்திரம், ஜோதிடம், பூஜை, யோகம் எனப் பல நல்ல துறைகளில் அறிவைச் செலுத்துவார். கணக்கு, சினிமா, அரசியல், பொதுநலம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர். இவர்கள் பிறரிடம் வேலை செய்வதால் விரயம் ஏற்படும்.

வயிற்று உபாதை, தோல் வியாதி, கட்டிகள், குறைந்த இரத்த அழுத்தம், கபம், மலேரியாக் காய்ச்சல், பித்த வாந்தி முதலிய நோய்கள் தாக்கலாம்.

சூரியனுடன் ராகு சேர்ந்த ஆதிக்கம். இவர் இரட்டை நாடி சரீரமாக உயரத்துடன் ஆஜானுபாகுவாக இருப்பவர். முதலில் மெலிந்த தோற்றம் இருந்தாலும் நாளடைவில் வாட்டசாட்டமாக மாறிவிடுவர். மாநிறமாக இருப்பர். சதுரமான முகமும் எடுப்பான மூக்கும் உடையவர். பற்கள் வரிசையாகவும் கண்கள் மேனாகவும் இருக்கும்.

இவர் தெய்வ நம்பிக்கை உடையவர். ராஜ தோரணையும் பண்டைய பழக்க வழக்கங்களை மதித்து நடப்பவர். சூழ்நிலைக்கேற்ப நடக்கும் திறன் கொண்டவர். நன்கு பேசும் திறமையும், சாத்திர சம்பிரதாயப்படி நடக்கும் குணமும் கொண்டவர். சாதாரண நிலையிலும் தன்னம்பிக்கையுடன் உழைத்துப் போராடி முன்னேறுவர். அனைத்து விடயத்திலும் ஓரளவு அறிவு பெற்று இருப்பவர். யாராலும் வெறுக்கப்படாத மனிதராக வாழ்வார்.

**1 கூட்டெண் பலன்கள் 1-4**

சுக நாட்டமுடைய இவர்கள் சரீர சுகம், வசதிகளை விரும்புவர், சாதா ரண நிலையிலிருந்து குடும்ப நிலையை உயர்த்துவர். குடும்ப வாழ்க்கையில் சிரமம் இருக் கும். சகோதர, சகோதரி, உற்றார் உறவினருடன் ஒன்றாக வாழவே விரும்புவர்.

இவ்வெண்காரர்கள் அரச அதிகாரிகளாக இருப்பர். அச்சகம், பத்திரிகை, எழுத்து, சினிமா தொழிற்சாலைகளில் வேலை புரிவர். எத்தொழிலும் இவரால் சிறப்பாகச் செய்யப்படும்.

வாயு தொடர்பான நோய்களும், உடல் பருமன் போன்றவை குறையாகும். இரத்த அழுத்தம், ஆஸ்துமா, மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற பாதிப்பு ஏற்படும்.




# கட்டுப்பாடா....? ஆணாதிக்கமா...?

பி.சுபீகா

இந்தச் சமூகம் பெண்களுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குப் பஞ்சமே இல்லை. பின் தூங்கி முன் எழ வேண்டும், பொது இடத்தில் சத்தம் போட்டுச் சிரிக்கக் கூடாது, 'அடக்க'மாக நடந்து கொள்ள வேண்டும், தலைமுடியை விரித்துப் போடக் கூடாது, மாலை ஆறு மணிக்குள் வீடு திரும்ப வேண்டும், ஆண்பிள்ளைகளுடன் விளையாடவோ, பேசவோ கூடாது என ஏராளமான கட்டுப்பாடுகள் காலம் காலமாக பெண்களுக்கு வலியுறுத்தப்பட்டுவருகின்றன. பேதைப் பருவம் தொடங்கிப் பேரிளம் பெண் பருவம் கடந்து மூதாட்டி ஆனாலும் இந்த மூடக் கருத்துகள் பெண்கள் மீது திணிக்கப்படுகின்றன. நவீன அறிவியலும் நவீனமயமான வாழ்வும் இவற்றில் பலவற்றை வழக்கொழியச் செய்துவிட்டாலும், இந்தக் கட்டுப்பாடுகளுக்குப் பின்னால் இருக்கும் பார்வைகள் பெரிதாக மாறிவிடவில்லை. அந்தப் பார்வைகள் வெவ்வேறு வடிவங்களில் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளவே செய்கின்றன. அதன் வடிவங்களில் ஒன்றுதான் உடைக் கட்டுப்பாடு. பெண்களை ஓயாமல் துரத்தும் கட்டுப்பாடுகளில் ஒன்று இது. இந்த நாட்டின் கலாசாரக் காவலர்களுக்கு பெண்கள் அணியும் உடை மீது எப்போதும் ஒரு கண். இந்த நாட்டின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் சுமந்து திரியும் கருவியாக இவர்கள் பெண் உடலையே பார்க்கிறார்கள். ஒரு பெண் தனது உடலை முழுவதுமாக மறைத்துக்கொண்டு வீதியில் சென்றால் மட்டும், அவளுக்கு எதிரான வன்முறைகள் நிகழாமல் இருந்துவிடுமா? பாதிப்புக்குள்ளான பெண்கள் உடை விடயத்தால்தான் அந்த பாதிப்புக்கு உள்ளானார்களா? உடைக் கட்டுப்பாட்டினால் வன்முறையையும் குற்றங்களையும் குறைத்து ஒழுக்கத்தை நிலை நாட்ட முடி யாது. ஆடைகள் நமது உடலை மறைத்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டவையே. அவை எம்மைப் பாதுகாக்கும் கவசம் அல்ல. தவிர, உடை என்பது வெறும் கடமைக்காக அணிவதல்ல. உடையில் ஒருவரது விருப்பம்; அழகுணர்ச்சி, சுதந்திர உணர்ச்சி ஆகியவை வெளிப்படுகின்றன. இவற்றை வெளிப்படுத்தும் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் தேவை. குறிப்பாக, சுதந்திரச் சிந்தனைகள் அதிகமாக இருக்கும் இளம் பருவத்தினருக்கு இது அவசியம் தேவை. எந்த உடை 'கண்ணியமானது', எது 'கவர்ச்சிகர மானது', எது 'ஆபாசமானது' என்பவை எல்லாம் நபருக்கு நபர், சூழலுக்குச் சூழல் மாறுபடக்கூடிய அளவுகோல்கள். ஒருவருக்கு கண்ணியமானதாகத் தெரியும் உடை இன்னொருவர் கண்ணுக்கு ஆபாசமானதாகத் தெரியலாம். ஒரு சிலர் எதை அணிந்தாலும் பிறர் கண்ணுக்கு வசீகரமாகத் தெரியலாம். இவற்றையெல்லாம் பொதுமைப்படுத்தவே முடியாது. எனவே எந்த உடையை அணிய வேண்டும் என்பதை முடிவு செய்யும் உரிமையையும் பொறுப்பையும் அவரவருக்கே விட்டுவிடுவது தான் பக்குவமான சமுதாயத்தின் அணுகுமுறையாக இருக்க முடியும். அதே சமயத்தில், ஒரு சூழல், குறிப்பிட்ட ஒரு தருணம் ஆகியவை சார்ந்து தமக்குத்தாமே விதித்துக்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகளைப் பெரும்பாலான பெண்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.



# இன்றைய பெண்கள்

பி.குருசரன்

பெண்கள் வேலைக்குச் செல்வதால், அவர்களுக்குத் தன்னம்பிக்கை கிடைக்கிறது, அது பொருளாதாரச் சுதந்திரமும் பாலியல் சுதந்திரமும் கிடைக்க வழிவகுக்கிறது. நமது அம்மாக்கள், பாட்டிகள் காலத்தில் வேறு வழியில்லாமல் கணவரிடம் மனைவிகள் பொறுமையைக் கடைப்பிடித்து, எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் பெண்கள் கணவரிடம் நெருக்கமாக இருக்கவோ, அவருடன் தனியாக வெளியே போகவோ அதிக வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால் காலம் மாறி வருகிறது. இன்றைய பெண்கள் கட்டுப்பெட்டித் தனங்களை, முட்டாள் தனங்களை ஏற்றுக் கொள்வதில்லை. அதே நேரம் அளவுக்கு மீறி எதிர்பார்ப்பதும் இல்லை. பெண்ணின் கர்வம், அகங்காரம் என்று இது அடையாளப்படுத்தப்பட்டாலும்கூட, அது உண்மையில்லை. பெண்கள் வேலைக்குச் செல்வதை மதிக்கக் கற்றுக் கொள்வது தான் சரியானது. தங்களுக்கு எது சரியாக இருக்கும் என்று முடிவெடுக்கப் பெண்களுக்கு ஓரளவு வாய்ப்பு உருவாகி இருக்கிறது. அறிவுபூர்வமாகவும், கலந்து பேசுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இதுவும் நல்ல மாற்றமே.

# செய்திகள்




**கண்ணீர் அஞ்சலி**

**முருகன் நாகமுத்து**

மலர்வு 1947.03.19 — உதிர்வு 2014.11.24

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் **நா.வாசுதேவன்** ஆசிரியரின் தந்தை **முருகன் நாகமுத்து** அவர்கள் 24.11.2014 அன்று சிவபதமடைந்ததையிட்டு எமது பாடசாலை ஆசிரியர் கழகம் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**ஆசிரியர் கழகம்** (55093)(4.3.6)

**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**


## திருக்கேதீச்சர ஆலயம் புனரமைக்க இந்தியாவிலிருந்து சிற்பங்கள்




கொழும்பு, டிசெ.24

இந்திய அரசின் அனுசரணையில் இலங்கையில் பாடல் பெற்ற புனித ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீச்சர ஆலயப் புனர் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான கருங்கற் சிற்பங்கள் இந்தியாவில் மகாபலிபுரத்தில் செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்படுகின்றன. இதன் இரண்டாம் கட்டமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இந்த வாரம் கொண்டுவரப்பட்ட கருங்கற் சிற்பங்கள் திருக்கேதீச்சர ஆலய வளாகத்தில் வாகனத்திலிருந்து இறக்கப்படுவதையும் இங்கு காணலாம். (வ)

## நத்தார் திருப்பலி

குருநகர், டிசெ.24

யாழ். மரியன்னை பேராலயத்தில் நத்தார் திருப்பலிகள் இன்று புதன் நள்ளிரவு 11.45 மணிக்கும், நாளை வியாழக்கிழமை காலை 6 மணி மற்றும் காலை 7.15 மணிக்கும் இடம்பெறும் என்று பங்குத்தந்தை வண. பிதா ஆர்.எச்.சகாயநாயம் அடிகளார் அறிவித்துள்ளார். நள்ளிரவுத் திருப்பலியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஒப்புக்கொடுப்பார். (ஓ-51)

★★★

யாழ். நகர் அஞ்சனந்தாழ்வு புனித வேளாங்கண்ணி ஆலயத்தில் நத்தார் திருப்பலி இன்று நள்ளிரவு 11.45 மணிக்கு இடம்பெறும் எனவும் நாளை வியாழக்கிழமை திருப்பலி எதுவும் இடம்பெறாது எனவும் நாவாந்துறைப் பங்குத் தந்தை நேற்றுத் தெரிவித்தார்.

★★★

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நத்தார்த் திருப்பலிகள் இன்று நள்ளிரவு 11.30 மணிக்கும் நாளை காலை 5.30 மணிக்கும் இடம்பெறும். குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் நாளை காலை 7 மணிக்கு திருப்பலி இடம்பெறும். (ஓ-51)

## திருப்பலி பூசை

தென்மராட்சி, டிசெ. 24

சாவகச்சேரி, கச்சாய்வீதி புனித லிகோரியார் தேவாலயத்தில் பாலன் பிறப்பை ஒட்டிய திருப்பலி பூசை இன்று நள்ளிரவு 11.30 மணிக்கு இடம்பெறும்.

நத்தார் திருப்பலி பூசை நாளை காலை 7 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## நினைவின் கனவு ஆற்றுகை இன்று

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை மாணவர்களது பங்களிப்புடன் நினைவின் கனவு சமூக நாடக ஆற்றுகை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தப்படவுள்ளது. (வ)

## பொன்னாலை வரதராஜருக்கு இன்று கொடி

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசி தின மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடைபெறும் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து அதிகாலை 5 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் வசந்தமண்டப பூசையை அடுத்து நண் பகல் 12 மணிக்கு வரதராஜப் பெருமாள் தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வருவார்.

திருவடி நிலை கடலில் தீர்த்தத்திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமை நடைபெறும். காலை 8 மணிக்கு புறப்படும் வரதராஜர் திருவடிநிலைக் கடலில் தீர்த்தமாடி ஆலயம் திரும்புவார். (ஓ)

## ஒளி விழாக்கள்

குருநகர், டிசெ.24

நாவாந்துறைப் பங்கின் ஒளிவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-51)

★★★

அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.30மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும். (ஓ-51)

★★★

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் நடைபெறும் என்று பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (ஓ-51)

## கிறிஸ்மஸ் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணத் சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் பிரசாந்தி கொடியேற்றம், பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். (வ)


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

அமரர் **துரையப்பா கனகசபை**



தோற்றம் 19.06.1936 — மறைவு 26.11.2014

உங்கள் ஆன்மா இறைவனடியில் சேர்ந்து சாந்திபெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

26.11.2014 சிவபதமடைந்த எங்கள் அன்பு (பாசம்) குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஆகாரம் அளித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, 26.12.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

106, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். தொ.பே.021 222 6197



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பிதழும்**



**அமரர் இராசேஸ்வரி புவனேந்திரன்**

மலர்வு 14.01.1947 — உதிர்வு 25.11.2014

கடந்த 25.11.2014 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி சபிண்டிகரணக் கிரியைகள் நாளை (25.12.2014) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஞாபகசக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் தனித்தனி அழைப்பு விடுக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

துரையன் தோட்டம், நெல்லியடி. 021 226 3030

நன்றியுடன் குடும்பத்தினர்.



**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 08.12.1937 — மறைவு 17.12.2012

அமரர் **இளையதம்பி குமாரசாமி**

திதி: 24.12.2014

உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த எமது அப்பாவே!! இரண்டு ஆண்டுகள் ஆனாலும் ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 523, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (55204)



**30ஆம் நாள் நீங்காத நினைவு**



1938ஆம் ஆண்டு இந்தியாவில் பிறந்து எசாயா 46:11இல் உள்ளபடி தனது 30ஆம் வயதில் இறைவனின் அழைப்புப் பெற்று புதிய எருசலேம் சபைக்குத் தலைமை அப்போஸ்தலராக 46ஆண்டுகள் தலைமை வகித்து இலங்கையிலும் எம்மை 25 ஆண்டுகள் அன்புடன் வழிநடத்தி 24.11.2014 அன்று தனது 76ஆம் வயதில் இறைவனின் அழைப்பில் கிறிஸ்த்துவுக்குள் நித்திரை அடைந்த "புதிய எருசலேம் சபை" தலைமை அப்போஸ்தலர்

அமரர் **நெகேமியா லாசர்** (N.LAZAR)

ஐயாவை நாம் மிகுந்த நன்றியுடனும், கண்ணீர் நிறைந்த கண்களுடனும் நினைவு கூர்ந்து அவர்தம் 46 வருட இறைபணிக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

201, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (55195)(12.3)

கண்ணீருடன் ஊழியர் ஜீவரத்தினமும், குடும்ப அங்கத்தினரும். Call: 077 602 1799

# செயலணி மாநாடு



யாழ். மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் **கௌரவ அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணியும்** கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் **நாமல் ராஜபக்ஷ** அவர்களின் நில **செயலணியும்** இணைந்து யாழ் மாவட்டத்தில் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

எனவே இச் செயலணியில் இணைந்து செயற்பட விரும்பும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் தொகுதிவாரியாக நடைபெற்றுகொண்டிருக்கும் மாநாட்டில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இடம் : கிறீன் கிறாஸ் ஹொட்டேல்**
ஆசிர்வாதப்பர் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

| திகதி | | நேரம் |
|---|---|---|
| 24.12.2014 | காங்கேசன்துறை வட்டுக்கோட்டை, | மாலை 2.00 மணி |
| 26.12.2014 | சாவகச்சேரி, ஊர்காவற்றுறை | காலை 9.00 மணி |
| | உடுப்பிட்டி, பருத்தித்துறை | மாலை 2.00 மணி |

**அங்கஜன் இராமநாதன்**
மாகாணசபை உறுப்பினர், சிறிலங்கா சுதந்திர கட்சி
யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்.

# கண்ணீர் அஞ்சலி



## சுரேந்திரன் மீனலக்ஷன்

(யா/சென் ஜோன்ஸ் கல்லூரி - மாணவன்)

எமது நிறுவனத்தின் உரிமையாளரின் அன்புச் சகோதரியின் புதல்வன் சுரேந்திரன் மீனலக்ஷன் அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(55207) (45.3)

**கொனிக்கா கலர் லாப்,**
**சிறிராம் ஜூவல்லர்ஸ்,** ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம் சின்னத்தம்பி



தோற்றம் 08.11.1917 — மறைவு 21.12.2014

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம் சின்னத்தம்பி 21.12.2014 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை -எள்ளுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுப்பிள்ளை ( மலேசியா), சுப்பிரமணியம், சங்கரப்பிள்ளை மற்றும் தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்துரை, பரமகுரு, கந்தசாமி (பைனா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, இளைய தம்பி (மலேசியா), மூத்தபிள்ளை, தெய்வானைப் பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் கந்தையா, கனகம்மா, கனகேஸ்வரி (கனடா), இராசம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னலட்சுமி, காசிநாதன் (பட்டு), ரேவதி (பிரான்ஸ்), கருணாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்தம்பு, செல்லத்துரை மற்றும் திருநாவுக்கரசு, குலநாயகம், தங்கரத்தினம், தேவிகராணி, காலஞ்சென்ற பூமணி மற்றும் சகுந்தலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கருணைரஞ்சனி (ஜேர்மனி), கருணைராஜினி (ஜேர்மனி), கருணைமலர், மஞ்சுளா (சுவிஸ்), கருணை தேவாஜினி (பிரான்ஸ்), சுதா (பிரான்ஸ்), கோகிலன் (பிரான்ஸ்), மகாலட்சுமி, ஜெயலட்சுமி, ரஞ்சன், ராஜேந்திரன் (பிரான்ஸ்), ராசலக்ஷ்மி (கனடா), ராஜ்குமார் (ஆஸ்திரேலியா), நாகேந்திரன் (பிரான்ஸ்), ரவிக்குமார் (கனடா), ராஜரூபன் (கனடா), காலஞ்சென்ற நிர்மலகாந்தன், நிர்மலா, நிர்மலராசன், நிர்மலராகினி (லண்டன்) நிர்மலரூபினி (பிரான்ஸ்), ரவிச்சந்திரன், ரஜனி, ராஜினி, சுகந்தினி (சுவிஸ்), ரவீந்திரன் (லண்டன்), அமுதினி (சுவிஸ்) சிவாகரன் (பிரான்ஸ்) சுபேந்திரன், சுமித்திரா, சுரேந்திரன், காலஞ்சென்ற சுமித்திரன், பகீரதன் (பிரான்ஸ்), நளினா (கனடா), மிதுனா (கனடா), கௌசிகன், ராதா (பிரான்ஸ்), கீதா (பிரான்ஸ்), சீதா (பிரான்ஸ்), இந்துஜன் (பிரான்ஸ்), ஜனார்த் தன் (பிரான்ஸ்), ஸ்ரீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2014) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 3768173**

(54124) (4.6.3)

தகவல்:
**மகன்- சி.காசிநாதன்**

# மரண அறிவித்தல்



## சுரேந்திரன் மீனலக்ஷன்

(ஆண்டு 09 மாணவன், யா/சென்ஜோன்ஸ் கல்லூரி)

டுபாயைப் பிறப்பிடமாகவும், யாழ்.நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சுரேந்திரன் மீனலக்ஷன் நேற்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுரேந்திரன் நித்தியகலா தம்பதியரின் அன்பு மகனும், மீனஷாவின் (யா/இந்து மகளிர் கல்லூரி ஆண்டு -10) அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-செல்லம்மா, வீரசிங்கம்-இராசமணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் சர்வேந்திரன், சண்முகலிங்கம், விமலரதி, சத்தியரூபன் விஜயகுமாரி, கிருஷ்ணமோகன், நிகிலா, இராஷேஸ்வரன், உஷாநந்தினி ஆகியோரின் பெறாமகனும், இராஜேந்திரன், சுகிர்தரஞ்சினி, அகிலரஞ்சினி, கமலநாதன்-ராகினி ஜெகதீஸ்வரன்-கலா, சிறீதரன்-மைதிலி, ரவீந்திர குமார்-அனுஷியா, ஜெயசீலன்-சத்தியப்பிரியா, ஸ்ரீசக்திவேல்-ஜீவகுமாரி ஆகியோரின் மருமகனும், திருஷாந்தன், நிரோஷன், ஷயானி, சானுகா, கஜலக்ஷன், கஜகனிஷன், திருஷாயினி, நிகாஷன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், தனுஷன், பிறேமினி, ஜிந்துஷா, ஹரிஸ்ராம், ஹரிணி, சுபஷிரவின், வர் ஷன், ஷாயிப்ரதா, அபிஷணன் ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**383/1, நாவலர் ஒழுங்கை,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### திருமதி சாவித்திரி சத்தியநாதன்



அன்னை மடியில்
06.04.1951

இறைவன் அடியில்
24.11.2014

வானுறையும் தெய்வத்துள் சங்கமமாகிய
எங்கள் குடும்பத்தின் தலைவியே!
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், இப்பாரினில்
வாழ்ந்த எம் பாசமிகு தெய்வமே! எம்மையெல்லாம்
துயரக்கடலில் தவிக்கவிட்டு நின்னுயிர் நீத்த மாயம்தான் என்ன?
நிம்மதியாய் நீர் இறைபதம் சேர்ந்தீர்
நமக்கோ நின் கனவு அதுவும் நித்தியம் நிரந்தரம்

கடந்த (24.11.2014) சிவபதமடைந்த குடும்பத்தலைவி திருமதி சாவித்திரி சத்தியநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.12.2014 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.12.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் மற்றும் உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

அரசடி வீதி,
இருபாலை, கோப்பாய்.
077 396 5180

(55202)(12.3.)

**குடும்பத்தினர்.**

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இந்திராணி கதிர்காமத்தம்பி

**திதி: வளர்பிறை திருதியை 24.12.2014**

ஆறு ஆண்டுகள் சென்றாலும் ஆறவில்லை எம்மனம்!
அன்பு காட்டி ஆதரித்த ஆசைமுகம் மறப்போமோ?
சோறு தந்த கைகளை எம்மால் மறக்க முடியவில்லையே!
வேறு உலகம் சென்று வேலவன் தாள் சேர்ந்தீரோ?
நேற்றுப் போலிருக்கிறது ஆறு வருடங்களும் ஆயிற்றோ?
கூற்றுவன் வந்தின்னுயிர் கவர்ந்து தான் சென்றானோ!
சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல் எங்களுடன்
வீற்றிருந்த உள்ளமே! சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.

(55124)(4.3.6)

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



### சுரேந்திரன் மீனலக்ஸன்

மகிழ்ச்சிப் பூங்காவாய் பூத்துக்
குலுங்க வேண்டிய நீ கண்விழிப்பாய்
என ஏங்கிய வேளை
காலனவன் காலடியில்
கண்மூடி மௌனமானாய்
நம்பமுடியவில்லை - இன்று
மண்ணில் நீ இல்லை - மனம்
பதைக்குதடா ஆறாத துயரமடா
அழுகின்றோம் - நீ என்றும்
எம்முடன் வாழ்வாயடா

உம் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு, உன் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்:

**சிறிநதியா நகைமாளிகை**
**சிறிநதியா டிஜிட்டல் கலர்லாப்,**
**நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம்.**

(54981)
(45.6.3)

24 DEC 2014

## கண்ணீர் அஞ்சலி



### சுரேந்திரன் மீனலக்ஸன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாமும் மிகுந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும், பணியாளர்களும்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/18413) (10)

**சாணுகா நகைமாடம்**
**ஸ்ரீ மீனாட்சி நகைமாடம்**

## ஒன்பதாம் ஆண்டில் எங்கள் அம்மாவின் நினைவலைகள்



மண்ணில் மழலையாய் 23.02.1951

விண்ணில் தெய்வமாய் 02.01.2006

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

### திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

(திதி வளர்பிறை திருதியை 24.12.2014)

நிறைவான வாழ்வினிலே நிலைத்து நின்ற ஜெகதாவே
நெஞ்சமதை கனவாக்கி நீண்டவழி சென்றீரோ
அன்னை என்னும் ஸ்தானத்தில் எம்மைக் காத்து வளர்த்தீர்
ஆறுமா எம் துயரம் அகிலமதில் வாழும் வரை
இல்லறமாம் கோவிலிலே ஏற்றிவைத்த தீபமம்மா
ஈடில்லா அன்பாலே அவனியிலே எங்களை வாழ வைத்தீர்
பொறுமை என்னும் ஓடமதை புன்னகையால் வாழ்வித்தீர்
பார்க்கின்ற இடமெல்லாம் உந்தன் மலர் வதனம் தோன்றுதம்மா
அல்லும் பகலும் இறையருள் வேண்டினீரே
அதிசயமாய் எமைப்பிரிந்த மர்மமென்ன ஜெகதாவே.
எண்ணும் பொழுதெல்லாம் ஏங்குகின்றது எமது மனம்
எப்பிறப்பில் காண்போம் இனி எங்கள் எழில் நிறைந்த அம்மாவை

145/5, பிரப்பங்குளம் றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8169

பிரிவால் துயருறும்:
நா.தெட்சணாமூர்த்தி
திரு.திருமதி. நிஷாகரன் மலர்மதி,
திரு.திருமதி. நிஷாந்தன் ஸ்ரீமகள்
நிஷாகரன் ஜனனி
நிஷாந்தன் திருவரேஷ்வர்
நிஷாகரன் ஜர்ஷணன்

## மரண அறிவித்தல்

### நடராஜா இந்திரகுமார்

(முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்)



கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நடராஜா இந்திரகுமார் (முன்னாள் முகாமையாளர்) நேற்று முன்தினம் (22.12. 2014) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரோஜாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மோகனதாஸின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-நாகம்மா தம்பதியரின் மருமக னும், காலஞ்சென்ற சண்முகராஜா (ஆசிரியர்), சக்திவேல் (நியூசிலாந்து), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), உருத்திரகுமார் (பிரான்ஸ்), மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருயோக செல்வராணி, குமுதாலட்சுமி, ஜெயந்தி, ராஜனி, சுமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 316 7421
077 088 9334

(C/18408) (4.3.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

காரைநகர் மணிவாசகர் சபை

## பவளவிழா மலர் வெளியீட்டு விழா 2014

இடம்: யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்
(காரைநகர் இந்துக் கல்லூரி)
நடராசா மண்டபம்

காலம்: 25.12.2014 வியாழக்கிழமை
காலை 9.00 மணி

தலைவர்:
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்

முதற்பிரதி பெறுபவர்:
ஈழத்துச்சிதம்பர ஆதீன கர்த்தாக்கள்

மலர் வெளியீட்டுரை:
பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா

மலர் ஆய்வுரை :
செந்தமிழ்ச் சொல்லருவி திரு. ச. லலீசன்

பிரதமவுரை:
பேராசிரியர் இ. குமாரவடிவேல்.

சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காரைநகர் மணிவாசகர் சபை

ஊடக அனுசரணை: **எரிக் கணேஸ்**
முக்குக் கண்ணாடி அகம்
564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



### சுரேந்திரன் மீனலக்ஷன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாமும் மிகுந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும், பணியாளர்களும்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/18412) (10)

**கன்னிஹா ஜுவெல்லர்ஸ்**
**பூரணி நகை மாடம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் கிருஷ்ணபிள்ளை



சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கிருஷ்ணபிள்ளை 22.12.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசசிங்கம்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி-தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் (மாப்பாணர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செகராசசேகரம், கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இரத்தினேஸ்வரி, சத்தியபாமா, இரவீந்திரன், ஜெயஸ்ரீ, விமலாதேவி, ஸ்ரீபாலன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், திசைவீரசிங்கம் மற்றும் நளாயினி, சற்குணலிங்கம் (பிரதேச செயலகம்-கோப்பாய்), சிவபாலன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியும், லங்கேஸ்வரன், கேதீஸ்வரன், சர்மிளா, றஜீனா, சசிரேகா, கேசவரூபன், கேசனா, ஆதீஷன் ஆகியோரின் அம்மம்மாவும், பிருந்தா, நர்மதா, சாமரன், சௌமியன், சாம்ருதன் ஆகியோரின் அப்பம்மா வும் கிருஷ்ணவேணி, தாட்ஷாயினி, லோகதரன், பிரபாகரன் ஆகியோரின் பேர்த்தியும், லௌஷன், திவியன், ஓவியன், லிகேஷ், பிரஜீன், அஜீஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், ராதா, செல்வராணி, இராசேஸ்வரி ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தலகட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி, சிறுப்பிட்டிமேற்கு, நீர்வேலி.

(55213) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### அம்புறோஸ் ஸ்கூர்மன் அல்பிரட்

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த அம்புறோஸ் ஸ்கூர்மன் அல்பிரட் நேற்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ்-செபமாலை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேதுருபிள்ளை-பிலோமினா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரியசிந்தாவின் அன்பு கணவரும், அந்துவான் பேர்னாட்டின் பாசமிகு தந்தையும்; யேசுதாசன், றொபேட் பிரான்சிஸ், எட்வீசம்மா, மரியரத்தினம், மேரி திரேசா, பெனாண்டோ, செபஸ்ரியன், யுஸ்ரீனா மேரி அலங்காரம், டெய்சியா, அல்பிரட் பீரிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பெனடிற் மங்களேஸ்வரி, அல்வீனஸ்-மேரி லூசியா, டேவிற் மரீனா, அன்ரன்மரியதாஸ்-மேரி கிறிஸ்ரீனா, அலன் றோஸ், எட்மன் காலஞ்சென்ற ஸ்ரீபன் மற்றும் எடிசன் மரியதாஸ் ஜோன்பற்றிக் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (24.12.2014) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55216) (10)

தகவல்:
**ஸ். அத்துவான் பேனாட் (மகன்)**

## கிழக்கு மாகாண சபைத் தலைவர் மைத்திரிக்கு ஆதரவு

திருகோணமலை, டிசெ.24

கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் பிரியந்த பத்திரண ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டுள்ளார். கொழும்பு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் பத்திரண போட்டியிட்டு வெற்றியீட்டிருந்தார்.

மாகாண சபையின் தவிசாளர் பதவியை துறந்ததைத் தொடர்ந்து கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சியை விட்டு போகக்கூடிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதுரலிய ரத்ன தேரரின் ஆலோசனைக்கு அமைய பத்திரண தமக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ற)

## மதுபான சாலைகளுக்கு எதிராக 228 வழக்குகள்

யாழ்ப்பாணம்.டிசெ.24

குடாநாட்டில் இந்த வருடம் 5 மதுவரித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது பதிவு செய்யப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராக 228 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் ஆகிய 5 மதுவரித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனை நடவடிக்கைகளின் போது மதுவரித் திணைக்களத்தின் சட்ட திட்டங்களுக்கு முரணாக நடைமுறைகளை மீறிய மதுபானச் சாலைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சோதனை நடவடிக்கைகளின்போது யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரிப் பிரதேசங்களில் உள்ள மதுபான நிலையங்களுக்கு எதிராகவே அதிகளவான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளின்போது 8 இலட்சம் ரூபாவுக்கும் மேல் குற்றப் பணத்தை நீதிமன்றங்கள் அறவிட்டுள்ளன.

இந்த வருடம் 228 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மதுபான நிலையங்களின் விற்பனை தொடர்பில் மதுவரித் திணைக்களத்தின் சட்டத்துக்கு ஏற்ப கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருவதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(த-14)



செய்திகள்

# வடக்கு, கிழக்கில் சீரற்ற காலநிலை நீடிக்கும் அபாயம்




அம்பாறை, டிசெ.24

வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் பதினான்கு மாவட்டங்களில் நிலவி வரும் சீரற்ற காலநிலை மேலும்சிலதினங்களுக்குநீடிக்குமெனவளிமண்டலவியல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அண்மையில் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாகவே சீரற்ற காலநிலை தொடர்வதாகவும், குறித்த மாவட்டங்களில் மேலும் சில தினங்களுக்குச் சீரற்ற காலநிலை தொடர்வதுடன் மழை தொடர்ந்து பெய்யும் சாத்தியமே இருப்பதாகவும் கொழும்பு வளி மண்டலவியல் திணைக்கள வானிலை அதிகாரி ஏ.எம்.முஹம்மட் சாலிஹீன் தெரிவித்தார். (த-30)

## வெருகலிலும் வெள்ளம்

திருகோணமலை, டிசெ.24

வெருகல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல கிராமங்கள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் மக்கள் இடம்பெயர்ந்து மாவடிச்சேனை பாடசாலையில் 75 குடும்பங்களும், வட்டவான் ஸ்ரீ தான்தோன் றிஸ்வரர் வித்தியாலயத்தில் 93 குடும்பங்களும், புன்னையடி நாமகள் வித்தியாலயத்தில் 22 குடும்பங்களும், முத்துச்சேனை அரச தமிழ்க் கலவன் பாடசாலையில் 08 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் படகுகள் மூலமே உள்ளகப் போக்குவரத்துக்கள் இடம்பெறுகின்றன. (த-40)



## பண்டாரிக்குளம் மக்கள் அந்தரிப்பு

வவுனியா, டிசெ. 24

வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பண்டாரிக்குளத்துக்கு அருகில் உள்ள வீடுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளது. இதனால் வீடுகளில் வசிப்போர், பண்டாரிக்குளம் வீதியால் பயணிக்கும் பயணிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சிலர் உறவினர் வீடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (த-402)

## மன்னாரில் தொடர்ந்து மழை மல்வத்து ஓயா பெருக்கெடுப்பு

**7,293 குடும்பங்களைச் சேர்ந்த 26,155 பேர் பாதிப்பு**



மன்னார், டிசெ. 24

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை மற்றும் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக மன்னார் மாவட்டத்தில் இதுவரை 7ஆயிரத்து 293 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 155 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முஹமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 472 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 591பேர் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.நானாட்டான்பிரதேசசெயலர் பிரிவில் 6ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 350 பேர் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் நானாட்டான், முருங்கன், மோட்டக்கடை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 520 பேர் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர். இந்த மக்கள் முசலியில் உள்ள வேப்பங்குளம் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.முசலிக்கான தரை வழிப் பாதையும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதனால் அந்த மக்களின் அவசர தேவைகளை மேற்கொள்ள படகுச் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மடு பிரதேச செயலர் பிரிவில் 381 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 197 பேர் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

தம்பனைக்குளம், பண்ணை வெட்டுவான், மல்லவராயன் கட்டை அடம்பன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர். தம்பனைக்குளம் கிராமம், மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாகவெள்ளநீரில்மூழ்கியுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.இந்த மக்கள் அந்தப் பகுதியில் உள்ள பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மன்னார்–மதவாச்சி பிரதான வீதியால் போக்குவரத்துதடைப்பட்டுள்ளது. (த-56)

## கிழக்கு மக்களுக்கு உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 24

தென்தமிழீழத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வெள்ள நிவாரண உதவிகளை வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

சில வாரங்களாக இலங்கையில் பல பாகங்களிலும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தென் தமிழீழ மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக அங்கு வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கன மழை காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டு உணவு, மருந்து நெருக்கடி மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கான அவசர மனதாபிமான நிவாரண உதவிகளை வழங்கி உதவுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியுள்ளது. (த)

## கிழக்கில் பெரும் பாதிப்பு

அம்பாறை, டிசெ. 24

கிழக்கில் அடை மழை தொடர்ந்த வண்ணமிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பல தமிழ்,முஸ்லிம் பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்பு தொடர்ந்த வண்ணமுள்ளதுடன் வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதால் இடம்பெயர்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

அம்பாறையில்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச முக்கிய வீதிகள், தாம்போதிகளில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சவளக்கடை கிட்டங்கி வீதியில் இரண்டு அடிக்கு மேல் மழை வெள்ளம் பாய்வதால் கல்லோயா குடியேற்றத் திட்டக் கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த ஒரு கிலோ மீற்றர் நீளமான கிட்டங்கி வீதி ஊடாக மக்கள் பயணிப்பதற்கு இயந்திரப் படகுச் சேவை கடற்படையினரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.கரன் தெரிவித்தார்.

இதேவேளை கல்முனை–அம்பாறை பிரதான வீதியில் மாவடிப்பள்ளி தாம்போதியூடாக வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடைப்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 314 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 762 குடும்பங்களைச் சேர்ந்த 4லட்சத்து 21 ஆயிரத்து 702 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. மாவட்டத்தில் 11ஆயிரத்து 733 குடும்பங்களைச் சேர்ந்த 40ஆயிரத்து 723 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் பொதுக் கட்டடங்களிலும், பாடசாலைகளிலும் 105 நலம்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24மணி நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 59.3 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய வானிலை அதிகாரி எஸ்.சிவதாஸ் தெரிவித்தார்.

இதேபோல அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் வானிலை அவதான நிலையப் பிரிவின் கீழ் வரும் அம்பாறையில் 58.4 மில்லி மீற்றரும், பொத்துவிலில் 37.3 மில்லி மீற்றரும் பதியதளாவையில் 70.0 மில்லி மீற்றரும், அட்டாளைச் சேனையில் 59 மில்லி மீற்றரும், அக்கரைப்பற்றில் 60.5 மில்லி மீற்றரும், இலுக்குச் சேனையில் 62.4 மில்லி மீற்றரும் தீகவாப்பியில் 66.7 மில்லி மீற்றரும் பன்னலகமவில் 50.8 மில்லிமீற்றரும் மழை பெய்துள்ளது. பொத்துவில் வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ. ஏ.நஹீம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தச் செய்தியை எழுதும் போதும் இடைவிடாத பெருமழை பெய்த வண்ணமேயுள்ளதுடன் பொது மக்களது அவலமும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-30-32)





முல்லைத்தீவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அலுவலகம் கடந்த சனிக்கிழமை அமைச்சர் சுசில் பிறேம ஜயந்தவால் திறந்து வைக்கப்பட்டது. அதில் முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினம் மற்றும் அந்தக் கட்சியின் முல்லை மாவட்ட தேர்தல் இணைப்பாளர் றங்கத்துரசர ஆகியோரின் ஏற்பாட்டிலே அந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

# வட பகுதியில் இராணுவம் அகற்றப்படாது

## சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.24

வடக்கின் இராணுவ முகாம்கள் ஐம்பது வீதத்தால் குறைக்கப் படும் என எதிரணியினர் தெரிவித்திருப்பதாக அரசு மேற்கொண்டு வரும் பிரசாரம் பிழையானது. வடக்கில் இராணுவத்தினர் குறைக்கப்பட மாட்டார்கள்– இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை பொலிஸ் அரங்கில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

"அரசு எதிர்க்கட்சிகள் மீது பிழையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது. பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலோ உடன்படிக்கையிலோ 50 வீதம் இராணுவ முகாம்கள் வடக்கில் குறைக்கப்படும் என உறுதியளிக்கப்படவில்லை.

அரசு பிழையானதும் பொய்யானதுமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது"– என்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மைத்திரிபால சிறிசேன செய்து கொண்ட உடன்படிக்கையில் வடக்கில் 50 வீத இராணுவ முகாம்கள் குறைக்கப்பட உள்ளதாக சுகாதார



அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியிருந்த நிலையிலேயே, சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# மைத்திரிக்கு ஆதரவு வழங்க தமிழர் கூட்டணி தீர்மானம்

## அதன் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24

ஜனாதிபதி தேர்தலில், தமிழர் விடுதலை கூட்டணி பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கு, அந்தக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளை ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக கட்சியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரியினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசுகள் மாறியபோதும் எந்த அரசும் தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காத நிலையில் இன்று பல்வேறு கொள்கைகளோடு செயற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து எல்லோரையும் பாதிக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளில் தீர்வுக்கு நடவடிக்கை எடுத்துவரும் வேளையில்,

எமக்குச் சாதகமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், அந்தக் கட்சிகள் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.

நாட்டின் பல்வேறு பிரஜைகளுக்கும் இனப்பிரச்சினை உட்பட தீர்வு காணமுடியும் என்ற கௌரவமிக்க சில தலைவர்களின் கருத்தை நம்பிக்கையுடன் வரவேற்க வேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு சிறுபான்மை இன மக்களுக்கும் உண்டு.

கட்சிகளின் தலைவர்கள் நியாயமான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளமையால் இந்தக் கட்டத்தில் அவர்கள் முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் எம்மைச் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை உட்புகுத்தாது தவிர்க்க வேண்டியது சிறுபான்மையின மக்களாகிய எமது கடமையாகும்.

இன்றைய சூழ்நிலையை அனுசரித்து வேறு கட்சியோ, கட்சி உறுப்பினர்களோ எங்களோடு இணைந்து செயற்பட விரும்பின் நாங்கள் இணைத்துக் கொள்ளத் தயாராக உள்ளோம்.

இவ்வழியில் ஜனாதிபதி வேட்பாளர் கொடுத்துள்ள உறுதி மொழியிலும், அரசியல் சார்பற்ற தலைவர்களின் உறுதி மொழியிலும் பல்வேறு கொள்கைகளில் இதுவரை ஈடுபட்டிருந்த 36 கட்சித் தலைவர்களின் உறுதி மொழியிலும் நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இதனடிப்படையில் மக்களின் இதுவரை தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சகல இன, மத மக்களையும் ஒற்றுமையாக புதிய ஜனநாயக அமைப்பில் வாழவைக்க எடுக் கப்படும் நடவடிக்கையாகிய ஜனாதிபதித் தேர்தலில் சகல மக்களும் பொது வேட்பாளராகிய மைத்திரிபால சிறிசேனவுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்டக் கிளை ஏகமனதாக தீர்மானிக்கின்றது – என்றுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி, 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் தலையிடாது ஒதுங்கி இருந்து கொண்டு தமிழ் மக்களை அவர்களின் இஷ்டப்படி செயற்பட்டு யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுக்க அவர்களிடம் விட்டு விடவேண்டும்' என்று தெரிவித்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஓரிரு நாள்களின் பின்னர் மைத்திரிக்கான ஆதரவை வெளியிட்டுள்ளார். (ற–5)

# எம்.பி. பதவியை திருப்பித் தாருங்கள்

## ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்

கொழும்பு, டிசெ. 24

"நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் பெற்றுக்கொண்டு, அமைச்சர் ரிசாத் பதியுதீன் கட்சி தாவிவிட்டார். அவர் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் திருப்பித் தர வேண்டும்"– இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.



"அரசு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை, அமீர் அலி அண்மையில் ஏற்றுக் கொண்டிருந்தார். கனவானாக நடந்து கொண்டு, அவர் நாடாளுமன்றப் பதவியை விட்டு விலக வேண்டும்"– என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பரப்புரைக் கூட்டத்தில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, "அரசு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை, அமீர் அலி அண்மையில் ஏற்றுக் கொண்டிருந்தார். கனவானாக நடந்து கொண்டு, அவர் நாடாளுமன்றப் பதவியை விட்டு விலக வேண்டும். நாடாளுமன்ற ஆசனத்தைப் பெறுவதற்காக அமீர் அலி இன்னொரு முஸ்லிமுக்கு துரோகம் செய்து விட்டு, எதிரணியுடன் இணைந்துள்ளார். இவ்வாறானவர்களை நாம் எவ்வாறு நம்ப முடியும்? அமைச்சர் ரிசாத் பதியுதீன் எதிரணியுடன் இணைந்து கொள்வார் என்று நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். சிலர் முஸ்லிம் மக்களின் வாக்குகளை வைத்து என்னுடன் பேரம் பேச முனைகின்றனர். ஆனால் நான் அத்தகைய பேரங்களுக்கு இணங்கத் தயாராக இல்லை" – என்றார்.

இந்த மாத ஆரம்பத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அஸ்வரை பதவி விலகுமாறு கேட்ட அரசு, அந்தப் பதவிக்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் அமீர் அலியை நியமித்தது. இந்த நிலையில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை அரசுக்கான ஆதரவை நேற்றுமுன்தினத்திலிருந்து விலக்கிக் கொண்டுள்ளது. பொது எதிரணியை அந்தக் கட்சி ஆதரித்துள்ளது. இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். (ற–5)

# சட்டவிரோத ஆயுதங்களை களைய நடவடிக்கை

கொழும்பு, டிசெ.24

ஜனாதிபதி தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் சட்டவிரோத ஆயுதங்களைக் களைவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டை தடுக்கும் வகையில் பொலிஸ் நிலையங்களின் ஊடாகத் தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்திருந்தது. இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் சட்டவிரோத ஆயுதங்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக தேடுதல், தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுள்ளவர்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள் உண்டா என பரிசோதித்தல், திடீர் சோதனைகளை நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு முறைகளில் சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டை கட்டுப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# செய்திகள்



## றிசாத்தின் முடிவுக்கு ஹுனைஸ் வரவேற்பு

கொழும்பு, டிசெ.24
நல்லாட்சிக்கான பயணத்தில் இணைந்திருக்கும் அமைச்சர் றிசாத் பதியுதீனை வரவேற்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.
மன்னார் மூர் வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
"தற்போதைய ஆளும் அரசிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகிய நான் வெளியேறி பொது வேட்பாளரை ஆதரிப்பது என்று முடிவெடுத்திருந்தேன். அதற்கமைவாக செயற்பட்டு வருகின்றேன். கறை படிந்த தற்போதைய அரசாட்சியை அகற்றி நல்லாட்சி நோக்கிய பயணத்தில் இணைந்து கொண்டிருக்கின்றோம்.
இந்நிலையில் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் அவரது ஆதரவாளர்களும் அரசில் இருந்து வெளியேறி பொது எதிரணியின் பக்கம் ஆதரவு தெரிவித்துள்ளனர். அமைச்சர் றிசாத் பதியுதீனின் முடிவுக்குப் பாராட்டு தெரிவித்து அவரின் இந்த நல்லாட்சி நோக்கிய பயணத்தில் இணைந்து கொண்டமையை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம். அமைச்சர் எதிரணியினர் பக்கம் சென்று விட்டாரே என்று எவரும் கவலைப்படத் தேவையில்லை. நாம் எந்த வித பாகுபாடுகளும் இன்றி அதிகாரங்களை பகிர்ந்து சேவையாற்றுவோம்"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற–56)


## கொழும்பு- மட்டு நகர் ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, டிசெ.24
தற்போதைய சீரற்ற கால நிலை காரணமாக, வெள்ளத்தால் ரயில் மார்க்கத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளதை அடுத்து கொழும்பு மட்டக்களப்பு இடையிலான ரயில் போக்குவரத்து பொலன்னறுவை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ரயில் மார்க்கத்தை சீர்செய்யும் பணிகளை இன்றைய தினத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (ற)

# தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகள் குறித்து திருப்தியடைய முடியாது

### அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.24
தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என்று தெரிவித்துள்ள அத்துரலிய ரத்ன தேரர், அரச ஊடகங்கள் ஒருபக்கச்சார்பாக தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் மட்டுமே அரச ஊடகங்கள் தேர்தல் பரப்புரையை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். அரச வாகனங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு அரச சொத்துக்கள் தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.
இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸார் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், சில பொலிஸ் நிலையங்கள் ஆளும் கட்சியின் பரப்புரைக் காரியாலயமாக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.
ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஆள் சேர்க்கும் முயற்சி தீவிரம்

### சந்திரிகா, மைத்திரி தனித்தனியாக வியூகம்

கொழும்பு, டிசெ.24
ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரச தரப்பிலிருந்து மேலும் சிரேஷ்ட தரப்பொன்றை எதிரணியில் இணைத்துக்கொள்வது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்கவும் எதிரணியின். ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் தனித்தனியாக செயற்பட ஆரம்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
இவர்கள் இருவரும் அரச தரப்பு அமைச்சர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை விடுத்து தமது இந்த நடவடிக்கையை செயற்படுத்தி வருகின்றனர் என்றும் நம்பிக்கையான தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
ஆரம்பத்தில் எதிரணியுடன் இணைந்து கொள்வதற்கு ஆயத்தமாகி பின்னர் அந்தத் தீர்மானத்தை மாற்றி தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஒத்துழைப்பு வழங்கிவரும் பெருமளவிலான அமைச்சர்கள் இவர்களிடையே இருப்பதாகவும், அவர்களில் சிலரை இரகசியமாகச் சந்திப்பது தொடர்பாக திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இவ்விதமாக மாகாண சபைகளைச் சேர்ந்த அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளின் தலைவர்களுக்கும் கூட தொலைபேசி அழைப்புகளை விடுத்தும் அவர்களுடன் பேச்சு நடத்தியும் எதிரணியின் இந்த இரு முக்கியஸ்தர்களும் தமது கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது. (ற–22)

## பரப்புரைக் கூட்டங்களை மேர்வின் புறக்கணிப்பு

கொழும்பு, டிசெ.24
கம்பஹா மாவட்டத்தில் இடம்பெறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பரப்புரைக் கூட்டங்களை புறக்கணிக்கப் போவதாக மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.
எனினும், ஜனாதிபதியையே எதிர்வரும் தேர்தலில் தான் ஆதரிக்கப் போவதாகவும், தன்னிடமிருந்த களனி தொகுதி அமைப்பாளர் பதவி சாலித விஜேசுந்தரவுக்கு வழங்கப்பட்டது கவலை அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## ஜே.வி.பி. அமைப்பாளர் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ.24
தெனியாய பிரதேச ஜே.வி.பியின் அமைப்பாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தெனியாய ஜே.வி.பி அமைப்பாளர் ஏ.டி.ஆரியதாச என்ற 57 வயதானவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.
நேற்று அதிகாலை இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த ஆரியதாச தெனியாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விசேட அதிரடிப்படையினர் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட தரப்பினர் தாக்குதல் நடத்தியதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கை, கால் மற்றும் பொல்லுகளினால் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (ற)

# திஸ்ஸவுக்கு எதிராக ரணில் முறைப்பாடு

கொழும்பு, டிசெ.24
சுகாதார அமைச்சர் வெளியிட்ட ஒப்பந்தத்தில் போலியாகத் தனது கையொப்பம் இடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.
தமது கையொப்பத்தை போலியான முறையில் இட்டு சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க போலி ஆவணமொன்றை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.
எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேனவுடன் தாம் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளதாக போலிப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட ஒப்பந்தத்தில் தமது கையொப்பம் போலியாக இடப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான எந்த வொரு ஆவணத்திலும் தாம் கையொப்பமிடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்த மோசடி தொடர்பில் விரிவான, கிரமமான விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
அதேவேளை, அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தானும் ரணில் விக்கிரமசிங்கவும் செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பில் அவர் ஆற்றிய உரைக்கு எதிராகவே வழக்குத் தொடரவுள்ளதாக குறிப்பிட்டார்.
திஸ்ஸ அரசின் தாளத்துக்கு ஆடுவதாகவும், தானும் ரணிலும் எப்போதும் திஸ்ஸ குறிப்பிட்டது போன்று நாட்டையும் இராணுவத்தையும் காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தமொன்றைச் செய்யவில்லை. திஸ்ஸ சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என்றும், அதில் போடப்பட்டிருக்கும் தனதும், ரணில் விக்கிரமசிங்கவினதும் கையெழுத்துக்கள் போலியானவை"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

ப.1 விரிவு

## பூநகரிப்பிரதேசசபை
## மீள் கேள்வி அறிவித்தல் 2015
## பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேசசபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள பொது சந்தைகள் இறைச்சிக் கடைகள் என்பன 2015 ஆண்டுக்காக 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 26.12.2014 தொடக்கம் 30.12.2014 3 மணி வரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 31.12.2014 மதியம் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி 31.12.2014 பி.ப 12.30 மணி

2015 ஆம் ஆண்டுக்கான பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்வி கோரல்

| தொ.இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | | பொதுச்சந்தைகள் | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5,000.00 | 35,000.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 3 | பள்ளிக்குடா | 500.00 | 5,000.00 | 20,000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5,000.00 | 60,000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 3 | 19 ஆம் கட்டை | 500.00 | 3,000.00 | 25,000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 2 | நாச்சிக்குடா கடற்கரை | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| | | மாட்டிறைச்சிக்கடைகள் | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 1,000.00 | 8,000.00 | 80,000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 1,000.00 | 8,000.00 | 50,000.00 |
| | | கோழியிறைச்சிக்கடைகள் | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 1,000.00 | 3,000.00 | 21,000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 10,000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| | | ஆட்டிறைச்சிக்கடை | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| | | கருவாட்டுக்கடை | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல-01 | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 2 | நாச்சிக்குடா சந்தி இல-02 | 500.00 | 3,000.00 | 15,000.00 |

உப தலைவர்
பிரதேசசபை
பூநகரி

(C/18409)(10)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி
### சுரேந்திரன் மீனலக்ஷன்



அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாமும் மிகுந்த துயரடைவதுடன். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும்
பணியாளர்களும்
**S.N. கிருஷ்ணா ஜுவெல்ஸ் & வேர்க்சொப்**
**218, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**0212221112**

(55210)
(10)


## வேலைவாய்ப்புகள்
### டுபாய் & மலேஷியா
### மலேஷியா

| தொழில் வகை | எண்ணிக்கை | சம்பளம் (MR) | அரசினால் அங்கீகரிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|
| பொது தொழிலாளர் (ஆண்) | 50 | 900+OT | Rs. 125,000 |

மேலதிக தகவல்கள்:
* 03 வருட ஒப்பந்தம்,
* வயதெல்லை 21 தொடக்கம் 35 வரை ஆண்கள்,
* 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்,
* உணவு வழங்கப்படாது
* நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணித்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்
* மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மலேசிய சட்டத்திற்கு அமைவானது

இலவசம்: தங்குமிடம், மருத்துவம், ஒருவழிப்பயணச்சீட்டு

### டுபாய்

| தொழில் வகை | எண்ணிக்கை | சம்பளம் (DHS) | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| சுத்திகரிப்பாளர்கள் | 150 | 800+OT | Rs. 68,000 |

மேலதிக தகவல்கள்:
* 02 வருட ஒப்பந்தம்
* உணவுக்கான கொடுப்பனவு 200 DHS
* 08 மணி நேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்
* மேலதிக சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகள் டுபாய் சட்டத்திற்கு அமைவானது

இலவசம்: தங்குமிடம், உணவு, மருத்துவம், இருவழிப் பயணச்சீட்டு

குறிப்பு: பண வசதி இல்லாதவர்களுக்கு கடனுதவி வழங்கப்படும்.
நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9 மணிக்கு
இடம் : பிள்ளையார் இன், இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**SAINAS TRAVELS & TOURS**
LL No : 1004
NO;19, Playground Road, Obesekarapura, Rajagiriya
Mobile: 0777311880, 0777588781
Email: stmazoorsl@yahoo.com, sainastravels@gmail.com


# கண்ணீர் அஞ்சலி



## சுரேந்திரன் மீனலக்ஷன்

மகிழ்ச்சிப் பூங்காவாய் பூத்துக் குலுங்கவேண்டிய - நீ
பாதியிலே கண்மூடி மௌனமாய் கலைந்ததேனோ
கந்தன் கால் பதிந்த மண் மீது உந்தன் மேனி பதிந்து போனதோ
மீனலக்ஷா ! மண்ணிலே நீ இல்லை மனம் பதைபதைக்குதடா
பொய் இல்லா உன் கண்கள் பொலிவற்று போனதென்று
பொய் இல்லா உறவோர் நாங்கள் பேதலித்து நிற்கிறோம்.

**மீனலக்ஷனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**முகாமைத்துவப்பணிப்பாளர்**
**மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**
**Ratna Engineers and Constructors**

# தொடர்ச்சிகள்

### டெங்குத்

நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த சிறுவனுக்கு தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதும் அது பயனளிக்கவில்லை. நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.மீனலக்ஷன் என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். சிறுவனுக்கு கடந்த 13 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதனால் அவனை உறவினர்கள் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் கடந்த 17 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவ்வாறு போதனாவில் சிகிச்சைக்காக மாற்றப்பட்ட சமயம் சிறுவனின் ஈரல், சிறுநீரகம் என்பன முழுமையாகப் பாதிக்கப்பட்டு செயலிழந்திருந்தமை மருத்துவ பரிசோதனைகளில் தெரியவந்திருந்தது.

அதனையடுத்து சிறுவன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அவனது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. நேற்றுக் காலை அவன் உயிரிழந்தான். விசாரணை, உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டில் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த முதலாவது சம்பவமாக சிறுவனின் இறப்புப் பதிவாகியுள்ளது.

டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மாத்திரம் 8 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த மாதம் இது வரையான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் 210 பேரும், மன்னார் மாவட்டத்தில் 49 பேரும், முல்லைத்தீவில் 19 பேரும், வவுனியாவில் 10 பேரும், கிளிநொச்சியில் 9 பேரும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார அமைச்சு புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்குத் தொற்று குறித்து பொது மக்கள் அவதானத்துடன் இருப்பதுடன், காய்ச்சல் அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக அரச மருத்துவமனைகளில் உரிய சோதனைகளை மேற்கொள்வதன் ஊடக அசம்பாவிதங்களைத் தடுக்க முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற்–4)

### கூட்டத்தில்

இது தொடர்பான விசாரணை இன்றைய தினம் இடம்பெறவுள்ளதால், யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு, வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வே.ஆனைமுகன் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்த போது, இனந்தெரியாத நபர் ஒருவர் அவரது ஒலிவாங்கியைப் பறிக்க முற்பட்டதைத் தொடர்ந்து, அங்கு ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக உருவெடுத்தது.

அதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளான, வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உறுப்பினர்களான சர்வேஸ்வரன் மற்றும் சிவயோகன் ஆகியோர் காயமடைந்திருந்தனர்.

அதேவேளை, குறித்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்ததாகத் தெரிவித்து, ஈ.பி.டி.பி' உறுப்பினர்கள் சிலரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். அத்துடன் பொலிஸ் நிலையத்திலும் அவர்கள் முறைப்பாடு செய்தனர். ஈ.பி.டி.பியினர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய துரிதமாக நடவடிக்கை எடுத்த பொலிஸார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான கஜதீபன், சிவாஜிலிங்கம், ஆனைமுகன் ஆகியோரை விசாரணைக்கு இன்றைய தினம் வருமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளனர். (ற–5)

### சர்வதேச

படையினருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உள்ளக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படும் என்று மைத்திரி தெரிவித்துள்ளார். இந்த விடயம் தூரநோக்குடனான பல விளைவுகளை உள்ளடக்கியதாகும் – என்று குறிப்பிட்டுள்ள அவர், இந்த விசாரணையின் தன்மை பற்றி எதிரணி வேட்பாளர் விளக்க வேண்டும். இந்த விசாரணைக் குழுவின் அதிகாரங்கள், நோக்கம் குறித்து வெளிப்படுத்த வேண்டும். ஆயுதப் படையினரை விசாரணைக்கு அழைக்கும் அதிகாரம் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும் – என்றும் கோரியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை அணுகும் விடயத்தில் முழுமையான, மாற்றமான ஓர் அணுகுமுறை கையாளப்படும் என்று எதிரணி தெரிவித்துள்ளது. குறுகிய அரசியல் இலாபம் தேடும் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடு தொடர்பாக அறியும் உரிமை நாட்டுக்கு உண்டு. ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடாததால். எமக்கு ஆபத்து இல்லை என்று அவர் தவறான கருத்தைக் கொண்டுள்ளார். ஆனால், இந்தப் பிரகடனத்தில் கையெழுத்திடாத நாடுகளும், பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன என்பது, அண்மைய அனுபவ மாக உள்ளது – என்றும் அமைச்சர் பீரிஸ் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ற–5)

### திஸ்ஸ

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட, ஐ.தே.கவிலிருந்து தாவிய முன்னாள் பொதுச் செயலாளரும் அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க, ஒரு ஒப்பந்தத்தை காண்பித்து, இதுவே ஐ.தே.க தலைவருக்கும், பொது எதிரணி வேட்பாளருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது என்று கூறியிருந்தார்.

அதில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி மற்றும் ஐ.தே.க தலைவர் ரணில் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர் என்றும், வடக்கில் இருந்து படைக் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

அதுகுறித்து மங்கள சமரவீர கூறுகையில், "மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்பாட்டின் பிரதி என்று கூறி, ஐ.தே.கவின் முன்னாள் பொதுச் செயலரும், தற்போதைய சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க ஆவணம் ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த ஆவணம் பொய்யானது. அத்தநாயக்க காண்பித்த ஆவணத்தில் இடம்பெற்றுள்ள கையெழுத்துக்கள் போலியானவை"– என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டார். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–5)

### மஹிந்த

எடுத்துள்ளமையினாலேயே, பங்கெடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே எதிரணிக்கு ஆதரவு தெரிவிக்கலாம் என்று ஊகங்கள் வெளியிடப்பட்ட நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் பலரும், மஹிந்த சிந்தனை வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (ற–5)

### பரீட்சை

வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் நிறைவுற்று தற்போது பெறுபேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம். என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

அதேவேளை, க.பொ.த சா/த பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஜனவரி 5ம் திகதிவரை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

### முடிவெடுக்க

இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலியும் பங்கெடுத்துள்ளார்.

இந்த சந்திப்பை அடுத்து தலைவர் ஹக்கீம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களுடன் முக்கிய சந்திப்பொன்றை நடத்திவிட்டு திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். இந்த நிலையில் இரு தரப்பினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் நன்கு ஆராய்ந்து ஓரிரு தினங்களில் முடிவு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை– ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் மு.காவினர் பங்கெடுக்கவில்லை. தாம் அவர்கள் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கவில்லை எனவும் தாம் அரசின் பங்காளிக் கட்சி மாத்திரமே எனவும் அதனால் தாம் பங்கெடுக்கவில்லை எனவும் மு.காவினர் தெரிவித்தனர்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் பசீர் சேகுதாவூத் கலந்து கொள்ளவில்லை.

இவை ஒருபுறமிருக்க, நேற்றும் இன்றும் நடைபெறும் தபால் மூல வாக்களிப்பில் வாக்காளர்கள் சமூகத்தின் பாதுகாப்பு, முஸ்லிம் மக்களின் இருப்பு, ஜனநாயக உரிமைகள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான முன்னுரிமை வழங்கி மனசாட்சியின்படி வாக்களிக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்திருந்தார். (ற–10)

### எம்மை

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுக் காலை திடீரென் வெளியிடப்பட்டது. அதை வெளியிட்டு, உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பல வருடங்களாக மரண பயத்தோடு வாழ்ந்த பொதுமக்களின் அச்சத்தை இன்று நாம் நீக்கியுள்ளோம். புலிகளை அழித்து நாட்டுக்கு சுதந்திரத்தை ஈட்டிக்கொடுத்த என்னை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த விளைகிறார்கள். அதற்கு இடம் கொடுக்க முடியாது.

நாம் நாட்டைச் சூறையாடியவர்கள் என்று எவராலும் எம்மை நோக்கி விரல் நீட்ட முடியாது. நாட்டுக்கு எதிராக எந்தவோர் ஒப்பந்தத்திலும் நான் இதுவரை கையெழுத்திட்டதும் கிடையாது. எனது ஒரே ஒப்பந்தம் இந்த மஹிந்த சிந்தனைதான்.

இதன் மூலம்தான் என்னால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடிந்தது. ஆயிரத்து 200 அமெரிக்க டொலராக இருந்த தனி நபர் வருமானத்தை 4 ஆயிரம் டொலராக அதிகரிக்க முடிந்தது. மின்சார உற்பத்தியை 98 வீதம் அதிகரிக்க முடிந்தது. ஆக, நாட்டை அபிவிருத்தி செய்யும் சக்தி தன்னிடம் உள்ளது – என்றும் அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

(ற–5)

### பாலசந்தர்

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் கிராமத்தில் 1930 ஜூலை 9ஆம் திகதி கே.பாலசந்தர் பிறந்தார். பள்ளி பருவத்தில் நாடகங்கள் நடத்துவதில் பாலசந்தர் மிகுந்த ஆர்வம் கொண்டவர் ஆவர். அண்ணாமலை பல்கலையில் பட்டப்படிப்பு முடித்து ஆசிரியராகப் பணியை தொடங்கினார். ஆசிரியர் பணிக்கு பின் சென்னை ஏ.ஜி. அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

சென்னையில் பணிபுரிந்தபோது நாடகத்துறையில் பாலசந்தர் தடம் பதித்தவர். எம்.ஜி.ஆர். அழைப்பை ஏற்று 1965 இல் தெய்வத்தாய் படத்துக்கு கதை வசனம் எழுதினார். நீர்க்குமிழி படத்தின் மூலம் திரைப்பட இயக்குநராக பாலசந்தர் தடம் பதித்தார். மேஜர் சந்திரகாந்த், எதிர்நீச்சல், பாமா, விஜயம் படங்களை இயக்கினார். இயக்குநர் சிகரம் என பாலசந்தர் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டார்.

(த–5)

### வாக்களிப்பு

இதேவேளை– கொழும்பு நாரஹேன்பிட்டி இ.போ.ச. பஸ் டிப்போவில் நடைபெற்றுக் கொண்டிருந்த தபால் மூல வாக்கு பதிவு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக இடை நிறுத்தப்பட்டது. அரசுக்கு ஆதரவான குழு அந்த வாக்கு பதிவு நிலையத்துக்கு சென்று குழப்பத்தை ஏற்படுத்தியமையே இந்த இடை நிறுத்தத்துக்குக் காரணம் என தெரிவிக் கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக் வாக்களிக்குமாறு ஊழியர்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து இந்த வாக்கு பதிவை இரத்துச் செய்ய தெரிவத்தாட்சி அலுவலர் தீர்மானித்துள்ளார். (ற–5)

### வடக்கில்

அதிகளவிலானோர் வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமானது. இன்றும் இடம்பெறவுள்ளது. அத்துடன் பொலிஸாருக்காக எதிர்வரும் 26 ஆம் திகதியும் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. அதனை விட, தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட தேர்தல்கள் திணைக்கள அலுவலர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வடக்கில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் 25 ஆயிரத்து 930 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அதனைவிட, படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் என்று 10 ஆயிரம் பேர் வரையில் வடக்கில் வாக்களித் தகுதி பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் அரச உத்தியோகத்தர்களில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் நேற்றே வாக்களித்துள்ளனர். கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களே நேற்றைய தினம் அதிகளவில் வாக்களித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல்களில், தபால்மூல வாக்களிப்பில் முதல்நாளிலேயே அதிகளவிலானோர் வாக்களித்த சந்தர்ப்பம் இதுவாகும் என்று தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ற–5)

# விளையாட்டு

## உணவுப் பிரச்சினைக்கு நேரம் தவறியதே காரணம்

பிரிஸ்பேனில் நடந்த 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் 3ஆவது நாள் ஆட்டத்தின் போது மதிய உணவு இடைவேளையில் வேகப்பந்து வீச்சாளர் இசாந் சர்மா, ரெய்னா ஆகியோர் மைதானத்தில் அளிக்கப்பட்ட உணவைப் புறக்கணித்து விட்டுக் கோபத்துடன் வெளியில் சென்று தேவையான சைவ உணவுகளை வாங்கி வந்தனர். ஆனால் அந்த உணவை மைதானத்துக்குள் கொண்டு வர அனுமதி அளிக்கப்படவில்லை. இதனால் இருவரும் மைதானத்துக்கு வெளியில் வைத்துச் சாப்பிட்டு விட்டு உள்ளே வந்தனர். இந்திய அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி உட்பட சர்வதேச கிரிக்கெட் சபை அதிகாரிகளும் சைவ உணவு கிடைக்காமல் வெளியே சென்று சாப்பிட வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். இது குறித்து இந்திய அணி நிர்வாகம் சார்பில் முறைப்பாடு செய்தும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை கண்டு கொள்ளவில்லை என்று கூறப்பட்டது.

இது குறித்து மிஸ் இந்தியா உணவகத்தின் செயல் மேலாளர் ரவி கூறுகையில்; பிரிஸ்பேனிலேயே மிகச் சிறந்த பிரபலமான இந்திய உணவகம் மிஸ் இந்தியா. மைதானத்திலிருந்து 30 மீற்றர் தூரத்தில்தான் எங்களது ஹோட்டல் உள்ளது. விதம் விதமான சைவச் சாப்பாடு எங்களது ஹோட்டலில் தாராளமாகக் கிடைக்கும். கையால் சுட்ட சப்பாத்தி, பாண், தந்தூரி என விதம் விதமான சைவச் சாப்பாட்டுக்கு நாங்கள் பிரபலம்.

கடந்த காலத்தில் எங்களது உணவகத்தில் சச்சின் டெண்டுல்கர், பிரதமர் நரேந்திர மோடி போன்ற பல்வேறு பிரபலங்களும் சாப்பிட்டுள்ளனர். பிரிஸ்பேன் போட்டியின்போது இந்திய அணிக்காக 50 சப்பாத்திகள் கேட்டிருந்தனர். ஆனால் அதை எங்களால் கேட்ட நேரத்துக்குத் தர முடியவில்லை. எங்களிடம் முற்பகல் 11.30 மணிக்குச் சப்பாத்தி தேவை என்று கூறியிருந்தனர். ஆனால் வாங்க வந்தவர் மு.ப 10.45 மணிக்கே வந்து விட்டார். மேலும் கேட்ட நேரத்துக்கு முன்பே கொடுக்கவேண்டும் என்றும் நிர்ப்பந்தித்தார். ஆனால் அது நிச்சயம் சாத்தியமில்லை. காரணம் எங்களது சமையல்காரர்கள் கையால் தான் சப்பாத்தி சுடுவார்கள். 50 சப்பாத்தியையும் வேகமாக போடு என்றால் நிச்சயம் அது சாத்தியமில்லாதது. எனவேதான் இந்திய அணியினருக்குச் சப்பாத்தியை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. தவறு எங்கள் மீது இல்லை. கேட்ட நேரத்தில் வந்திருந்தால் நிச்சயம் தரமான சப்பாத்தியை கொடுத்திருப்போம். ஆனால் முன்கூட்டியே வந்து அவசரப்படுத்தியதால்தான் தர முடியாமல் போய் விட்டது. எதிர் காலத்தில் இந்திய அணி நிர்வாகம் நேரத்தைச் சரியாக பின்பற்றினால் இந்தக் குழப்பத்தைத் தவிர்க்கலாம் என்றும் கூறினார். (த–ரி)

### சுழல் பந்து வீச்சாளர்கள் மீது

## டோனிக்கு நம்பிக்கையில்லை




ஜடேஜா காயமடைந்ததையடுத்து அக்சர் பட்டேலை கடைசி 2 டெஸ்ட் ஆட்டங்களுக்காக ஆஸ்திரேலியா அனுப்புவது கரன் சர்மாவின் நிலையை குறைவாக மதிப்பிடுவதாகும் என்று முன்னாள் வீரர்கள் கருதுகின்றனர்.

அயல் நாட்டு ஆடுகளங்களில் சுழல்பந்து வீச்சாளர்களைப் பகுதிநேரப் பந்து வீச்சாளர்களாக டோனி பயன்படுத்துவது தவறு.இது அணியில் உள்ள சுழல்பந்து வீச்சாளர்கள் மீது டோனிக்கு இருக்கும் நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது சிங் பேடி, மற்றும் முன்னாள் சுழல்பந்து வீச்சாளரான பிரசன்னா ஆகியோர் என்று சாடியுள்ளனர்.

பிரசன்னா கூறும்போது, சுழல்பந்து வீச்சாளர்கள் குறித்த டோனியின் அணுகுமுறை அணிக்கு நன்மை செய்யாது– என்றார். மணீந்தர் சிங் கூறும்போது; அக்சர் பட்டேலிடம் நல்ல அணுகுமுறை உள்ளது. டோனி அவரைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும். டோனிக்குச் சுழல்பந்து வீச்சாளர்களை எப்படிக் கையாள்வது என்பது தெரியவில்லை என்றே தோன்றுகிறது.

சுழல்பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களைக் கட்டுப்படுத்த வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டும் இலக்குகளை வீழ்த்திப் போட்டிகளை வெல்ல முடியாது. தலைவராக விராட் கோஹ்லி மிகவும் சிறப்பாகத் தெரிகிறார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு இடது சுழல்பந்து வீச்சாளரை (கரன் சர்மா) அணியில் விளையாட வைப்பது என்பதே அவரது பலமான மனநிலையை பிரதிபலிக்கிறது–என்றார் (த–ரி)

> பிரசன்னா கூறும் போது; சுழல்பந்து வீச்சாளர்கள் குறித்த டோனியின் அணுகுமுறை அணிக்கு நன்மை செய்யாது– என்றார்



## கொல்கத்தா அணிக்கு பாராட்டு

ஐ.எஸ்.எல். தொடரில் கிண்ணத்தை வென்ற கொல்கத்தா அணியினருக்கு நேற்று பாராட்டு விழா நடத்தப்பட்டது. முதலாவது இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) உதைபந்து தொடர் வெற்றிகரமாக முடிந்தது. மும்பையில் நடந்த இறுதிப் போட்டியில் கங்குலியின் கொல் கத்தா அணி 1:0 என்ற கோல் கணக்கில், சச்சினின் கேரளா அணியை வீழ்த்தியது. இதன் மூலம் ஐ.எஸ்.எல் தொடரில் கிண்ணத்தை வென்ற முதல் அணி என்ற பெருமை பெற்றது.

கடந்த சனிக்கிழமை கொல்கத்தா வந்த வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்நிலையில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, கொல்கத்தா வீரர்களுக்கு நேற்றுப் பாராட்டு விழா நடத்தினர். நேதாஜி உள்ளரங்கு மைதானத்தில் நடத்தப்பட்ட இந்தப் பாராட்டு விழாவில் அனைத்து இந்திய உதைபந்து கூட்டமைப்பின் தலைவர் பிரபுல் படேல் பங்கேற்றார்.

முன்னதாக கடந்த 2012 இல் ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியினருக்கு மம்தா பானர்ஜி பாராட்டு விழா நடத்தினார். (த–ரி)

## சாதனையுடன் முதலிடம் பிடித்தார் டேல் ஸ்டெய்ன்



எதிரணிகளுக்கு எப்போதும் கிலியை ஏற்படுத்தும் பந்து வீச்சாளராகத் திகழ்பவர் தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது சிறப்பாக பந்து வீசத் தொடங்கியிருப்பது எதிரணிகளுக்குக் சிம்ம சொப்பனமாக உள்ளது.

கடந்த வாரம் செஞ்சூரியன் மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் 34 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 6 இலக்குகளைச் சாய்த்தார் டேல் ஸ்டெய்ன். இதன் மூலம் டெஸ்ட் தர வரிசை பட்டியலில் 909 புள்ளிகளுடன் அவர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இது அவரது துடுப்பாட்ட வாழ்க்கையில் பெற்றுள்ள அதிகபட்ச புள்ளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் இடத்தில் உள்ள இலங்கை சுழல்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத்தை விட அவர் 58 புள்ளிகள் முன்னிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (த–ரி)



# வொட்சனை தாக்கியது பவுன்சர்

## மைதானத்தில் பெரும் பரபரப்பு





மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்திற்கான வலைப்பயிற்சியின் போது நேற்றுக் காலை பவுன்சர் பந்து தலையில் தாக்கியதால் ஆஸ்திரேலிய வீரர் வொட்சன் நிலைகுலைந்து போனார்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் பொக்சிங் டே' என்று அழைக்கப்படுகிறது. அந்த நாளில் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவதை ஆஸ்திரேலிய அணி வழக்கமாக கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மெல்போர்ன் மைதானத்தில் ஆஸ்திரேலியா–இந்திய அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பொக்சிங் டே' டெஸ்ட் ஆட்டமாக தொடங்குகிறது. தொடரில் 2–0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ள ஆஸ்திரேலியா, பொக்சிங் டே' டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றி பெற மும்முரமாக உள்ளது. இதற்காக மெல்போர்ன் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணியினர் தீவிர வலைப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். பயிற்சியாளர் டரன் லீமன் முன்னிலையில் பயிற்சி நடந்து வருகிறது.

நேற்று காலை ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் வொட்சன் வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்ட அவருக்கு பிரபல ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பாட்டின்சன் பந்து வீசினார். அப்போது பவுன்சராக வீசிய ஒரு பந்து எகிறி வொட்சனின் ஹெல்மெட்டில் தாக்கியது. அதிவேகத்தில் பந்து ஹெல்மெட்டில் பட்டதால் வொட்சன் நிலை குலைந்தார்.

அருகில் பயிற்சி செய்து கொண்டிருந்த மற்ற வீரர்கள், பந்து வீசிய பாட்டின்சன், பயிற்சியாளர் லீமன் ஆகியோர் வொட்சனை நோக்கி ஓடி வந்தனர். அதிர்ந்து போன வொட்சன் ஹெல்மெட்டைக் கழற்றிப் பரிசோதித்தார். அதிர்ச்சியில் இருந்து மீளாத நிலையில் வொட்சன் வலைப் பயிற்சியில் இருந்து வெளியேறி தலையைக் கையால் பிடித்தபடி புல் தரையில் அமர்ந்துவிட்டார். அணி வைத்தியரான பீற்றர் புரூக்னர் விரைந்து வந்து வொட்சனுக்கு காயம் ஏற்பட்டுள்ளதா எனப் பரிசோதித்தார்.

இதில் வொட்சனுக்கு காயமேதும் ஏற்படவில்லை என தெரிய வந்தது. வொட்சன் காயமின்றி தப்பியதைத் துணை தலைவர் பிராட் ஹடினும் உறுதி செய்தார். வொட்ச னிடம் நான் பேசினேன். அவர் சிறிது அதிர்ச்சியடைந்துள்ளார். ஆனால், அவருக்கு வேறு பாதிப்பில்லை'என்று ஹடின் தெரிவித்தார்.

இந்த சம்பவத்துக்குப் பின்னர் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடந்த குடும்ப தின நிகழ்ச்சியில் பங்கேற்காமல் அணியினர் தங்கியுள்ள ஹோட்டலுக்கு வொட்சன் சென்றுவிட்டார்.

கடந்த மாதம் உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் பவுன்சர் பந்து தலையில் தாக்கியதில் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் பிலிப் ஹியூக்ஸ் மரணமடைந்தார். அந்த உள்ளூர் போட்டியின்போது எதிரணியான நியூ சவுத் வேல்ஸ் அணியில் வொட்சனும் இடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹியூக்ஸ் பந்தால் தாக்கப்பட்டு கீழே விழுந்ததை நேரில் பார்த்த வொட்சனின் மனதில் இருந்து, அந்த சம்பவத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் நீங்காமல் உள்ளது என சக வீரர்கள் கூறினர். வொட்சன் பவுன்சர் பந்தால் தாக்கப்படுவதற்கு சிறிது நேரத்துக்கு முன் வலைப் பயிற்சியில் துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்த மிட்செல் ஸ்டார்க், முழங்காலில் பந்து பட்டு காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(த–ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தமலர் (சாந்தா) ஜெயரட்ணம்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர வீதி, பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இல. 36, அரசடி புகையிரத வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தமலர் (சாந்தா) ஜெயரட்ணம் நேற்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந.ஜெயரட்ணம் (கணவர்)
T.P: 021 222 6318, 077 6569 764

அரசடி, புகையிரத வீதி,.
கந்தர்மடம்.
(552212)
(10)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதிஅம்மா திருநாவுக்கரசு



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி அம்மா திருநாவுக்கரசு நேற்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் புஸ்பகாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நடராஜா, இரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2 மணியளவில் பூவோடை இந்த மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.சற்குணமூர்த்தி
(யாழ். மாநகரசபை)
இ.ஜெகதீசன் (பெறாமக்கள்)

"குமாரவாசா"
டச்சு வீதி, உடுவில் மேற்கு.

FLC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH வகுப்புக்கள்
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 865 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்டு வரும்)
Audio, Video மூலம் கற்பித்தல். மாணவர்களுக்கு கற்றல் Materials FREE
No. 40, Palaly Road, Jaffna.(அரியகுளம்) ஆரம்பம் 03.01.15 @ 8am
ஆரம்பம் : 05.01.15 3.45pm No.181, 1st Floor, Main Street, Nelliady.
021 320 2973
0779 789 456

## கோஹ்லி- தவான் வாக்குவாதம்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பிரிஸ்பேன் டெஸ்ட் ஆட்டத்தின்போது உடை மாற்றும் அறையில் இந்திய வீரர்கள் விராத் கோஹ்லி, தவான் இடையே வார்த்தைப் போர் ஏற்பட்டமை தெரிய வந்துள்ளது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. முதலிரண்டு ஆட்டங்களில் இந்திய அணி தோல்வியடைந்தது. இதில் பிரிஸ்பேனில் நடந்த இரண்டாவது ஆட்டத்தின் நான்காவது நாளில் இந்திய அணியில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டன. பயிற்சியில் ஈடுபட்ட தவானுக்கு காயம் ஏற்பட்டதால், இரண்டாவது இன்னிங் சில் அவசரம் அவசரமாக கோஹ்லி களமிறக்கப்பட்டார். இதனால் இவர் ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். இந் நிலையில் அன்றைய நாள் உடை மாற்றும் அறையில் கோஹ்லிக்கும் தவானுக்கு வாக்குவாதம் ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜோன்சன் பந்தில் ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்த கோஹ்லி கோபத்துடன் உடை மாற்றம் அறைக்குச் சென்றுள்ளார். நான் ஒரு ஆட்டத்தில் ஆட்டமிழந்ததற்கு நீங்கள் தான் காரணம் எனத் தவானை நோக்கிக் குற்றம் சாட்டியுள்ளார். இதற்கு தவானும் பதிலடி தந்துள்ளார். அதாவது, இந்திய அணிக்காக விளையாடுவதைப் பெருமையாகக் கருதுகிறேன். எனக்கு காயம் ஏற்பட்டுள்ளது என பொய்யாகச் சொல்லவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இப்படி வார்த்தை போர் அதிகமானவுடன், இந்திய அணி இயக்குனர் ரவி சாஸ்திரி இடையே வந்து இருவரையும் சமாதானம் செய்துள்ளார். (த–ரி)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தொழில்புரிவோருக்கானது
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் மூன்று மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.
யாழ்நகரில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1: 8.00 - 10.00 பிரிவு 2 : 10.00 - 12.00
பிரிவு 3 : 1.00 - 03.00 பிரிவு 4 : 3.00 - 05.00
எமது சங்கானை மற்றும் நெல்லியடி கிளைகளில் புதிய பிரிவுகள் ஆரம்பம் 27.12.2014
நெல்லியடியில்
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 3.00-05.00
சங்கானையில்
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 3.00-05.00
27.12.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு புத்தகத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்
021 320 3313
077 621 4567

விற்பனைக்கு
40 நாள் நிரம்பிய கிறேடன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6222493

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள் 08

புதன் பொய்கை

உதயன்

24 டிசெம்பர் 2014 புதன்கிழமை

அன்பினில் வணிகத்துக்கு இடமில்லை; வணிகத்தில் அன்பிற்கு இடமில்லை.
- விவேகானந்தர்.

# வெளிநாட்டு கச்சேரியில் இசை அமைக்க ஆர்வம்

## யாழ்.கலைஞன் பானுவின் எதிர்பார்ப்பு

**யாழ்.** மண்ணை அன்றொருநாள் அதிரவைத்த, யாழ்ப்பாணத்தில் கலைகளுக்கு உயிரூட்டிக்கொண்டிருந்த, பலமேடைகளில் கலையைப் பறைசாற்றிய ஒரு அற்புத மனிதன், நாடகவியலாளன்நடிகமணிவி.வி.வைரமுத்துவினால் பானுதீபன் எனப் பெயர் சூட்டப்பட்ட வைரமுத்துவின் மருமகன்தான் இன்று நாம் பார்க்க இருக்கும் இந்த பானு என்ற பானுதீபன்.

வயது ஏழில் காங்கேசன்துறையில் வி.வி.வைரமுத்துவின் வசந்தகான சபா இசை நிகழ்வில் கலந்துகொண்டு தபேலா வாத்தியத்தை இசைத்து இசைத்துறையில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். அதன் பின்னர் மிருதங்கத்தில் இவரது நாட்டம் அதிகமானது. இதனால் மிருதங்கத்தை முறைப்படி பயின்றார். பின்னர் பெருமளவான இசைக் கச்சேரிகளில் தான் பயின்ற மிருதங்கக் கலையை வெளிப்படுத்தியிருந்தார். இவருக்கு இசை என்பது இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. ஏனென்றால் குடும்பம் ஒரு கோவில் என்பதை போன்று இவருடைய குடும்பமும் கலையைப் பயின்று கலையோடு ஒன்றித்து வாழும் குடும்பம். அப்பா, தம்பி, தங்கை, மனைவி, மாமா, பெரியப்பா, மைத்துனன் என அனைவரும் இசைத் துறையில் அதீத காதல் கொண்டவர்கள். இதனாலேயே இவர் இசைத்துறையில் வளர ஆரம்பித்தார். இதற்காக இவர் ஆரம்பத்தில் தெரிவு செய்தஇசைக்கருவிதான்மிருதங்கம். ஆனால் இன்று இவர் மிகப் பெரிய மிருதங்க வித்துவான் அல்ல. திகைக்காமல் தொடர்ந்து படியுங்கள்.

இன்று பானுவினுடைய வயது 33. தற்போது அவர் யாழ்ப்பாணம் அஞ்சல் திணைக்களத்தில் கடமையாற்றுகின்றார். இவரது கடமையை விட கலைக்கு அதிகமுக்கியத்துவம் கொடுப்பார். சாரங்கா இசைக் குழுவின் கச்சேரிகளில் பலவருடங்களாக இசையமைத்து வருகின்றார். இலங்கையில் பல பகுதிகளுக்குச் சென்று தனது சாதனையை நிலைநாட்டிய இந்த இளம் கலைஞனின் தற்போதைய இசைக்கருவி 'ஒக்கபாட்'. மிருதங்கத்தை விட்டு 'ஒக்கபாட்'டுக்கு மாறியதற்கான காரணம் அதிலே அதிக வாத்தியங்களை இசைக்கமுடிவதாகும் என்கிறார். ஆனால்இந்த 'ஒக்கபாட்'டை இவர் முறைப்படி பயிலவில்லை. மிருதங்கத்தின் நுணுக்கங்களை 'ஒக்கபாட்'டில் கையாண்டே அதை இசைக்க ஆரம்பித்து, பின்னர் அதில் பரிச்சயமும் அடைந்துள்ளார். இது தான் அவருடைய இரத்தத்தில் கலை குடிகொண்டிருப்பதற்கான ஓர் உதாரணம் எனலாம். ஆனால் இன்று வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களுக்கு 'ஒக்கபாட்'டைப் பற்றி கூறும் போது அதை நுணுக்கமாகமுறைப்படிபயின்றே இசைக்கவேண்டும்என்றுகூறிவருகின்றார். காரணம், அப்போது தான் அதில் மேன்மேலும் வளர முடியும் என்பது அவரது வாதம்.



தென்னிந்தியாவின் முன்னணிப் பாடகர்கள், பாடகிகள், இசையமைப்பாளர்கள் யாழ்ப்பாணம் வரும்போது இவர் தனது மூச்சாக இசைக்கும் ஒக்கபாட்டை இசைத்திருக்கிறார்; அதன்மூலம் அனைவருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றார். காரணம் ஒரு இசை நிகழ்வில் இசை அமைக்கும் போது ஒக்கபாட்டை தன் உயிரிலும் மேலாகக் கருதுவாராம். அந்த இசைநிகழ்ச்சியில் தனக்கு மனதில் தோன்றுவது ஒக்கபாட்டை இன்னும் திறமையாக இசைக்க வேண்டும் என்பதுதானாம். அந்தவெறி இருந்ததால் தான் இன்று அனைத்து இசை மேதைகளின் பாராட்டுக்களைப் பெறக்கூடியதாக இருந்தது என்கிறார் பானு.

குறிப்பாக, இலங்கையில் இருக்கும் முக்கியமான இசைக் குழுக்கள் எல்லாவற்றிலும் பானு ஒக்கபாட்டை இசைத்திருக்கின்றார். இதனாலேயே இவருக்குப் பல இசைக்குழுக்களில் சிறந்த நற்பெயரும் உண்டு. இவருடைய தற்போதைய எதிர்பார்ப்புக்கள் மூன்று.

ஒன்று இசைக் கலை யாழ்ப்பாணத்தில் முக்கிய இடத்தைப் பெறமுடியாமல்உள்ளது. காரணம் ஏராளமான இசைக் குழுக்கள் இயங்குவதாகவும் இருக்கலாம். இதனால் மக்களிடத்தில் ஒரு சலிப்புத் தன்மை ஏற்பட்டிருக்கலாம். ஆகவே இந்தச்சலிப்புத்தன்மை இல்லாது இசையை அனைவரும் ரசிக்க வகை செய்வது.

இரண்டாவது, எப்போதுமே ஒரு இசைமேடையில் பாடகருக்கு இருக்கும் மதிப்பும் அந்தஸ்தும் அந்த இசைமேடையில் பின்னணி இசையமைத்துக் கொண்டிருக்கும் பக்கவாத்தியக் கலைஞர்களுக்குக் கிடைப்பதில்லை. ஒரு பாடலுக்கு கட்டாயமாகத் தேவையானது இசை; ஆனால் பாடலில்லாமல் இசையமைக்கலாம். எனவே தன்னைப் போன்ற பின்னணி இசையமைப்பாளர்கள் தங்களிடம் இருக்கும் அதீத திறமைகளால் மக்கள் மத்தியில் பிரதான ஓர் இடத்தைப் பிடிப்பதற்கானமுயற்சிகளை எடுப்பது.

இறுதியாக, இலங்கையில் எட்டுத்திக்கும் சென்று இசையமைத்த இந்த பானு ஒருதடவைகூடவெளிநாட்டுக்குச்சென்று அவர்களுடைய கச்சேரிகளில் இசையமைக்கவில்லையாம். எப்படியாவது இந்த ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்பது இவரது தற்போதைய இலக்கு. இது இன்றோ நேற்றோ பானுவுக்கு ஏற்பட்ட ஆசை அல்ல; முதன் முதல் தென்னிந்தியகலைஞர்களுக்கு கொழும்பு சென்று இசையமைத்துக் கொண்டிருக்கும்போதே இவரது மனதில் அந்த ஆசை உத்தித்ததாம். ஆனால் அதற்கான வாய்ப்பு இன்றுவரை கிட்டாமலேபோய் விட்டது. இருந்தாலும் அதனை ஒரு எட்டாக்கனி போல எண்ணாது பானு தற்போதும் அதற்காக தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்தவண்ணமே உள்ளார்.

எங்களது கலைஞர்களுக்கு நாங்களே முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றால் எங்களுக்கு இசைக் கலையில் ஈடுபாடு இல்லை என்றே அர்த்தம். எப்போதும் எம்மவருக்கு ஒரு வழக்கம் உள்ளது. அயல்நாடுகளில் இருந்து கலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்வது. இப்படியான எமது மண்ணின் மைந்தர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களையும் ஊக்குவித்தால் கலையும் வளரும் அதேவேளை எமது மண்ணில் கலைஞர்களும் வளர்வார்கள் என்பதை புத்திஜீவிகள் புரிந்துகொள்ள வேண்டும்.





செவ்வி
தர்ஷன்

# புதன்பொய்கை

வ.இ.செல்வக்குமார்,
பண்டத்தரிப்பு.

# மறையாத மாமனிதர் எம்.ஜி.ஆர்.



புரட்சி நடிகரும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 27 ஆவது நினைவு நாளை முன்னிட்டு இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.

உலகத் தமிழர்களாலும், ஈழத் தமிழர்களாலும் என்றுமே மறக்க இயலாத விதத்தில் அவர்களின் மனங்களில் வாழ்கின்ற அந்தத் தலைவர் எம்.ஜி.ஆர். அந்த மனிதருக்கு இலங்கையில் பிறந்த காரணத்துக்காக சிங்களவர்களும், மலையகத்தில் வளர்ந்ததற்காக மலையக மக்களும், ஈழத்தமிழரை இறுதிவரை நேசித்தபடியால் ஈழத்தமிழரும், தமிழகத்தில் வாழ்ந்து தமிழ் மக்களுக்கு தொண்டாற்றியதால் தமிழக மக்களும், அவரது தர்மத்தையும் வள்ளல் தன்மையையும் கண்டு ஆந்திர மக்களும், கன்னடர்களும் வியந்து பாராட்டினார்கள்; பாராட்டுகிறார்கள் என்றால் அவரென்ன சாதாரண மனிதராகவா இருக்க முடியும். மக்களின் சக்தி பெற்ற மக்கள் திலகமல்லவா?

**கலைத்துறையில்**

தமது ஏழு வயதில் கலைத்துறையில் பிரவேசித்து தனது 70 வயது வரை கலைத்துறையில் இவர் ஆற்றிய பணி அளப்பரியது. இடைப்பட்ட இந்தக் காலகட்டத்தில் இவர் சந்தித்த வேதனைகள், சோதனைகள் ஏராளம். அவற்றையெல்லாம் சாதனைகளாக்கி வாழ்ந்த சரித்திர மகான் புரட்சித் தலைவர்.

ஏழ்மையில் சிக்குண்ட எந்த ஒரு பள்ளிச் சிறுவனுக்கும் தன்னைப் போன்ற ஒரு நிலை வரக் கூடாது என்பதற்காக தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த வேளை தமது அமைச்சரவையில் 100 கோடி ரூபாய்களை ஒதுக்கினார். இந்தத் திட்டத்தை அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவும் பாராட்டின.

ஏழைச் சிறார்களுக்கு இலவச பாடப் புத்தகம், சீருடை, காலணி மற்றும் பயன்பாட்டுப் பொருள்களை வழங்கினார். பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 50 விழுக்காடாக மாற்றினார். பல இலட்சம் வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி அவர்களின் வீடுகளில் ஒளியேற்றி வைத்தார்.

வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள திருமணமாகாத பெண்களுக்கு அரச நிதி உதவியோடு திருமணம் நடத்தி வைத்ததோடு அவர்களுக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கினார்.

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 5000 கிராமங்களுக்கு பஸ் வழித்தடங்களை உருவாக்கி ஏழை, எளிய மக்களின் சிரமங்களைப் போக்கினார். இதுபோல் மீனவர், ஆதி திராவிடர், தொழிலாளர்கள், நெசவாளர், கலைஞர்கள், பள்ளிகள், மருத்து வமனைகள் என்று அனைத்து தரப்பினரும் போற்றும் வகையிலும் அனைவருக்கும் பயன் நல்கும் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார். இவரது 11 வருட ஆட்சிக்காலத்தில் இவர் செய்த மக்களுக்கான பணி ஏராளம். இவர் தமிழக மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய புரட்சித் தலைவர்.

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமை, சமூக மேம்பாட்டுக்காகவும் அவரது உடல் தளர்வுற்று இருந்த போதிலும் தன் இயலாமை காரணமாக நீட்டியிருந்த ஆதரவுக் கரத்தை விலக்கிக் கொள்ளவே இல்லை. தமது இறுதி மூச்சுவரை அப் பணிகளை செயலாற்றி வந்தார்.

அறிஞர் அண்ணாவுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கும் இடையே சில ஒற்றுமைகள் இருக்கின்றன. எம்.ஜி.ஆர். மூன்றெழுத்து, அண்ணா மூன்றெழுத்து. பிறப்பில் இருவருமே நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர்கள். நோயின் காரணமாக இருவரும் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றவர்கள். இருவரும் முதலமைச்சர் பதவியில் இருக்கும் போது இறந்தவர்கள். அண்ணா இறக்கும் முன்னர் என்.எஸ். கிருஷ்ணனின் சிலையைத் திறந்து வைத்தார். எம்.ஜி.ஆர். கடைசியாக நேரு சிலையைத் திறந்து வைத்தார். இருவரின் உடலும் மெரினா கடற்கரையில் நல்லடக்கம் செய்யப்பட்டன. அண்ணா தி.மு.க.வை உருவாக்கினார். எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வை உருவாக்கினார். அண்ணாவுக்கும் எம்.ஜி.ஆருக்கும் அருங்காட்சியகமும் உள்ளன. அண்ணா எம்.ஜி.ஆரை இதயக் கனி என்றார். எம்.ஜி.ஆர். அண்ணாவை இதய தெய்வம் என்றார். எம்.ஜி.ஆர். கடைசியாக நடித்த படம் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன். கடைசியாக பார்த்த படம் வேதம் புதிது. மொத்தம் 136 திரைப்படங்கள் நடித்துள்ளார்.

**அற்புத மாமனிதர்**

உலக அரங்கில் 75 இலட்சம் பேரால் அஞ்சலி செலுத்தப்பட்ட ஒரே தலைவர் என்ற கின்னஸ் வரலாற்றை பெற்றவர் முதல்வர், புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவருடைய, இறுதி ஊர்வலத்தில் மட்டும் 28 இலட்சம் பேர் பங்கேற்றனர். அவரது பொன்னுடலுக்கு 24.12.1987 அன்று காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரை இராஜாஜி மண்டபத்தில் 75 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அஞ்சலி செலுத்தினர். உலக வரலாற்றில் ஒரு தனி மனிதனுக்கு 75 இலட்சம் பேர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியமை, இது வரையிலும், இனிமேலும் நடந்திராத, நடக்க முடியாத மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியாகும். பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்கு 15 இலட்சம் பேர் அஞ்சலி செலுத்தினார்கள். தொலைக்காட்சி அப்போது கிடையாது. பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியாம் புரட்சித் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் மட்டும் 28 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். இது உலக வரலாறு. இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும். இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும் என்று கலையுலகில் நடித்து காவியமாகிவிட்ட, காலத்தை வென்றவரின் உலக சாதனையில், சரித்திரம் படைத்தவரின் 24.12.1987 அன்று நடந்த இறுதி நிகழ்வுகளின் பதிவுகள்.

- 338 கிலோ எடையுள்ள சந்தனப் பெட்டியில் தங்கத் தலைவரின் உடல் வைக்கப்பட்டது.
- புரட்சித் தலைவர் உடல் கேரியேஜ் என்ற பீரங்கி வண்டியில் எடுத்து வரப்பட்டது.
- 4.20 முதல் 4.40 வரை (20 மணித்துளிகள்) இராணுவ மரியாதையுடன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(இராணுவத் தலைமையில் பகல் 12 மணிமுதல் மாலை 4.40 வரை ஒப்படைக்கப்பட்டது. நல்லடக்கம் செய்யப்பட்டது)

- அரசு மரியாதை, இராணுவ மரியாதை இரண்டும் ஒருசேர செலுத்தப்பட்ட முதல்வர் புரட்சித் தலைவர் மட்டுமே.
- மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த அண்டை மாநிலங்களில் இருந்து சுமார் 10,000 இரும்புத் தொப்பி காவல்துறையினர் வரவழைக்கப்பட்டனர்.
- மக்கள் திலகத்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக காத்து நின்ற மக்கள் 04 மைல்கள் நீளத்துக்கு நின்றனர்.
- சென்னை அண்ணாசாலை முதல் ஸ்பென்சர் வரை ஒரு வரிசை, மத்திய ரயில் நிலையம் 2 வரிசை, இரண்டு பிரிவுகளாக மொத்தம் 4 மைல்கள் நீளத்துக்கு நின்றனர்.
- மாசற்ற மறவனின் வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பெண்கள் கைக் குழந்தைகளுடனும், வயதானவர்கள், ஊனமுற்றவர்கள் கூட வரிசையில் நின்றனர்.
- தமிழக வீதியெங்கும் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்தை அலங்கரித்து மக்கள் தேங்காய் உடைத்து, மாலை அணிவித்து, கற்பூரம் காண்பித்து அஞ்சலி செலுத்தினார்கள். இது உலக அளவில் எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவிலான கௌரவமாகும்.
- இந்தோனேசியாவில் 1987 டிசெம்பர் 26,27,28 நாள்களில் நடைபெறவிருந்த, சோவியத் மாநாடு தலைவரின் மறைவால் தவிர்க்கப்பட்டது.
- இதய தெய்வத்தின் இறுதி ஊர்வலம் 3,000 இராணுவ வீரர்கள் தலைமையில் மிக அமைதியாக அவர்களின் சட்டத்துக்கு உட்பட்டு இடம்பெற்றது.
- தமிழக முதல்வரின் மறைவையொட்டி தமிழகம் எங்கும் இறுதி ஊர்வலத்தைப் பார்வையிட வீதியெங்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருந்தனர். அதைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான மக்கள் இறுதி ஊர்வலக் காட்சிகளைப் பார்த்தார்கள்.
- பொன்மனச் செம்மலின் இறுதி ஊர்வலம் சென்ற இடங்களில் எல்லாம் இரண்டு பார ஊர்திகள் மலர் தூவிக் கொண்டே சென்றன. இதனால் ஊர்வலப் பாதை மஞ்சள் நிற பட்டுக் கம்பளம் விரித்தது போலக் காட்சியளித்தது.
- ஊர்வலம் சென்ற வழிகளில் எல்லாம் மஞ்சள் நிற புஸ்பக விமானம் ஒன்று மலர்களைத் தூவிக் கொண்டே சென்றது.
- ஒரு மாநில முதலமைச்சரின் மறைவுக்கு இந்தியா முழுவதும் மத்திய அரசால் விடுமுறை விடப்பட்டமை. தமிழக முதல்வரான புரட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும் தான்.
- புரட்சித் தலைவரின் மறைவுக்கு இந்தியா முழுவதும் மத்திய அரசால் தேசிய கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன.
- புரட்சித் தலைவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தச் செல்ல இலவசமாக விசேட ரயில்கள் விடப்பட்டன. திருச்சி, மதுரை, நெல்லை, தஞ்சை, சேலம், பெங்களூர் போன்ற நகரங்களிலிருந்து தென்னக ரயில்வே சிறப்பு ரயில்களை இரண்டு நாள்கள் இலவசமாக சேவையில் ஈடுபடுத்தியது.

உயர்ந்த எண்ணங்களும், உண்மையை நேசிக்கும் குணமும், உழைப்பை மதிக்கும் பண்பும் நிறைந்த உயர்ந்த மனிதர் எம்.ஜி. ஆரை நம்பியவர்கள் வீணாகிப் போனதில்லை. உதவி புரிவதிலும், உத்தமராகத் திகழும் உண்மைத் திலகம் எம்.ஜி.ஆர் மறைந்து 27 ஆண்டுகள் ஆனாலும் அவர் புகழ் என்றும் அழிவதில்லை. காடுள்ள வரை, கடல் நீருள்ளவரை, பாருள்ளவரை, தமிழ் வேருள்ளவரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நித்திய ஜீவராக வாழ்ந்து கொண்டிருப்பார்.

---

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### படும்பாடும் படுத்தும்பாடும்

"ஓ... ஹலோ... ஓம்... ஓம்... ஓம்.. சரி... சரி... ஓ" வெறும் கையை காதருகே வைத்துக்கொண்டு, தோளில் மாட்டிய றெக்ஸின் பையுடன் அங்குமிங்குமாக நடந்துவிட்டு "ஆ... கட்டாப்போச்சு" என்றபடி தோள்பையில் கைபேசியை வைத்து விட்டதாக பாவனை பண்ணியபடி சின்னஞ்சிறிசு ஒன்று வீட்டின் ஹோலிலிருந்து உள்ளே செல்கிறது. மிகைப்படுத்தப்படாத இயல்பான நடவடிக்கை போல் அந்தக் குழந்தையின் செயற்பாடு, வீட்டுக்கு வந்திருந்த விருந்தினர்களை அசர வைக்கிறது. இது பரவாயில்லை. சில குழந்தைகளின் கைகளில் பொம்மைக் கைபேசிகளும், சிலரின் கைகளில் உண்மைக் கைபேசிகளும் விளையாடுகின்றன. கைபேசிகளால் ஏற்படத்தக்க உடல், உள பாதிப்புகள் பற்றிய அறிவூட்டல்கள், ஆலோசனைகள் மட்டுமல்ல காசும் அல்லவா காற்றோடு காற்றாக அள்ளுண்டு போகிறது.

பஸ்ஸில் ஏறியவுடன் சிலரது கைகள் கைபேசிகளை எடுத்தால், இறங்கும் வரை அவர்களது விரல்கள் அவற்றை நோண்டிக் கொண்டு தானிருக்கும். மினிபஸ் சாரதிகூட ஒருகையினால் கைபேசியை காதோடு அணைத்தவாறு நடத்துநர் பக்கம் திரும்பி "சிரிபியும் இளவாலையும் ஒண்டை ஒண்டு துரத்துறாங்களாம்" என்றபடி மறுகையால் ஸ்ரேரிங்கை வளைத்து வளைத்து செலுத்துவதை பார்க்கும் பயணிகளும்; ஹெல்மெட்டில் செருகிய போனில் சுவாரஸ்யமாக கதைத்தபடி மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வருபவரை நேரெதிராக சந்திப்போரும் எங்கு கொண்டு போய் அல்லது கொண்டு வந்து செருகுவார்களோ! என்று ஏங்கிப் பதகளிப்பர். கைபேசிப் பாவனையில் விவஸ்தை கெட்டு நிற்கிறது நமது சமூகம்.

மலிந்தால் சந்தைக்கு வரும் என்பார்கள். கோலவுடை இளைஞர் சிலர் "சி.டி.எம்.ஏ.போன் ஓராயிரம் ரூபா" எனக் கூவிக் கொண்டிருந்தனர். வீதி ஓரமாக சைக்கிளில் சாய்ந்து நின்றிருந்த ஒருவர் "அடகறுமமே, உந்தப் போனுக்கு அந்த நாளிலை எவ்வளவு அலைஞ்சிருப்பன். அவற்றை, இவற்றை அனுமதி எண்டு இழுத்தடிப்புக்குப் பிறகு 7500 ரூபாவுக்கு வாங்கினது இண்டைக்கு ஒரு ஆயிரத்திலை வந்து நிக்குது" என்று பொங்கினார். இவரது வயிற்றெரிச்சலைப் புரியாமல் பக்கத்தில் நின்றவர், "அண்ணை இப்ப ஒரு ஹான்போன் வாங்க குறைஞ்சது 2500 ரூபா வேணும். எங்கட வயசுக்கு இதிலை ஒண்டை வாங்கி ஒரு றெக்ஸின் பையிலை கொண்டு திரியலாம் தானே" என்று தனது சிக்கனச் சிந்தனையை அவிழ்த்தார். "ஹலோ" படும் பாடும் படுத்தும்பாடும் பெரும்பாடுதான்.

செல்வவேலாயுதம்

# அமரர் அடையாறு கே.லக்ஷ்மணன் நினைவாக....



கலைகள் காலங்காலமாக மனிதனைச் செம்மைப் படுத்தி ஆளுமை மிக்க தனி மனிதனையும் அதனூடாக ஆளுமை நிறைந்த சமூகத்தையும் கட்டி எழுப்புகின்றன. சிந்திக்கும் உயிரியாகிய மனிதனின் சிந்தனையில் உருவான கலைப்படைப்புக்கள் எத்தனையோ அற்புதமான கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் ஊடகமாக விளங்குகின்றது. இவ்வாறு கலைகளூடாக சமூகத்தை நெறிப்படுத்துபவர்களை 'கலைஞர்கள்' என்று பெருமைப்படுத்துகின்றோம். கலை படித்தவர்கள் எல்லாம் கலைஞர்கள் ஆகிவிட முடியாது என்பது உண்மை. தான் கற்ற கலையை தன்னுடைய சுய விருத்திக்கும், தன்னைச் சார்ந்த சமூகத்தின் விருத் திக்கும், எழுச்சிக்கும் பயன்படச் செய்த சிறப்புக்குரியவர்களை அவர்களின் அனுபவத்தின் அடிப் படையில் கலைஞர் என்று பெருமைப் படுத்தி அழைக்கின்றோம். அந்த வகையில் இந்தியாவிலும், ஈழத்திலும் தமது கலைப் பணியால் சமூகத்துக்கு நற்பணியாற்றிய கலைஞர்களையும் ஆற்றிக் கொண்டிருக்கின்ற கலைஞர்களையும் கண்டிருக்கிறோம்; காண்கிறோம். இவர்களில் குறிப்பிடக்கூடியவர்களாக பரத நாட்டியத் துறைசார்ந்த கலைஞர்களும் உள்ளனர்.

"நாங்கள் நல்ல கலையைச் சமூகத்துக்கு தொடர்ந்து கொடுக்க வேண்டும். கலையைக் கற்றாலும் கற்பித்தாலும் கௌரவமாக இருந்தால் உயர்நிலையில் கலை இருக்கும்" என மதிப்புக்குரிய குரு அமரர் அடையாறு கே.லக்ஷ்மணன் 'உதயன்' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஆளுமை மிக்க கலைஞர் சமூகத்துக்கும் நாட்டியக் கலையால் சமூகப்பணியாற்றிய பெருந்தகையாக விளங்கியவர் ஆசான்(குரு)என்பதற்கும் மேலாக நாட்டியத்துறையில் மாபெரும் மேதை இவர். ஆசிரியனாக, நெறியாளனாக, நர்த்தகனாக தயாரிப்பாளனாக பல்பரிமாணங்களில் தனது விஸ்வரூபத்தை அமைதியாக வெளிக்காட்டியவர்.

அடையாறிலே ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களால் உருவாக்கப்பட்ட கலாஷேத்திராவிலே இணைந்து ருக்மணி அம்மையாரின் வழிகாட்டலில் நாட்டியப் பயிற்சியைப் பெற்ற இவர், அங்கேயே இசைப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். வாத்தியக் கருவி வரிசையில் மிருதங்கத்தில் பயிற்சியையும் நட்டுவாங்க நுட்பப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். பின்னாளில் உலகப் புகழ்பெற்ற ஆசனாக மிளிர்வதற்கு கலாஷேத்திராவே வித்திட்டது என்று பெருமைப்பட்டுக் கூறுகிறார். கலாஷேத்திராவால் உருவாக்கப்பட்ட பல மேடை நிகழ்ச்சிகள் மூலம் தனது புகழைப் பரப்பி, அதன் பின்னர் கலாஷேத்திராவிலிருந்து வெளியேறி தனக்கென ஒரு தனித்துவ அடையாளத்தைப் பொறித்தார். பரத சூடாமணி என்ற தனது நாட்டிய நிறுவனத்தினூடாக தனது தனித்துவத்தை உலகறியச் செய்தார். அதன் மூலமாக உலக நாடுகள் பலவற்றிலும் தனது கலைத் திறமையை வெளிப்படுத்தினார். அந்த வரிசையில் இவரது சிறந்த கருத்துக்களை இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் கேட்க முடிந்தது.

கலை, கடல் போன்றது, அந்தக் கடலில் கரையைத் தொடும் பெரும் கப்பலாய் விளங்கிய மேதையின் கருத்துக்களை கரையிலே தத்தளிக்கும் கட்டுமரமாய் விளங்கும் என்னாலும் கேட்க முடிந்தது. அதற்கான சந்தர்ப்பத்தை தனது புதல்வியும் தற்போதைய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய தேவந்தி சிவனேசன் (திருநந்தன்) னின் அரங்கேற்றத்தின் வாயிலாக ஏற்படுத்தித் தந்த மதிப்புக்குரிய கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள். அன்று அவர் பற்றி அறிந்ததன் பின்னரே அவரைப் பற்றிய தேடல்களை என்னால் முன்னெடுக்க முடிந்தது. இன்று அவரது உருப்படிகள் பலவற்றையும் பயிற்சியாகப் பெறும் போது அவற்றில் பொதிந்துள்ள நுட்பங்களைக் கவனிக்க முடிகிறது. குறிப்பாக அதிகமானதும், நுட்பமானதுமான கார்வைப் பிரயோகங்களும், அழகிய ஜதிச் சொற்கட்டுக்களும், பெரும்பாலும் திரிகாலங்களும் மாறி மாறி வருவதும் என்றும் அழகிய பாவப் பகுதிக்கு அழகு சேர்க்கும் விதமாக ஜதிகள் அமைந்திருக்கின்றமையைக் காணலாம். கடினமானது என்று கருதத்தக்க இவரது நாட்டிய அமைப்புக்களை நீண்டதும், கவனம் சிதறாத பயிற்சியின் மூலமாகவே இலகுவாக்கிக் கொள்ள முடியும். குறிப்பாக அலாரிப்பு, ஜதீஸ்வரம், தோடயமங்களம், மல்லாரி, ஸ்வரஜதி பஞ்சரத்னம், தில்லானா போன்ற வகை உருப்படிகளை இவரது நாட்டிய அமைப்பில் அவரது மாணவர்களாகிய ஈழத்தின் மூத்த கலைஞர்கள், இளம் மாணவர் சமூகத்திடம் கொண்டு சென்று அவர் புகழ் நாட்டும் கடமையைச் செய்யும் முறை ரீதியாக ஆற்றி வருகின்றனர்.

ஆளுமை மிக்க சமூகத்தை கட்டியெழுப்புவதில் தனது ஆடற்கலையால் பணியாற்றிய குரு லக்ஷ்மணன் ஐயா அவர்களின் கலைப்பயணம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்தச் சிறு கட்டுரை அவர் நினைவு தொடர்பான சிறு எண்ணத்தூண்டலே அவர் பற்றி எழுதும் தகுதி இல்லையாயினும், ஆசானை நினைவு கூர வேண்டிய கடமை பரதநாட்டிய துறைசார்ந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும். அந்த வகையிலேயே இந்த வருடம் ஆடி மாதம் 20 ஆம் திகதி தில்லையரசனின் திருப்பாதத்தை அடைந்த குருவை நினைவு கூரு கின்றேன்.

அ.உமாமகேஸ்வரி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.








## மாகாண மட்ட தமிழ் மொழித் தினவிழா

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண மட்ட தமிழ் மொழித் தினவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஓய்வு நிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர்களான வை.செல்வராசா, வி.இராசையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி மாணவனின் "இசையும் அசையும்", ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மாணவியின் 'பேச்சு', பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவரின் 'தனி இசை', வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவிகளின் 'நாட்டார் பாடல்', யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் 'கொழுந்து நடனம்" யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் 'வில்லுப்பாட்டு', இணுவில் மத்திய கல்லூரி மாணவிகளின் நள–தமயந்தி நாட்டிய நாடகம் ஆகியவை இடம்பெற்றன.

கல்வித் திணைக்களத்தின் 'கவின் தமிழ்' 15ஆவது நூல் வெளியீடும் இடம்பெற்றது. இறுதியாக மாகாண மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (வ–9)

# புதன்பொய்கை

# மன்னாரில் நடைபெற்ற தீம்தனனா-III

## கலாசார நிகழ்வு



















யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் இந்திய அரசின் கலாசார அமைச்சுடன் இணைந்து பல்வேறு கலாசார நிகழ்வுகளை வட மாகாணத்தில் கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது. இந்தியத் துணைத்தூதரகத்தின் இந்த முன்முயற்சியானது வடக்கு மாகாண மக்களின் கலைத்திறமைகளை செவ்வியல் நடனம் மற்றும் இசையில் ஈடுபாடுள்ள பிராந்திய கலாசார நிறுவனங்களின் ஊடாக ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டது.

இந்நிகழ்வுத் தொடரின் இவ்வருடத்துக்கான முதலாவது கலாசார நிகழ்வு கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இந்தியத் துணைத் தூதரகத்தால் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் இந்திய அரசின் கலாசார அமைச்சுடன் இணைந்து நடத்திய கலாசார நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் நடைபெற்றது.

முதலாவது கலாசார நிகழ்வு வவுனியா நிருத்திய நிகேதன நுண் கலைக் கல்லூரியுடன் இணைந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்திலும் இரண்டாவது கலாசார நிகழ்வு மன்னார் நகர மண்டபத்திலும் நடைபெற்றது.

இரண்டாவது நிகழ்வானது மன்னார் நகர மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் மன்னார் ஆயர் வண. கலாநிதி இராயப்பு ஜோசப் பிரதம விருந்தினராகவும், வடமாகாண மீன்பிடி மற்றும் போக்கு வரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். நிகழ்வுக்கு இந்திய பதில் துணைத்தூதர் எஸ்.டி.மூர்த்தி தலைமை தாங்கினார். இதுவே துணைத்தூதரகம் மன்னார் மாவட்டத்தில் ஒழுங்கு செய்த முதலாவது நிகழ்வாகும். மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றங்கள், முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் ஆகியவற்றின் 60 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பரதநாட்டிய மற்றும் நாட்டார் நடன வடிவங்களின் ஆறு உருப்படிகளை ஆற்றுகை செய்தனர். நிகழ்வானது நடனம் மற்றும் இறைஆசி வேண்டும் பரதநாட்டிய நிகழ்வுடன் ஆரம்பமாகியது.

மூன்றாவதாக அளிக்கை செய்யப்பட்டது பாரம்பரிய நாட்டார் நடன வடிவங்களில் ஒன்றான கோலாட்டமாகும். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய நடன வடிவமான கூத்து இடம்பெற்றது. இந்தக் கூத்து நடனமானது நாட்டார் மற்றும் பரத நாட்டிய ஆடல்களை உள்ளடக்கி நடன அமைப்பு செய்யப் பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து பரதநாட்டியத்தில் தில்லானா நடனம் அளிக்கை செய்யப்பட்டது.

தொடர்ந்து புத்தாக்க நடன வகையில் சுனாமி இடரின் 10ஆம் ஆண்டை நினைவுகூருமுகமாக நடன அமைப்பு செய்யப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டது. இதன்போது மீனவரின் வாழ்க்கையையும் அவர்களின் வாழ்வில் சுனாமியின் தாக்கத்தையும் இசை மற்றும் நடனத்தின் ஊடாக நடனக் கலைஞர்கள் வெளிப்படுத்

## 'புயல் மழைக்குப் பின்னரான பொழுது'

## கவிதை நூல் அறிமுகவிழா

கவிஞர் த.ஜெயசீலன் எழுதிய 'புயல் மழைக்குப் பின்னரான பொழுது' என்ற கவிதை நூல் அறிமுக விழா பருத்தித்துறை நாலாம் குறுக்குத்தெருவில் உள்ள ராஜாராணி சேவை இல்ல மண்டபத்தில் பிரபல எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் ஆசியுரையை சிவஸ்ரீ வே. தியானந்தராஜக் குருக்களும் வரவேற்புரையை கலைப்பரிதி யோ.இருதயராஜாவும் வாழ்த்துரைகளை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரனும் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் வழங்கினார்கள்.

அறிமுக உரையை சாஹித்திய ரத்னா தெணியான், வெளியீட்டுரையை கவிஞர்இ.ச.முரளீதரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். முதற்பிரதிரையை பருத்தித்துறை நகரசபை உபதலைவர் சி.பத்மநாதன் பெற்றுக்கொண்டார்.

ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா, கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.கலாமணி ஆகியோர் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை கவிஞர் த.ஜெயசீலன் வழங்கினார்.

(வ-23-173)

24 DEC 2014

# புதன்பொய்கை

## விடுகதைகள்

- அவனுக்கு ஒரு முறை பல் விழுந்தால் மறு முறை முளைக்காது அவன் யார்?
  சீப்பு
- அன்றாடம் தீப்பிடிக்கும் மாளிகையில் அறு சுவை விருந்து கிடைக்கிறது அது எது?
  அடுப்பு
- அள்ளவும் கிள்ளவும் முடியாது அது எது?
  காற்று
- அந்தியில் வருவான் அதிகாலையில் மறை வான் அவன் யார்?
  இருள்
- அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமி யாகும் அது என்ன?
  தலைமுடி
- முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தை பளிச் சென்று காட்டுவான் அவன் யார்?
  கண்ணாடி
- அம்மா படுத்திருக்க மகள் ஓடிக் கொண் டிருப்பாள் அவர்கள் யார்?
  அம்மி, குளவி
- அண்ணன் தம்பி அடுத்தடுத்த வீட்டுக்காரர் ஒருத்தர் வீட்டுக்கு மற்றவர் போகமுடி யாது அது எது?
  தண்டவாளம்
- ஆத்தாள் தெருவிலே மகள் கொலுவிலே அவர்கள் யார்?
  வைக்கோல், நெல்
- தீக்குளித்து சாகிறவன் காற்றுக் குளித்தும் சாவான் அவன் யார்?
  கற்பூரம்
- அந்தரத்தில் செம்பும் நீரும் தொங்குகிறது அது என்ன?
  இளநீர்

யோ.விதுஷன்,
விவேகானந்தா வித்தியாசாலை,
மானிப்பாய்

## மாற்றத்தை ஏற்படுத்திய ஐயனார்



ஓர் ஊரிலே விஸ்வநாதன் என்ற பெரிய பணக்காரர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு ஏராளமான நிலம் சொந்தமாக இருந்தது. அதில் பல வகையான பயிர்களையும் அவர் பயிரிட்டு வந்தார். அத்துடன் நூற்றுக்கணக்கான பசுமாடுகளையும் பட்டிகளில் வளர்த்து அவற்றிலிருந்து பாலைப் பெற்று விற்பனை செய்து வந்தார். அவரிடம் பலர் வேலை செய்து வந்தனர். ஆனால் மிகக் குறைவான ஊதியமே அவர் களுக்கு வழங்கப்பட்டதால் வறுமையான நிலையில் அவர்கள் காணப்பட்டனர். ஆனால் இவர்களுக்கு உதவும் எண்ணம் அந்தப் பணக்காரரிடம் ஒரு போதுமே ஏற்படவில்லை.

வழக்கம் போல அந்த ஊரில் அமைந்துள்ள ஐயனார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா வந்தது. இதனால் ஊரே திருவிழாக் கோலம் பூண்டது. ஊரில் உள்ள வர்கள் புதிய ஆடைகள் வாங்குவதில் ஈடுபட்டிருந் தனர். ஆனால் வசதி குறைந்தவர்கள் ஆடைகளை வாங்க முடியாது கவலையில் ஆழ்ந்திருந்தனர். அந்தப் பணக்காரரிடம் வேலை செய்தவர்களும் இவர்களில் அடங்கியிருந்தனர். அன்றாடம் உண வுக்கே கஷ்டப்படும் அவர்களால் புதிய ஆடைகளை எவ்வாறு வாங்க முடியும்?

திருவிழாவின் முதல் நாள் உபயம் அந்தப் பணக்காரருக்கு என்பதால் அவர் தமது பெருமையை ஊரிலுள்ள வர்களுக்குக் காட்டுவதற்காக பெரும் பணத்தைச் செலவிடுவதற்குத் தயா ரானார். ஆலயத்தின் தேவைகளுக் கெனப் பெருந்தொகையான பாலை ஒதுக்கி வைக்கு மாறு அவர் தனது வேலைக்காரர்களிடம் கூறினார். அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டார். தனது மனைவி பிள்ளை களுக்கு விலையுயர்ந்த ஆடைகளை பக்கத்திலுள்ள நகரத்துக்குச் சென்று வாங்கிக் கொடுத்தார். தாமும் தமது அந்தஸ்துக்கு ஏற்ப உடைகளை வாங்கினார்.

திருவிழாவின் முதல் நாள் எல்லா ஏற்பாடுகளையும் மேற்பார்வை செய்த பின்னர் அவர் உறங்குவதற்குச் சென்றார். அவர் உறங்கிய சிறிது நேரத்துக்குப் பின்னர் அவரது கனவில் ஐயனார் தோன்றினார். 'விஸ்வநாதா ஏழைகளுக்கு உதவாத உனது பணம் உபயோகமற்றது. ஏழைகள் கண்ணீர் வடிக்கும் போது எனது ஆலயத்தில் நீ சமர்ப்பிக்கும் எதனையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். முத லில் ஏழைகளுக்கு உதவி செய்துவிட்டு அதன் பின்னர் என்னிடம் வா' என்று கூறிவிட்டு ஐயனார் மறைந்து போனார். திடுக்கிட்டு எழுந்து விஸ்வநாதனின் உடல் வியர்வையில் குளித்தது. அப்போது தான் தான் விட்ட தவறுகள் அவருக்குப் புரிந்தன. விடிந்ததும் முதல் வேலையாகத் தன்னிடம் வேலை பார்ப்பவர்களை அழைத்து அவர்களிடம் வேண் டிய பணத்தைக் கொடுத்தார். தேவையானவற்றை வாங்குமாறும் கூறினார். மேலும் இந்த மாதத்திலிருந்து அவர்களது ஊதியத்தை உயர்த்தப் போவதாகவும் கூறினார். பின்னர் அந்த ஊரில் வசிக்கும் ஏழைகளுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்தார். அவரின் இந்தத் திடீர் மாற்றத்துக்கான காரணத்தை அந்த ஊர் மக்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

சு.நிசானி,
சுன்னாகம்.

## குடை



அ.ஆதித்தன்.
யாழ்ப்பாணக் கல்லூரி.

வண்ண வண்ணக் குடைகள்
வகை வகையான குடைகள்
நிழலைத் தரும் குடைகள்
நிமிர்ந்து விரிந்த குடைகள்

## அம்மாவின் அன்பு



- பத்து மாதங்களாக சுமந்து பல கஷ்ட துன்பங்களை அனுபவித்து எம்மை உலகுக்கு கொண்டு வரும் தாயின் அன்பு உலகிலே மிகப் பெரியதாகும்.
- எமது தாயின் அன்பு அளவில்லாதது.
- எமக்கு இந்த உலகிலே புதுவாழ்வு அளித்த வரும் அவரேதான்.
- உலகைக் காட்டியவரும் தாய் ஆவார்.
- நாம் சிறு வயதில் இருந்த போது எமக்கு நிலாச் சோறு காட்டி உண்ண வைப்ப வரும் தாய் ஆவார்.
- எமது தாயின் அன்பு உலகிலே பெரிய தொன்றாகும்.
- மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வரிகளில் எமது அன்பான தாய் தான் முதல் இடத்தை வசிக்கின்றார்.
- எமக்கு இந்த உலகில் வாழ்வளித்தவரும் தாய் ஆவார்.

ஆகவே தாயின் அன்பு உலகத்திலே மிகப் பெரியதொன்றாக விளங்குகின்றது.


தெ.கஜப்பிரியன்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்



சு.றெமிங்கன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி



ஜெ.கஜப்பிரதாப்,
யாழ். இந்துக் கல்லூரி





ச.சேயோன்,
யாழ்ப்பாணக் கல்லூரி

# புதன்பொய்கை



## தீவகம் வடக்கு பிரதேச செயலகம் நடத்திய கலாசார விழா

தீவகம்வடக்கு(ஊர்காவற்றுறை) பிரதேச செயலகத்தின் கலா சார விழா கடந்த வெள்ளிக் கிழமை அனலை தீவு ஐயனார் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் திருமதி ஏ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடை பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைவர் ம.ஜெயகாந்தனும் கலந்துகொண்டனர்.

பிரதேசத்தில் கலைத்துறையில் நீண்டகாலம் சேவையாற்றிய 9 கலைஞர்களுக்கு கலை விருது என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (வ-9)









## மன்னாரில் நடைபெற்ற முப்பெரும் வெளியீடு

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் (கலையருவி) ஏற்பாட்டில் முப்பெரும் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குடும்ப ஆண்டை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வெளியீடுகள் குடும்ப வாழ்வை மையப்படுத்தி அதன் அடிப்படையில் மூன்று வெளியீடுகள் இடம்பெற்றன. இதன்படி 'உறவின் உரசல்கள்' நூல் வெளியீடு, 'குடும்பக் குவலயம்' பாடல் இறுவட்டு, 'நான்.அம்மா.அப்பா' குறுந்திரைப்படம் என்பன வெளியிட்டு வைக்கப்பட்டன.

முப்பெரும் வெளியீட்டு விழாவில் வெளியீட்டை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட ஆயர் இரா.யோசேப்பு வெளியிட்டு வைத்தார்.

இந்தநிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். குறித்த முப்பெரும் வெளியீட்டை உருவாக்கிய கலைஞர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இதன்போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.










# புதன்பொய்கை

## சிறப்புற நடைபெற்ற வலிகாமம் வலய சாதனையாளர் பெருவிழா


எம்.பி.ஸ்ரீந்திரன்,
I.S.A வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், வலிகாமம் வலய உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது சேவைக்காலத்தில் மறக்க முடியாத மகிழ்ச்சி பொங்கும் நாளாக விளங்கியுள்ளது என்றால் அது மிகையன்று.

ஆம்; இந்தத் தினம் இதுவரை காலமும் இந்தப் பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த கல்விக் கலங்கரை விளக்குகளான அதிபர்கள், ஆசிரியர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நாள். இவர்களின் வாழ்வின் பொன்னான நன்னாள். வாழ்வில் மறக்க முடியாத இன்பநாள்.

இத்தகைய ஒரு பெருமையை முதன் முதலாக இந்த வலயத்தில் ஏற்படுத்திக் காட்டிய பெருமைக்குரியவராக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா விளங்குகிறார். இது வலய உத்தியோகத்தர்களுக்கு மட்டுமன்றி இந்தப் பிரதேச கல்விச் சமூகத்தவர்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இதுவரை காலமும் இந்த வலயத்தில் நடைபெற்றிராத இந்தச் சாதனையாளர் பெரு விழாவை நன்கு திட்டமிட்டு, வலய ஊழியர்கள் அனைவரையும், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் ஒன்றிணைத்து வெகு சிறப்பாக நடத்தியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.



சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வலயப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்தப் பெருவிழாவுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுடன் வட மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஏனைய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எனப் பலரும் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தமை விழாவுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருந்தது.

அரங்கு நிறைந்த சபையோர் மத்தியிலும் கல்விப் புலம் சார் சான்றோர்கள் மத்தியிலும் கல்வியில் சாதனை படைத்த 13 அதிபர்களும் 40 ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் 40 இடைநிலை வகுப்பு ஆசிரியர்களும், 20 க.பொ.த. உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர். 10 சிறந்த பாடசாலைகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. சிறந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பதக்கம் அணிவிக்கப்பட்டு சாதனையாளர் சான்றிதழ் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலை அதிபர்களும் சாதனையாளருக்கான கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சிறந்த பத்துப் பாடசாலைகளாக இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம், உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை என்பன தெரிவு செய்யப்பட்டு சாதனையாளர் விருதுகள் வழங்கப் பட்டன.

சிறந்த பத்து அதிபர்களாக à . ¼ சுனாநிதி நோயல் அரசரத்தினம் விமலேந்திரன், வ.ஸ்ரீகாந்த சர்மா, இ.ஈஸ்வரதாசன், சி.மனோகரன், சு.கணேசதாசன், ஜோசப் எட்வேட் பங்கராசா, ஆ.பேரின்பநாயகம், திருமதி சி.சுந்தரபாரதி, திருமதி என்.சந்திரகுமார், கு.ரவீந்திரன், பொ.தயானந்தன், செல்வி ஜெயராணி நாகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தச் சாதனையாளர் கௌரவிப்புப் பெருவிழா வலிகாமம் கல்வி வலய வரலாற்றில் என்றுமே இடம்பெற்றிருக்காத அளவுக்கு வெகு சிறப்பாக அமைந்திருந்தது. விருந்தினர்களை மாலை அணிவித்து வரவேற்றது முதற்கொண்டு மங்கல விளக்கேற்றல், திருமுறை ஓதுதல், ஆசிரியர் கீதம் இசைத்தல், வரவேற்பு நடனம், செம்பு நடனம் முதலான நிகழ்வுகள் திட்டமிட்டவாறு வெகு கச்சிதமாக இடம் பெற்றன. வலிகாமம் கல்வி வலய சங்கீத ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து இசைத்த ஆசிரிய கீதம் அனைத்து ஆசிரியர்களினதும் பாராட்டைப் பெற்றது. விருந்தினர்களை வரவேற்கும் பொருட்டு இணுவில் இந்துக் கல்லூரி மாணவிகளாலும், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவிகளாலும் ஆடப்பட்ட நடனங்கள் விருந்தினர்களின் உள்ளங்களைக் கொள்ளையடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளரின் உரை திறமையான வலயத்தின் சாதனைகளை எடுத்துக் கூறுவதாகவும், வலயத்தின் பௌதீக வளத் தேவையை அமைச்சரிடம் கோரிக்கையாக முன்வைப்பதாகவும், வலிகாமம் வலயப் பிரதேச பெற்றோர்களின் குடும்பப் பின்னணியை விளக்குவதாகவும் மிக இரத்தினச் சுருக்கமாக அமைந்திருந்தது. இது அனைவரது கவனத்தையும் ஈர்த்து சபையோரின் பாராட்டைப் பெற்றதாகவும் இருந்தது.

மேலும் விருந்தினர் உரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஆற்றப்பட்ட உரையும் மிக இரத்தினச் சுருக்கமாகவும் தலைவரின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு பதிலளிப்பதாகவும் அமைந்திருந்தன.

உரையைத் தொடர்ந்து திட்டமிட்டவாறு வலயப் பணிப்பாளரினாலும் அமைச்சரினாலும் கல்வி அமைச்சின் செயலாளரினாலும் அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டமை விழாவின் உச்ச நிகழ்வாக அமைந்து அனைவரதும் பாராட்டைப் பெற்றது.

இந்த விழாவில் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டமையானது அவர்கள் தங்கள் சேவையைத் தொடர்ந்தும் வினைத்திறனுடன் ஆற்றி இந்தப் பிரதேச கல்வி வளர்ச்சியை மேன்மேலும் வளர்த்தெடுக்க உற்சாகம் ஊட்டுவதாக அமைந்துள்ளது. சாதனையாளர்கள் சாதிக்கும் போதே பாராட்டிக் கௌரவப்படுத்துவது சாலச் சிறந்தது என்ற தத்துவத்தை உணர்ந்து இந்தப் பெரு விழாவை எடுத்திருந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களும், உத்தியோகத்தர்களும் போற்றுதற்குரியவர்கள் என்பதே இந்த விழாவை கண்டுகளித்த அனைவரதும் அபிப்பிராயமாக இருந்தது.

மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்த விழாவில் ஒரு சில குறைகளையும் அவதானிக்க முடிந்தது. தமிழர் பாரம்பரியத்தில் விழாக்களின் அடையாளச் சின்னங்களாக விளங்குபவை மாவிலை, தோரணம், வாழை என்பனவாகும். இந்தச் சாதனையாளர் விழாவில் இவை புறக்கணிக்கப்பட்டோ அல்லது தவிர்க்கப்பட்டோ இருந்தமை, பாரம்பரியங்கள் பண்பாடுகள் நிறைந்த இராமநாதன் கல்லூரியில் மிகப் பெரிய குறைபாடாகவும் விருந்தினர்கள், பார்வையாளர்களை மனம் சுருங்க வைத்ததையும் அவர்களின் பேச்சுக்களிலிருந்து அறிய முடிந்துள்ளது.

## திரிபு படுத்துதல் விமர்சனமல்ல

கண – மகேஸ்வரனின் "நுனிப்புல் மேய்ந்த விமர்சனம்" என்னும் தலைப்பிலான சிறு குறிப்புகளை (17.12.2014) புதன்பொய்கையில் பார்த்தேன். நீண்ட கால அறிமுகம் உண்டாயினும் நெருங்கிப் புழங்கி இருக்கவில்லை. அதனால் என்னுடைய விமர்சனப் பார்வை பற்றி அவர் அறிந்திருக்கவும் நியாயமில்லை.

பரிசு பெற்ற 10 சிறுகதைகள், 10 கவிதைகள் பற்றி எழுதுவதற்கு தனித் தனியாகவன்றி, ஒருவரே இரண்டையும் எழுதக் கூடியதாக இருந்ததால் 'உதயன்' ஆசிரியர் என்னிடம் அந்தப் பணியை ஒப்படைத்து இருந்தார். ஒவ்வொன்றையும் நீட்டி முழங்கப்போனால் அதே பெருந்தொடராக அரை ஆண்டுகளை விழுங்கி விடும். ஆக ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிதாய் நுனிப்புல் மேயவே முடிந்தது. நுனிப்புல் மேய்ந்ததையே தாங்கிக் கொள்ள முடியாத கண – மகேஸ்வரனால் ஆழக்கடித்து மேய்ந்திருந்தால் தாங்கவா முடியும்? இருநூறோ, இருபதோ விருட்சம் எனத் தகுதிபெற இத்தனை ஆண்டுகள் வேணுமெண்ட தாவரவியல் கல்வியை நான் பெற்றிருக்கவில்லை. கதையின் கை எழுத்துப் பிரதியை வைத்து விமர்சனத்தை எழுதவுமில்லை. பத்திரிகையில் வெளிவந்ததே என்பார்வைக்கு உட்பட்டது. அதில் அஃறிணைப் பொருள்கள் பேசமாட்டா; உருவகம் என்றால் அஃறிணைப் பொருள்கள் மட்டுமே என்பனதான் என அவர் சொல்லியுள்ளமை. விந்தையாகவே இருக்கிறது.

கண– மகேஸ்வரனுக்கு மட்டும் என்றில்லாமல் இந்தச் சிறு குறிப்பை வாசிக்கக் கிடைக்கும் இளம் படைப்பாளிகளுக்கும் பயன்படுமென்பதால் உருவகம் என்பதைப் பற்றிக் கூறலாம்.

மனிதப் பாத்திரங்களைக் கொண்டே உருவகக் கதை செய்யலாம். கதாசிரியர் கூறும் கதை வாசகனின் மனதில் உருவமொன்றை அகத்துள் படியச் செய்யும் பாணி உருவகமாகும். 'வீதியோரப் புளியமரம்' பற்றி விரிவாகப் பார்க்க என்ன இருக்கிறது? ஒரு தடவைக்கு இரு தடவை பாராமல் எழுதப் புக முடியாதென்பதும், அவருக்குக் கவலை அளிக்கும் ஊக்குவிப்பைச் செய்யும் 'உதயன்' நிறுவனத்தையே பரமலிங்கத்தின் கருத்துகள் பாதிப்படையவைக்கின்றதென்பதும் ஒரு கோப்பை சோற்றுள் முழுப்பூசணிக்காயை மறைக்க எடுக்கும் பிரயத்தனமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? கண– மகேஸ்வரன் இறுதியில் தனக்குதவியாக 'சுஜாதாவை பிணக் குழியில் இருந்து தூக்கி நிறுத்திக் கூறிய கருத்தும் பாரதூரமான ஒன்றைக் கூறுகிறது. சாதிகளைச் சமூகத்தில் இருந்து அகற்ற வேணுமென்ற நவீன சிந்தனையைக் குழிதோண்டிப் புதைத்துள்ளது.

தேவி பரமலிங்கம்

## பூமியில் உயிர் வாழ்க்கை பால்வெளி அண்டத்தின் வேறு ஏதேனும் பாகத்தில் இருந்து வந்திருக்கலாம்

பால்வெளி அண்டத்துக்கு உள்ளே உள்ள வேறு ஏதேனும் பாகத்தில் இருந்து பூமியில் உயிர் வாழ்க்கைக்கான கட்டமைப்புக்கள் வந்திருக்கலாம் என்று புதிய ஆதாரத்தின் மூலம் ஊகிக்கப்படுகின்றது.

நியூயோர்க்கின் கோர்னெல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நமது அண்டத்தின் நட்சத்திரக் கட்டமைப்புக்களுக்கு இடையே புதிய நட்சத்திரம் ஒன்று தோன்றும் பகுதியில் உயிர் வாழ்க்கைக்கான மூலாதாரத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

அதாவது பூமியில் இருந்து 27 000 ஒளி வருடங்கள் தொலைவில் பால்வெளி அண்டத்தின் மத்தியில் உயிர் வாழ்க்கைக்கு அவசியமான காபன் மூலக்கூறுகளான ஐசோப்ரொப்பைல் சையனைட் என்ற சிக்கலான மூலகம் இருப்பதை அவதானித்துள்ளனர். இதன் மூலம் உயிர் வாழ்க்கைக்கு அவசியமான மூலக்கூறுகள் பூமிக்கு இதுபோன்ற நட்சத்திரங்கள் தோன்றும் இடத்தில் இருந்து ஏதேனும் ஓர் செயற்பாட்டின் ஊடாக வந்திருக்கலாம் என்று ஊகித்துள்ளனர். உதாரணமாக விண்கற்கள் மூலம் வந்திருக்கலாம் என்றும் நம்பப் படுகின்றது. இந்தக்கண்டுபிடிப்பானது சிலி நாட்டில் அட்டகமா பாலைவனத்திலுள்ள அல்மா தொலைநோக்கி மூலம் பெறப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது.

■ தஞ்சாவூர்க்கவிராயர்

# தொட்டால் மனம் மலரும்



உலகிலேயே உணர்வுகளின் அடிப்படையில் உயிர்களை வகைப்படுத்தியது தமிழின் இலக்கண நூலான தொல்காப்பியம் மட்டுமே. 'உற்றறிவதுவே ஓரறிவுயிரே' என்கிறது தொல்காப்பியம். அதாவது, ஓர் அறிவு உயிருக்கு தொடுதல் உணர்வு மட்டுமே உண்டு.

ஆகவே, ஓர் அறிவு உயிர்களான மரம் செடி கொடிகளோடு உரையாட வேண்டும் எனில் அவற்றைத் தொட்டுத்தான் பேச வேண்டும். மரங்களைத் தொட்டுத் தழுவி நோய் நீக்குவதை ஒரு சிகிச்சை முறையாகவே சித்த மருத்துவம் கூறுகிறது.

மேலை நாடுகளில் தொடு சிகிச்சை உடல் மற்றும் மனச் சிக்கல்களுக்கான மருத்துவ முறையாக வளர்ந்துள்ளது. மியாமி பல்கலைக்கழகத்தில் தொடுகை ஆராய்ச்சி நிறுவனம் இது குறித்த ஆய்வில் ஈடுபட்டு வருகிறது.


கேட்கும் திறனும் கண் பார்வையும் பிறவியிலேயே இல்லாத ஹெலன் கெல்லர் தொட்டுத் தொட்டுத்தான் எழுத்துக்களை வாசித்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரை தொட்டால் மலரும் பூக்களாக சொற்கள் இருந்திருக்கின்றன.

சின்னஞ்சிறு இலைகளை விரித்தபடி நிற்கும் செடி ஒன்று – நமது விரல்கள் தொட்ட மாத்திரத்தில் அதன் இலைகள் மடங்கி மூடிக் கொள்கின்றன. இந்தச் செடிக்கு 'தொட்டாற்சிணுங்கி' என்று பெயர் வைத்தவன் ஒரு கவிஞனாகத்தான் இருக்க முடியும்.

தூரத்தில் தரையைத் தொடுவதுபோல் தோற்றம் தரும். தொடவே முடியாத வானத்தின் பெயர் 'தொடுவானம்'! இதுவும் அழகான சொல்லாட்சிதானே?

எமது 2 கன்னங்களையும் தொட்டுத் தடவி திருஷ்டி கழிக்கும் அம்மாவின் தொடுகைக்கு இணையான ஆசீர்வாதத்தை வேறெவரால் தந்துவிட முடியும்?

மகாபாரதத்தில் திருதராட்டிரன் மனைவி காந்தாரி துரியோதனின் உடம்பெல்லாம் தொட்டுத் தடவினால் அவனை யாராலும்



கொல்ல முடியாது. கண்ணிரண்டையும் கறுப்புத் துணியால் கட்டியிருக்கும் காந்தாரிக்கு மகன் இடுப்பின் கீழ் அணிந்திருந்த ஆடை தெரியவில்லை. அவளால் தொட முடியாத அந்த தொடைப் பகுதியை கிருஷ்ணன் சைகை காட்ட பீமன் அடித்து வீழ்த்தியதாக கதை உண்டு. அன்னையின் தொடுகை எத்துணை ஆற்றல் மிக்கது என்பதை இது உணர்த்துகிறது.

இராமாயணத்தில் இராமபிரான் இலங்கைக்கு பாலம் அமைப்பதில் உதவிய அணிலின் கதை நாம் அறிந்ததுதான். இராமபிரான் அணிலை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்ததுதான் அதன் முதுகில் உள்ள மூன்று கோடுகள் என்று சொல்வது உண்டு. அனுமன் கடலைத் தாண்டி இருக்கலாம். ஆனால் அன்பு தலைமுறைகளைத் தாண்டக் கூடியது என்பதே இக்கதையின் செய்தி. கணவன் மீது கோபம் கொண்ட போது, 'என்னைத் தொடக்கூடாது' என்று



கட்டளையிட்டாள் திருநீலகண்டரின் மனைவி என்பது ஒரு கதை.

ஏழைத் தாய் குழந்தைக்குச் சோறூட்டுகிறாள். தொட்டுக்கொள்ள காக்கையும் குருவியும்! இதில் உள்ள கவித்துவச் சிந்தனை ஒருபுறமிருக்க சாப்பாட்டுக்கு தொட்டுக்கொள்ள துணைக் கறியாக உள்ள பதார்த்தங்களை 'தொட்டுக்கை' என்று குறிப்பிடும் சொல் மரபு உண்டு.

உடம்பெல்லாம் புண்ணும் சீழுமாய், வீதியோரம் விடப்பட்ட தொழுநோயாளிகளைத் தொட்டுத் தூக்கி அவர்கள் உடம்பைத் துடைத்து பணிவிடை செய்து பாதுகாத்ததால் அன்னை தெரசாவை புனிதர் நிலைக்கு உயர்த்தி வணங்க வைத்தது வத்திக்கான்!

குழந்தைகள் எம்மைத் தொடும்போது ஏற்படும் பரவச உணர்வை இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும் மெய்யுடை அடிசில் மெய் பட விதிர்த்தும் மயக்குறு மக்கள் இல்லோர்க்கு பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே...' என்று புறநானூற்றுப் பாடல் கூறுகிறது. மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்' என்கிறார் திருவள்ளுவர்.

குழந்தைகளை தாய்மார்கள் அடிக்கடி தொடுவதால் வளர்ச்சிக்குத் தேவையான ஓமோன்கள் கூடுதலாக சுரப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது போலவே நோயாளிகளைத் தொட்டு உரையாடும் போது அவர்களுக்கு நோயின் தாக்கம் பெரிதும் குறைவதாகவும் ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. பாரதி கடவுளைக் கண்களால் காண மட்டும் விரும்பவில்லை. விரலால் தீண்டவும் விரும்பினான். அதனால்தான் 'தீக்குள் விரலை வைத்தால், உனைத்தீண்டுமின்பம்தோன்றுதடா நந்தலாலா' என்று பாடினான்.

சிறுவயதில் வீடுகளில் ஏற்றப்படும் குத்துவிளக்கின் சுடருக்குள் விரல் நீட்டும் விளையாட்டு நினைவுக்கு வருகிறதா? அந்தச் சுடருக்குள் நுழையும் விரலை தீ செல்லமாகச் சுடும். அதுதான் கடவுள் என்று குதூகலித்து கைகொட்டிச் சிரிக்கிறான் பாரதி குழந்தை போலே!

அண்மையில் ஒரு பிரம்மாண்ட அணு வெடிப்புச் சோதனை முடிவில் கடவுள் துகளைக் கண்டுபிடித்து விட்டதாக விஞ்ஞானிகள் அறிவித்தபோது கடவுளை ஏறத்தாழ தொட்டுவிட்டதாகவே அறிவுலகம் பெருமைப்பட்டுக் கொண்டது.

வானத்தில் கோடிக்கணக்கான கிலோமீற்றர்கள் பயணிக்கும் விண்கல விரல்களால் பிரபஞ்சம் எங்கும் கடவுளைத் தேடித் துழாவ ஆரம்பித்து விட்டான் மனிதன். பாவம் அவன் படுத்திருப்பது கடவுளின் மடி என்று அறிந்தானில்லை.

தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும்என்றுஆசைப்பட்டமைதாஸின்கதையை மறக்க முடியுமா? உண்ணும் உணவும் ஆசை மகளும் கூட தான் தொட்டதனால் பொன்னாகிப் போனதும்தான் அவனுக்குப் புத்தி வந்தது!

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மனசுக்குள் தமது அன்புக்குரியவர் தன்னைத் தொட வேண்டும் என்ற ஏக்கம் இருந்து கொண்டே இருக்கிறது. தொடுங்கள். தழுவிக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களோடு உடலளவில் நெருங்கி இருங்கள். அங்கே புரிதல் இயல்பாகி விடும். வார்த்தைகளே தேவை இல்லாத வாத்சல்யம் உறவுகளுக்கு உயிர் தருகிறது. பாலியல் சீண்டல்கள் அதிகரித்துவிட்ட இன்றைய சூழலில் எதிர்பாலினத்தவர் ஒருவருக்கு ஒருவர் சாதாரணமாகத் தொடவே அஞ்சும் நிலைதான் உள்ளது.

அந்தக் காலத்து திரைப்படங்களில் காதல் காட்சிகளைப் பார்த்திருப்பீர்கள். காதலன் காதலியைத் தொடுவது அபூர்வமாகவே இருக்கும். அப்படித் தொட்டாலும் அதில் விரசம் இருக்காது.

திரைப்படங்களில் வெளிப்படுத்தப்பட்ட ஒழுக்கம் சமூக உணர்வுகளிலும் மேலோங்கி இருந்தது. அந்தக் காலத்தில் பொது இடங்களில் ஆண்கள் – கணவனாகவே இருந்தாலும் – தங்களைத் தொட்டுப் பேசுவதை பெண்கள் அனுமதிப்பது கிடையாது. அது ஒருவித பண்பாட்டுச் சீர்மை. படித்தவர்களைவிட பாமரர்களே இதனைத் தீவிரமாகப் பின்பற்றினர். ஆனால், இன்று மெத்தப்படித்த மேதாவிகள் கேரளாவிலும், தமிழகத்தின் குறிப்பிட்டதொரு பகுதியிலும் 'இளமைத்திருவிழா' என்ற பெயரில் அரங்கேற்றிய வக்கிரக் காட்சிகள் தொலைக்காட்சி ஊடகங்களில் காண்பிக்கப்பட்ட போது அது விரசத்தின் உச்சமாக இருந்தது. தொடுதலும், தழுவுதலும், முத்தமிடுதலும் பொது இடத்தில் இளமையின் சுதந்திரமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று இளைஞர்களில் ஒருசாரார் முழக்கமிடுகின்றனர். தொடுதலின் வண்ணங்கள் திசைமாறுகின்றன. மண்ணின் மணம் காப்போம்; மானத்தையும்தான்!

